Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් ஜூலை 09-15, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 364

## தேர்தலுக்குப் பின் தீர்வா? தீர்வுக்குப் பின் தேர்தலா?



## பிரசவம் எப்போது? கண்டறிய அட்டவணை

## உலகப் பெரும் பணக்காரர்கள்

## முந்துவானா

## பிரபல நடிகையின் தற்கொலை முயற்சி

# முரசம்

## முடிவெடுப்பது யார்?

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

பொதுத்தேர்தலுக்கான
காலம் நெருங்கிவிட்ட
கடைசிக் கட்டத்தில்
இனப்பிரச்சனையின்
அரசியல் தீர்வுக்கான
அவசரப்
பேச்சுவார்த்தைகள்
விழுந்தடித்துக்கொண்டு
நடைபெறுகின்றன.

தீர்வுகளுக்கான
தீர்மானங்கள்,
அப்பக் கடையில்
சுடச்சுடச் சுட்டுத்தரும்
அப்பங்கள் போல
ஆவிபறக்க வந்து
தட்டில் விழுகின்றன.

இவற்றையெல்லாம்
பார்க்கும்போது,
எங்கிருந்து வந்தது இந்த
எந்திர வேகமென
மூக்கில் விரலைவைத்து
வியக்கத் தோன்றுகிறது.

இந்த வேகத்தில்
ஐந்து சதவீதமாவது
ஆரம்பத்திலேயே
காட்டியிருந்தால்,
இந்த அரசாங்கத்தால்
எப்போதோ ஒரு
தீர்வைத் தந்திருக்க
முடியுமே'யென
எண்ணவும் வைக்கிறது.

அரசாங்கமும்
எதிர்க்கட்சியும்
எண்பது சதவீதமான
விடயங்களில்
இணக்கம்
கண்டுள்ளனவென்றும்
பத்திரிகைகளில்
பீற்றிக்
கொள்ளப்படுகிறது.
இவை யாவும் இவ்வளவு
அவசர அவசரமாய்
நடப்பதானது
தேர்தலுக்கு முன்னர்
தீர்வைக் கண்டுவிட
நிகழும் முயற்சியானால்,
அது கூடப்
பிரச்சனையில்லை.
அவசரமாகச்
சுட்டாலென்ன,
ஆறுதலாகச்
சுட்டாலென்ன,
சுட்டது அப்பமாக
வரவேண்டும்
என்பது தான் இங்கு
முக்கிய விடயம்.
பிரதான
சிங்களக் கட்சிகளுக்குள்
இணக்கம் வருவது
நல்ல விடயம் தான்.

ஏனெனில் இதுவரை
ஒருகட்சி உடன்பட்டால்
மறுகட்சி எதிர்ப்பதே
வரலாறாக இருந்தது.

இருந்தபோதிலும்
முக்கியமான விடயம்
யாதெனில்
இந்தத் தீர்வு
சிங்கள மக்களுக்காகவே
ஆராயப்படும் தீர்வல்ல
என்பதை
மனங்கொள்ள வேண்டும்.
தமிழ்பேசும்
மக்களுக்காகவே
பிரதானமாக
ஆராயப்படுவது
இந்தத் தீர்வு.

அதை, சிங்களக் கட்சிகள்
மட்டும்
உடன்பட்டுக் கொள்வதால்
ஈட்டிவிட முடியுமா?
தமிழ்த்
தரப்பினரிடமிருந்தல்லவா
தீர்வுகள் குறித்து
முதலில் உடன்பாடு
காணப்படல் வேண்டும்?

ஆனால் ஏதோ
சிங்களக் கட்சிகள்
இணக்கம் கண்டுவிட்டால்
பிரச்சனை தீர்ந்ததென்றும்,
தமிழ்த் தரப்பினர்
அந்த முடிவுகளுக்கு
உடன்படத்தான்
வேண்டுமென்றும்
எஜமானத் தொனியில்
கருத்துகள் இப்போது
வலியுறுத்தப் படுகின்றன.

அதுமட்டுமல்லாது,
இடைக்கால நிர்வாகசபை
அமைப்பது பற்றியும்
புலிகளை அதில்
சேர்ப்பதா,
இல்லையாவென்றும்
அவர்களே
விவாதிக்கிறார்கள்.

புலிகளைச்
சேர்ப்பதாகவோ
அல்லது விடுவதாகவோ
முடிவு கண்டுவிட்டாலும்,
சேருவதா விடுவதாவென
புலிகளல்லவா
முடிவெடுக்கவேண்டும்?

புலிகள் ஏற்பது
ஒரு புறமிருக்கட்டும்,
முதலில்,
மற்றைய
தமிழ்க்கட்சிகளையாவது
திருப்திப்படுத்த முன்னர்
இடைக்கால
நிர்வாகம்பற்றிப்
பேசத்துடிப்பது
அதிகப் பிரசங்கித்தனம்
அல்லவா?

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

**என்றென்றும் அன்புடன்,**
**ஆசிரியர்.**

# ஆன்மீகம்



## இறைவனைப் பார்க்க வேண்டுமா?

ஒரு சீடன், தன் குருவிடம் சென்றான். "ஐயா, நான் கடவுளைப் பார்க்க வேண்டும்," என்றான். குரு அமைதியாகப் புன்முறுவல் மட்டும் பூத்தார். வேறு எதுவுமே பேச வில்லை. இளைஞன் ஒவ்வொரு நாளும் குருவிடம் வந்தான். தான் கடவுளைப் பார்க்க வேண்டுமென வற்புறுத்தினான். ஒரு நாள் கடும் வெய்யில். அந்த இளைஞனைத் தம்மோடு ஆற்றுக்கு நீராட அழைத்துச் சென்றார் குரு. தண்ணீரில் முழுக்குப் போடச் சென்னார். இளைஞன் மூழ்கியதும், குரு அவன் தலையை அழுத்தி, அவனை வெளியில் வரவிடாவண்ணம் செய்தார். அவன் திணறினான். குரு தன் கைப் பிடியை விடவே இல்லை. அவன் புரண்டான், தத்தளித்தான், உதைத்தான். கடைசியில் தன் கையை எடுத்தார் குரு. இளைஞன் திணறிப்போய் சோர்வுடன் தலையைத் தூக்கினான். அப்போது குரு அவனிடம், "நீரினுள் இருந்தபோது உனக்கு மிகவும் தேவையாக இருந்தது எது?" என்றார். "மூச்சுக்காற்று!" என்றான் இளைஞன். "அதே அளவு தீவிரத்துடன் நீ இறைவன் வேண்டும் என்று நினை. அவ்வளவு தூரம் இறைவனின் தேவையை உணர். இறைவனை நீ பார்ப் பாய்,"என்றார்.

ரீ.குணவர்த்தன–களுவாஞ்சிக்குடி

## சத்தியத்தின் விபரீதம்

இன்று எங்கு பார்த்தாலும் சர்வசாதாரணமாகப் பாவிக்கும் ஒரு வார்த்தை தான் 'சத்தியம்' என்பது. எதற்காக என்றாலும், எதன் மீது 'என்றாலும் எவரும் உடனே 'சத்தியமாக' என்று கூறி விடுகிறார்கள். ஆனால் இந்த சத்தியம் என்ற வார்த்தை எவ்வளவு விபரீதமானது என்பதைப் பார்ப்போம். "யாரேனும் அல்லாஹ் அல்லாதவர்கள் மீது சத்தியம் செய்தால், அவர் அல்லாஹ்விற்கு இணை வைத்து விட்டார்." (அறிவிப்பவர்: உமர்(ரலி)-நூல்: திர்மிதி, ஹாகிம்)

ஒரு யூதர், நபி (ஸல்) அவர்களிடம் வந்து; "நீங்கள் கஃபாவின் மீது சத்தியமாக எனக் கூறுகிறீர்கள். இதன் மூலம் இணை வைக்கிறீர்கள்." என்று கூறினார். அதன் பின்பு நபி (ஸல்) அவர்கள், "கஃபாவின் இறைவன் மீது சத்தியமாக!" என்று கூறுமாறு நபித்தோழர்களுக்குக் கட்டளை பிறப்பித்தார்கள். (அறிவிப்பவர்: குதைலா (ரலி)-நூல்: நஸயி)

மேற்கொண்ட நபிமொழிகள் மூலம் அல்லாஹ் அன்றி வேறு எவர் மீதோ, வேறு எதன் மீதோ 'சத்தியம்' செய்வது, இணை (சிர்க்) வைத்தலைக் குறிக்கும் என்பதை விளங்கிக் கொள்ளலாம். மேலும், அல்லாஹ் தனது திருமறையில் கூறுகின்றான்: "யார் ஒருவன் அல்லாஹ்விற்கு இணை வைக்கிறானோ, அவனுக்கு சொர்க்கத்தை அல்லாஹ் 'ஹராமக்கி' விட்டான்," என்று. எனவே, சத்தியம் விஷயத்தில் கவனமாக நடந்து கொள்வதன் மூலம் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

அபூ அய்யாஷ் கான்–மக்கொனை.

## சமாதான கர்த்தர்

நாம் வாழும் உலகில் பிரச்சனைகளும், வேதனைகளும், கஷ்டங்களும் இல்லாத மனிதரே இல்லை எனலாம். அன்றாடம் ஏதாவது ஒரு பிரச்சனைக்கு முகம் கொடுத்துக் கொண்டே இருக்கிறோம். இருப்பினும் நாம் கர்த்தரை சார்ந்திருந்தால் மட்டுமே உள்ளத்தில் சமாதானம் நிலைத்திருக்கும். கர்த்தரை விட்டு தூரம் நின்று நாமே நமது கவலையைச் சுமக்க முயற்சி செய்தால் சமாதானம் நீங்கி, முறுமுறுப்பு ஆரம்பித்து விடும்.

இயேசு இவ்வாறு கூறினார்: "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகின்றேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக." யோவான் 14 : 27.

உலகம் தரும் சமாதானமோ மிகவும் குறுகிய காலமே இருக்கும், சின்னக் கவலை வந்தாலும் அது இருதயத்தில் புகுந்து சமாதானத்தை இல்லாதொழித்துவிடும். உலகில் எந்தப் பொருளாலும் எம்மை நிரந்தர மகிழ்ச்சியுடன் வைக்க இயலாது. ஆனால் இயேசு தரும் சமாதானம் உலகம் கொடுக்கிற பிரகாரம் இருப்பதில்லை. இயேசு எங்கள் உள்ளத்தில் இருப்பதால் கவலை, பாரங்கள் எங்கள் உள்ளத்தை அசைக்க முடியாது. அவர் எங்களுக்கு சமாதானத்தை கொடுக்கிறபடியால் கலங்காமலும் பயப்படாமலும் இருப்போம்.

எம்.வேதமாணிக்கம்–கொழும்பு 05.

## கவிதைப் போட்டி இல.364



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 15.07.2000

கவிதைப் போட்டி இல.364
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.361

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### பரிசுக்குரிய கவிதை



### வன்னிக்குழந்தையின் புன்னகை!

சைக்கிள் பெடல் சுற்றி
டைனமோவின் உதவியால்
ரேடியோ கேட்டேன்!
செய்தி வாசிக்கும்-வானொலி
அங்கிள் சொன்னார்-
அமைதி விரைவில் வருமென்று!

ம.சுகிர்தா-மன்னார்.

### அர்த்தம் என்ன?

சில்லை சுழற்ற முயலும்
சின்னப்பையா.
உன் முல்லைச் சிரிப்பின்
அர்த்தம் என்ன?
சொல்லு பையா
கள்ளமற்ற உன்மீது யார்
பார்வை விழுந்தய்யா?

பி.விக்னேஸ்வரன்-அட்டன்.

### தணிக்கையா?

சோகங்களை தணிக்கை செய்த
அவசரகாலச் சட்டத்தில்
இச்சிசுவின்
புன்னகைக்கும் தணிக்கையா?

ஆர்.புலேந்திரன்-கந்தெகெதர.

### நாளை உனதே!

காலச்சக்கரம்
சுற்றுதடா!
அதில் நீ-நாளை
இம் மண்ணை
ஆளும் மன்னனடா!

ஆர்.பாலகிருஷ்ணன்-மாத்தளை.

### பதுங்கல் ஏன்?

யுத்தத்தால் வந்த
சத்தத்தால்
உள்ளத்தால் வந்த
பயத்தால்
பதுங்குகின்றாள் இந்தப்
பாலகி.

ஆர்.ராஜேஸ்-கந்தெகெதர.

### தாண்டிடு!

தாயைக்கண்டா, தாய் நாட்டைக்
கண்டா,
தடை தாண்ட முடியாமல் தவிக்கின்றாய்?
தாயகம் உன் கையில் வர புன்னகை
மட்டும் போதாது,
தாண்டிடு தடைகள் யாவற்றையும்!

டிவேறா-கொழும்பு 13.

### எதை....?

வண்டிச் சக்கரம்
சுழல்வது போல்தான்-உன்
வாழ்க்கைச் சக்கரமும்
சுழல்கின்றது-இதனூடாக
எதையம்மா தேடுகிறாய்....?
இழந்துவிட்ட பெற்றோரையா?
இனிவருங்காலத்தையா-இல்லை
அரும்ப மறுக்கும்
சமாதானத்தையா?

சஹறுல் எம்.சலாஹுடீன்-உக்குவளை.

### வித்தியாசம்

பயங்கரவாதப் பட்டியலில்-என்
அப்பன்
எண்ணுவதோ சிறைச்சாலைக்-
கம்பி
அகதி எனும் போர்வையில்-நான்
எண்ணுவதோ சைக்கிள்-கம்பி!

ப.அம்பிகாபதி-மன்னார்.

### சைக்கிள் சிறையில்

அடையாள
அட்டையில்லையா?
பொலிஸ் பதிவில்லையா?
பின்னே ஏன்-இம்
மழலை
சைக்கிள் சிறையில்?

நிர்மலா-வத்தளை.

### யாரைத் தேடுகிறாய்?

கள்ளமில்லாச் செல்வன் நீ
கம்பி வழியால் பார்த்து
கொண்டிருப்பது யாரை?
உன்தாய் தந்தையரையா?
அவர்கள் உறங்குமிடம்
செம்மணி என்று நீ அறிவாயா?

கா.நாகேந்திரன்-கொம்மாதுறை.



# வாசக(ர்)சாலை

*என் அன்பின் முரசே!*

உன்னை விரும்பிப் படிக்கும் பல்லாயிரம் வாசகர்களில் நானும் ஒருவள். நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் மாணிக்கக்கற்கள் போன்று பெறுமதி மிக்கவையாக இருக்கின்றன.

மேலும் நீ தருகின்ற 'தேன் கிண்ணம்' என்னும் பகுதியும் திக்திக் தொடர், 'மன்னாதி மன்னன்' தொடர்க்தையாவும் எனக்கு மிகவும் விருப்பமான ஆக்கங்கள்.

அவற்றை வாசித்து பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் ஒவ்வொரு வாரமும் என்னைப் போன்ற ரசிகர்கள் உள்ளம் மகிழ வாரம் தோறும் வருவாய் என வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மு. அமுதா-சாமிமலை.

---

*அன்பின் என் இதயம் கவர்ந்த முரசே!*

வாரமொருமுறை வலம் வந்து எங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி விடுகிறாய். எனது அன்பார்ந்த வேண்டுகோள் இது-மலையக மக்களுக்காக ஒரு பக்கத்தைத் தந்தால் அதனூடாக எத்தனையோ பேர் பயனடைவார்கள். அந்தக் குறையை நீ போக்குவாய் என எதிர் பார்க்கின்றோம். 'மன்னாதி மன்னன் விக்கிரமாதித்தன்' தொடர்கதைகள் மிக விறுவிறுப்பாக உள்ளது. அதன் முன்கதை சுருக்கத்தைத் தந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

ஆர்.இராமநாதன்-தெனியாய.

---

அன்புடன் முரசிற்கு,

வியாழன் தோறும் பவனிவரும்போது, தவறாது உனைக்கரத்தில் ஏந்தி, தொடக்கம் முதல் இறுதி வரை அனைத்து அம்சங்களையும் வாசித்து இரசிக்கும் வாசகர்களில் நானும் ஒருவர். நீ 361ம் முரசில் சுமந்து வந்த 'மேற்கு நாடுகளில் தஞ்சம் மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுவோர் இங்கு படும் துயரம்' என்ற தலைப்பில் வந்த அறிக்கை என்னை வியக்கவைத்தது. இப்படியான அறிக்கைகளை தொடர்ந்து சுமப்பாயாக, என்றும் அன்புடன் வாசகி

கே.ஜனார்த்தனி-மல்லாவி.

---

எங்கள் இதயங்களை என்றோ ஈர்த்துவிட்ட என் இனிய தினமுரசே!

'செய்திச் சிதறல்களோடு' நரன் தரும் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'அதிரடி அய்யாத்துரை', 'இர்ாஜதந்திரியின் அலசல்', மூன்று வாரத் தொடர் '[illegible]ந்த கதை' சுவாரசியமாகத்தான் இருக்கின்றன.

'தகவல் பெட்டியில்' மீன்களைக் காப்பாற்றும் மீட்புப் படையினர் என்ற தகவலைப் பார்த்ததும் 'அடடா... இதற்கும் ஒரு மீட்புப் படையா? கொடுத்து வைத்த மீன்களப்பா!'

முரசின் சிறுகதைகள் 'மறுபக்கம், 'மாறிவிடும் நெஞ்சம்', 'அகதி' போன்ற சிறுகதைகள் பிரமாதம். என்றும் முரசுக்கு முத்தான வாழ்த்துக்கள்.

என்.எல்.முஸம்மில்-புதிய காத்தான்குடி-06.

---

*முத்தான முரசே!*

நீ சுமந்து வரும் அனைத்து அம்சமும்
என் இதயத்தை
வீணைபோல் மீட்டுகின்றன.
அதிலும் 'மன்னாதி மன்னன்' கதை
தேன்போல் இனிக்கின்றது.

த.லக்ஸ்மன்-மட்/சத்துருக்கொண்டான்.

### சைவமா? அசைவமா?

பால் அசைவம் என்ற கூற்றை நான் முற்று முழுதாக மறுக்கிறேன். ஏனென்றால் முட்டையினுள்ளே மஞ்சள் கரு வடிவத்தில் இருப்பது கோழிக் குஞ்சு, எனவே முட்டையினை உண்பது ஓர் உயிருள்ள கோழியினை உண்பது போன்றது. ஆனால் பாலில் அப்படி எந்த உயிரினமும் இல்லை. இதனால் பால் சைவம் ஆகும். இதனைவிட இந்து சமய முறைப்படி விக்கிரகங்களுக்கு பாலினாலேயே அபிஷேகம் செய் கிறார்கள். இதுவும் பால் சைவம் என்பதற்கு ஒரு சான்றாகும்.

ரி.பி.ஹரன்-வசாவிளான்.

---

*அன்பின் தினமுரசே!*

வாரம் தோறும் உன்னைப் பார்ப்பதற்காக வியாழனின் விடிவைக் பார்த்திருப்பேன். காத்திருக்கும் வேளையில் முகப்பைப் பார்த்திருப்பேன். அதில் படங்களும் முடிவில் சுகங்களும். 'ஆன்மீக' உலக செய்திகளும் 'செய்திச் சிதறல்களும்', அதிரடி கதைகளும், மனம் கவரும் சிறு தொடர்களும் 'பாப்பாவின் முரசும்', சினிமாவின் இளசும், இதெல்லாம் முரசின் பொறுப்பும் என்றும் கோடி கோடி மக்கள் பார்க்கும் தினமுரசே! வாழ்க என வாழ்த்தி நிற்கிறேன்.

யூட்-மாகியப்பிட்டி.

### சைவமா? அசைவமா?

தினமுரசு 18.6.2000 வெளிவந்த கோழி முட்டை, பால் இரண்டும் சைவமா, அசைவமா? என்ற வாதத்தில் எஸ்.ஆனந்த ஜோதி எட்மண்ட் என்பவர் இரண்டும் சைவம் அல்ல, அசைவம் என எழுதியிருந்தார்.

உண்மையில் ஓர் உயிரைக் கொன்று பெறப்படும் உணவுகளே அசைவம் எனக் கொள்ளப்படலாம். அந்தவகையில் இறைச்சி, மீன் என்பவற்றுடன் உள்ளே உள்ள உயிரைக் கொன்று பெறப்படும் (கருக்கட்டிய) முட்டையும் அசைவமே. ஆனால் ஓர் உயிரில் இருந்து அந்த உயிரினத்தின் உயிருக்கு தீங்கு விளைவிக்காமல் பெறக் கூடிய உணவுகளான பால், (கருக்கட்டாத) முட்டை என்பவைகள் சைவமே. பிராமணர்கள் அந்தக் காலத்தில் பாலை சைவம் என ஏற்றுக் கொண்டதற்கான காரணம் இதுவாகத்தான் இருக்கமுடியும்.

கு.ஸ்ரீராகவராஜன்-மீசாலை.

---

*தித்திக்கும் தின்முரசே!*

திகட்டாத தினமுரசே! நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் அருமையிலும் அருமை. என்றும் உன் பணி தொடரவும், வளரவும், வாழ்த்தும் பல்லாயிரம் வாசகர்களில் நானும் ஒருத்தி

ராஜு கனகா-பூனாகலை.

---

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# தீர்வுத் திட்டத்தால் அமைதி எப்போது?

## அன்றாடம் திண்டாடும் பொது மக்களின் ஏக்கம்!

தமிழ் பேசும் மக்களின் ஓரளவான அபிலாசைகளையாவது நிறைவேற்ற முடியாத ஒரு தீர்வுத் திட்டத்தை அமுல்படுத்துவதை இந்நாட்டின் தமிழ் பேசும் மக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வார்களா என்பதில் பலத்த ஐயப்பாடு எழுந்துள்ளது.

பல அரசியல் சட்ட வல்லநர்களின் ஆலோசனைகளுடன் பேராசியர் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் புதிய அரசியல் யாப்பு விதிகள் ஆலோசனைகள் அடங்கிய ஒரு பொதியை 1995 ஆகஸ்ட் மாதத்தில் அரசாங்கத்திடம் சமர்ப்பித்தார். அரசாங்கத் தரப்பிலுள்ள பிரமுகர்கள், சட்ட வல்லுநர்கள், அமைச்சர்கள் ஆகியோரினதும் எதிர்க்கட்சி உட்பட ஏனைய பல அரசியல் கட்சிகளுடையதுமான திருத்த யோசனைகளும் மேற்படி ஆலோசனைப் பொதியில் இணைக்கப்பட்டன. இதனால் அப்பொதியினுடைய சுய உருவம் பொலிவிழந்து போனது. இதனைத் தொடர்ந்து கிடப்பில் போடப்பட்ட தீர்வுப் பொதி தூசு தட்டப்பட்டு மீண்டும் தலையெடுத்திருக்கிறது.

இத்தீர்வுப் பொதி பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுவிடுமென்று ஜனாதிபதி வாக்குறுதியளித்து வருகிறார். அவ்வாறு இத் தீர்வுத் திட்ட ஆலோசனைகள் பாராளுமன்றத்தில் பிரதிநிதிகளின் பரிசீலனைக்கும் வாதப் பிரதிவாதங்களுக்கும் உட்படுத்தப்பட்டு சட்டமாக்கப்படுவதற்கு சபையின் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் தேவைப்படும்.

இந்நாட்டிலுள்ள பேரினவாத இயக்கங்களும் பௌத்த மத உயர் பீடங்களும் இனப்பிரச்சனைத் தீர்வுக்கான அரசியல் சீர்திருத்தங்கள் எதனையும் செய்யலாகாதென அறைகூவல் விடுத்து வருகின்றன.

இது தவிர, தமிழ்க்கட்சிகள் பலவும் கூட தீர்வுத் திட்ட யோசனைகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையில் இன்றிருப்பதாகவும் தெரியவில்லை.

இத்தீர்வுத்திட்ட ஆலோசனைகளை முற்று முழுதாக விடுதலைப் புலிகள் நிராகரிப்பதாக புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் திட்டவட்டமாக அறிவித்து விட்டார். இத்தகைய சூழ்நிலையில் இன்னும் ஒரு மாதத்தில் கலைக்கப்படவிருப்பதாகக் கூறப்படும் பாராளுமன்றத்தில் தீர்வுத்திட்ட ஆலோசனைகள் கொண்டு வரப்படுமா? அவை சட்டமாக்கப்படுமா என்று தமிழ் பேசும் மக்கள் சந்தேகப்பட்ட வண்ணமுள்ளனர்.

கொடுமைகள் பல நடைபெற்று மக்கள் அனைவரும் பெரும் குழப்பமடைந்துள்ள நிலையில் அவர்கள் படும் துயரங்கள் முடிவதற்கான அறிகுறிகள் எதுவும் தோன்றவில்லையே என்ற ஏக்கப் பெருமூச்செறிந்த வண்ணமுள்ளனர்.

யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கியுள்ள யாழ் குடாநாட்டு மக்கள் அன்றாடத் தேவைகள் முறையாகப் பெற முடியாமல் திண்டாடுகிறார்கள். நோய் பிணி முதலான துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கேற்ற வழிவகைகளும் தென்படவில்லை. பள்ளிப் பிள்ளைகள் தங்கள் கல்வியைத் தொடர வகையறியாது திண்டாடுகின்றனர்.

இவையொருபுறமிருக்க, எந்த நேரத்தில் எத்தகைய கோர யுத்தம் தங்கள் வீட்டு கதவைத் தட்டி எழுப்புமோ என்ற பீதி அவர்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் கொழுந்துவிட்டெரிகிறது. இத்தகைய கொடிய சூழ்நிலையில் இன்று அரைப் பட்டினியும் முழுப்பட்டினியுமாக உழலுபவர்கள், உயிருடன் வாழ்வதைவிட ஒரேயடியாக மாண்டு போவதே மேலென்று கருதத் தலைப்பட்டு விட்டனர். முழு விரக்தியின் விளிம்பில் நின்று மக்கள் தத்தளிக்கின்றார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் இன்றுள்ள அவர்களது தேவை-உடன் போர் நிறுத்தம்: உடன் அமைதி வழி-பசிக்கு ஒரு நேர உணவு; நிம்மதியாகப் படுத்துறங்க ஓரிடம் ஆகியவையே. இவை எப்போது அவர்களை வந்து சேரப் போகின்றன என்பதுதான் அவர்களுடைய ஏக்கம்! ■

## மக்கள் படும் துயரம் தீரவேண்டுமானால்

## தீர்வுத்திட்டம் உடன் அமுலாக வேண்டும்!

## நோர்வே தூதரிடம் ஈ.பி.டி.பி. வலியுறுத்தல்!

தொடரும் யுத்தத்தினால் தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இன்னல்படும் அவர்களுடைய துன்பதுயரங்கள் முதலில் நீக்கப்பட வேண்டும். இதற்கேற்ப தீர்வுத்திட்ட ஆலோசனைகள் பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னதாக சட்டமாக்கப்பட்டு அமுலுக்குக் கொண்டு வரப்படவேண்டும். இல்லையேல் தீர்வுத் திட்ட யோசனைகள் மேலும் 5 வருடங்கள் கிடப்பில் போடப்பட்டு விடும். இந்தக் கருத்தை கடந்த மாத இறுதியில் இங்கு வந்திருந்த, இலங்கை இனப்பிரச்சனைக்கான தீர்வுத் திட்டங்களை வகுப்பதில் ஈடுபட்டிருக்கும் நோர்வே நாட்டின் சிறப்புத்தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் அவர்களிடம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

திரு.சோல்ஹெய்ம் அவர்களும் நோர்வே நாட்டின் இலங்கைத் தூதுவர் ஜான் வேஸ்ட்போர்க் அவர்களும் ஈ.பி.டி.பி. தலைமையகத்திற்கு வந்து கட்சியின் பிரதிநிதிகளைச் சந்தித்தனர். அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரீஸ் அவர்களையும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகளையும் ஏற்கனவே சோல்ஹெய்ம் சந்தித்து அவர்களுடைய கருத்தையும் கேட்டறிந்தார்.

அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் பேச்சுவார்த்தை மேசையில் அமரவைத்து பேச்சுவார்த்தையை நடத்துவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து வைப்பதுதான் தமக்கிடப்பட்ட பிரதான பணியாகும் என்று கூறிய சோல்ஹெய்ம் இதில் இந்தியாவுக்கு அதிக அக்கறை இருப்பதாகவும் கூறினார்.

உண்மையாகவே இன்றுள்ள நிலையில் புலிகள் அரசாங்கத்துடன் பேசுவதற்கு முன் வருவார்களா? என்று ஈ.பி.டி.பி.யினர் அவரிடம் கேட்டபோது, ஒரு தரப்பினர் மீது மறுதரப்பினர் நம்பிக்கை வைத்திருப்பதாகத் தெரியவில்லை. இந்நிலையில் பேச்சுவார்த்தைக்குப் புலிகள் சம்மதமளிப்பது சாத்தியமானதாகத் தெரியவில்லை என்றார். திம்பு பேச்சுவார்த்தையின் அடிப்படையிலேயே இனிமேல் நடைபெறும் எந்தப் பேச்சு வார்த்தைகளும் அமைய வேண்டுமென்றும் புலிகள் கருதுவதாகச் சோல்ஹெய்ம் சொன்னார்.

தமிழர்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் தான் அதிக அக்கறை செலுத்தப்பட வேண்டுமே தவிர புலிகளின் பிரச்சனைக்கு முக்கியமளிக்கப்படுவது முக்கியமானதாகத் தெரியவில்லை என்பதை ஈ.பி.டி.பி.யினர் சுட்டிக் காட்டினர். ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பா.உ., திரு.தவராஜா பா.உ, திரு.ஜெகன் பா.உ, திரு.இராசமாணிக்கம் பா.உ, கலாநிதி விக்னேஸ்வரன் மற்றும் மகேஸ்வரி வேலாயுதம் ஈ.பி.டி.பி. சார்பில் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். ●

## புளொட் முகாமல்ல!

கடந்த வாரம் முரசின் 3ம் பக்கத்தில் விவசாயிகளைக் கொன்றவரை ஊர்மக்கள் தீயிட்டுக் கொன்றனர். என்ற தலைப்பில் செய்தி பிரசுரமாகியிருந்ததல்லவா? கொலை செய்தவராகக் கருதப்பட்டவர், வீரபுரத்திலுள்ள புளொட் அமைப்பின் அலுவலகத்தில் சரணடைந்திருந்தார் என்று தவறுதலாகச் செய்தி இடம் பெற்றுவிட்டது. உண்மையில் அந்த நபர் வீரபுரத்திலுள்ள டெலோ அலுவலகத்தில் தான் சரணடைந்திருந்தார் என்று தெரியவருகிறது.

ஆத்திரங்கொண்ட ஊர் மக்கள் அந்நபரை வெளியே இழுத்து வந்து அடித்து கொலை செய்து விட்டு அவரைத் தீயிட்டு எரித்துள்ளனர். இக்கொலை தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

தவறுக்கு வருந்துகிறோம்.
ஆசிரியர்.

## சமூர்த்தி உத்தியோகத்தர் தெரிவில் அநீதி இடம் பெறவில்லை

செங்கலடியில் நடைபெற்ற சமூர்த்தி உத்தியோகத்தருக்கான நேர்முகப்பரீட்சையில் அநீதி இடம்பெற்றதாக 357ஆம் இலக்க முரசின் மூன்றாம் பக்கத்தில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது. சில கிராம சேவையாளர்களின் முறை கேடான செயல்களால் தான் அநீதி இடம் பெற்றதாகவும் மேலும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தச் செய்தி உண்மைக்குப் புறம்பானது என்றும் இதில் கிராம சேவகர்களுக்கு எதுவிதமான தொடர்பும் இல்லை என்றும், செங்கலடி, ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் திரு கே.மகேசன் அவர்கள் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசசேவை கிராம உத்தியோகத்தர்கள் சங்க மட்டக்களப்புக் கிளையின் தலைவர் கே.வாமதேவன் அவர்களும், முரசு வெளியிட்ட செய்தி தவறானது என்றும் சுட்டிக்காட்டி கடிதம் எழுதியிருக்கிறார். ஆகவே சமூர்த்தி உத்தியோகத்தர் தெரிவில், குறிப்பிட்ட அநீதி எதுவும் நடைபெறவில்லை என்பதைத் தெரிவிப்பதுடன் இத்தவறுக்காக எமது வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்.

## சிங்களப் பாடசாலையில் குண்டுப் புரளி

(கண்டி நிருபர்)

கண்டியில் கடந்த ஜூன் மாதம் 26ம் திகதி பிரபல சிங்களமொழிப் பாடசாலை ஒன்றில் குண்டு ஒன்று வைக்கப்பட்டதாக புரளி கிளப்பப்பட்டதால் பாடசாலை மாணவர்கள் பெரும் திகில் அடைந்தனர்.

இந்தச் செய்தி பொலிஸாருக்கு எட்டியதும் அது தொடர்பாக நடவடிக்கையில் இறங்கினர். என்றாலும் அந்தச் செய்தியில் எதுவித உண்மையும் இல்லை என்பதை அடுத்து நிலைமை வழமைக்குத் திரும்பியது. கண்டி நகரம் இதனால் சிறிது குழப்பத்தில் மூழ்கியது.

இதே வேளையில் கடந்த ஜூன் மாதம் 22ம் திகதி கண்டி ஹந்தானை என்னும் இடத்தில் புலி என சந்தேகிக்கப்பட்ட தமிழ் யுவதி ஒருவர் (வயது 23) கட்டுகஸ் தோட்டைப் பொலிஸாருக்குக் கிடைத்த செய்தி ஒன்றையடுத்து கைதானார். பின்னர் அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார். ■

## தமிழ்ப் பிரதேச மாகாண சபையில் தமிழுக்கு இடமில்லை

வடக்கு-கிழக்கு மாகாணசபையில் தமிழ்மொழி அமுலாக்கல் பதினொரு வருடங்கள் கழிந்த இன்றைய நிலையிலும் சீராக இல்லை என்பதைப் பிரதம செயலாளரும் கல்விச் செயலாளரும் பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற வலயத் தமிழ் மொழித்தின விழாவொன்றிலேயே இந்த ஒப்புக் கொள்ளல் இடம் பெற்றிருக்கிறது.

மாகாணசபையின் பதினொரு வருட வரலாற்றில் பத்து வருடங்கள் இந்த அதிகாரிகளின் கைகளிலேயே நிர்வாகம் இருந்திருக்கிறது.

இந்த நிலையில் இன்று வரை தமிழில் கருமமாற்ற முடியாது இருப்பதாகவும் இது வரை மாகாணக் கீதம் ஒன்றை உருவாக்க முடியாதிருப்பதாகவும் தெரிவித்த செயலாளர்கள்-சிங்களவர்கள் சிங்களத்தில் கருமமாற்றும் போது ஒரு கருத்தரங்கம் கூடத் தனித் தமிழில் நடத்த முடியவில்லையே என்று ஆதங்கப்பட்டதுடன் அரசியலுக்காக மாத்திரமே தமிழ் பயன்படுத்தப்படுகிறது என்று அரசியல்வாதிகளையும் சாடியுள்ளனர்.

மாகாண சபைச் சின்னத்தையும் கொடியையும் இல்லாதொழித்து கொழும்பில் அரசின் நேரடி நிர்வாகிகள் போலப் பாவனை செய்யும் இவர்கள், மாகாணக் கீதத்தை வைத்து என்ன செய்யப் போகிறார்கள் என்று கேட்கப்படுகிறது.

மாகாணசபை உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பள விவரங்கள் கூட தற்போது ஆங்கிலத்தில் தான் வழங்கப்படுகின்றன. வாகனங்கள் எதிலும் மாகாணச் சின்னங்கள் இல்லை. மாறாகச் சில திணைக்கள வாகனங்கள் தனிச்சிங்களத்தில் பெயரைப் பொறித்துக் கொண்டு ஓடித்திரிகின்றன.

தாங்களே தமிழ் மொழி அமுலாக்கலுக்குத் தடையாக இருந்து கொண்டு யாரை நோக்கி இவர்கள் கூப்பாடு போடுகிறார்கள் என்று கேட்கிறார்கள் பொது மக்கள். ■

## தகவல் அதிகாரி மீது நட்டஈடு கோரி வழக்கு

தகவல் அதிகாரியும், செய்தித் தணிக்கைக்குரிய தகுதி வாய்ந்த அதிகாரியாகவும் கடமையாற்றிய ஆரிய ரூபசிங்ஹவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் 'சண்டே லீடர்' ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தாரல்லவா? இந்த வழக்கில் வெற்றி பெற்ற திரு. விக்கிரமசிங்க திரு ஆரிய ரூபசிங்ஹவுக்கு எதிராக மற்றுமொரு வழக்கை தாக்கல் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார்.

'சண்டே லீடர்' பத்திரிகை அலுவலகம் மற்றும் அச்சகம் ஆகியவற்றை மூடி சீல் வைத்தமையினால் தமக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுவிட்டதாகவும் இதற்காக திரு.ரூபசிங்ஹ தமக்கு நட்டஈடாக அவருடைய சொந்தப் பணத்திலிருந்து ரூபா 10 கோடி தரவேண்டும் என்றும் கோரியே இவ்வழக்கு தாக்கல் செய்யப்படவிருப்பதாகவும் அவர் சென்னார். இச் செய்தி 'டெய்லி மிரர்' 3ம் திகதி பத்திரிகையில் முன்பக்கச் செய்தியாக பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் செய்தித் தணிக்கை தொடர்பாக புதிய கருத்துக்களை கொண்டமறு அறிவித்தலொன்றை அரசாங்கம் விடுத்திருக்கிறது. திரு.ரூபசிங்ஹ அவர்களை மீண்டும் தகுதிவாய்ந்த அதிகாரியாக ஜனாதிபதி சந்திரிக்கா நியமித்துள்ளதாக அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ■

## முஸ்லிம்களுக்கு புலிகள் விடுத்துள்ள கோரிக்கை

கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்கள் புலிகளுக்கு உதவி புரியலாகாது எனக் கோரிக்கை விடுவது போன்ற ஒரு துண்டுப் பிரசுரத்தை கிழக்குப் பிராந்தியங்களில் படையினர் விநியோகித்துள்ளனர். இது தொடர்பாக செய்தியை கடந்த வார முரசில் நாம் வெளியிட்டிருந்தோம்.

இந்தத் துண்டுப் பிரசுரத்திற்கு பதிலடி கொடுப்பது போல புலிகளால் இப்பொழுது கிழக்கில் எதிர்ப்பிரசார துண்டுப் பிரசுரம் ஒன்று பரவலாக வெளியிடப்பட்டிருக்கிறது.

புலிகளை அழிப்பதற்கு பேயுடனும் கை கோர்க்கத் தயார் என்று கங்கணம் கட்டியிருக்கும் பேரினவாதிகள் தமிழ்-முஸ்லிம் மக்களின் நீண்டகால உறவு சிதைந்து போவதையிட்டுச் சிறிதும் கவலை கொள்ள மாட்டார்கள் என்பதை முஸ்லிம் மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இவ்வேளையில் சிங்கள அரசின் தந்திரோபாயங்களைப் புரிந்து கொண்டு தமிழ்-முஸ்லிம் உறவு வலுவிழக்காமல் இருப்பதற்கு முஸ்லிம் மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் இத்துண்டுப் பிரசுரத்தில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. ■

## கண்டி உடன்படிக்கையை அமுல் நடத்த 'சிஹல உறுமய' சங்கற்பம்!

(கண்டி நிருபர்)

"இந்த நாட்டை காலத்துக்குக் காலம் பலர் ஆக்கிரமித்து வந்திருக்கின்றனர். 1815ஆம் ஆண்டில் கண்டியில் ஆங்கிலேயருக்கும் சிங்கள இராஜதானியருக்கும் இடம்பெற்ற கண்டி உடன்படிக்கையில் பௌத்தம் பாதுகாக்கப்படும் என முக்கிய உறுதியுரை இடம் பெற்றுள்ளது. அன்றிலிருந்து இன்றுவரை பௌத்தர்களுக்கு பல வகையிலும் அச்சுறுத்தல்களும் ஆக்கிரமிப்புகளும் தலைதூக்கி வருகின்றன. நாம் ஆட்சிக்கு வந்ததும் சர்வதேச உடன்படிக்கையாக இருக்கும் கண்டி உடன்படிக்கையை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவோம்."

இப்படிக் கூறினார் 'சிஹல உறுமய' வின் பிரதித் தலைவரான முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஸி.எம்.மத்தும பண்டார. கண்டி டி.எஸ்.சேனாநாயக்க நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற 'சிஹல உறுமய' கட்சியின் கொள்கை விளக்க உரையின் போதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

"அன்றைய கண்டி உடன்படிக்கையின் அம்சங்கள் எதுவுமே இன்று நடைமுறைப் படுத்தப்படுவதில்லை. இன்று தலைநகராக கொழும்பு இருந்தாலும் 1500 வருடங்கள் தலைநகராக இருந்த அநுராதபுரத்தை நாம் ஆட்சிக்கு வந்ததும் இலங்கையின் தலைநகராக மீண்டும் உருவாக்குவோம்.

கடந்த 17 வருடங்களாக ஆட்சி புரிந்தோரும் இன்று ஆட்சி புரிவோரும் நாட்டை பாழ்ப் படுத்திவிட்டனர். இவ்விரு பகுதியினரும் குடும்ப ஆட்சியாகவே நாட்டை இட்டுச் சென்றிருக்கின்றனர். ஜேம்ஸ் ரத்தினம் என்ற ஒரு எழுத்தாளர் இலங்கையில் நடந்த ஆட்சி முறையை ஆங்கிலேயருக்கு ஏற்றது போல் தம்பி முதலியார் எனவும் கேட் முதலியார் எனவும் தோம்பு முதலியார் எனவும் தோலுக்கு முதலியார் எனவும் பல்வேறு பெயர்களுடன் ஒவ்வொரு பகுதியினரும் பிரித்து ஆளக்கூடிய வகையில் வகுத்திருந்ததாக 1924ஆம் ஆண்டில் மதுரையில் வெளியான 'மதுரை கஸட்' என்ற நூலில் எழுதி இருக்கின்றார். இந்த நிலையால் எமது தாய் நாடு அல்லற்படுகின்றது." என்றார். திரு.சம்பிக்க ரணவக்கவும் பேசினார். ●

## அரச பாடசாலை அனுமதிக்கு நன்கொடை அறவிடலாகாது

அரசாங்கப் பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்கும்போது பணம் அல்லது நன்கொடை அல்லது வேறு ஏதாவது அன்பளிப்புகளைப் பெற்றுக் கொள்வது சட்ட விரோதமானது.

பாடசாலைப் பிள்ளைகளிடமிருந்தோ அல்லது பெற்றோரிடமிருந்தோ பணம் அறவிடப்படுவதிலும் அல்லது அன்பளிப்புகளைப் பெறுவதிலும் அதிபரோ ஆசிரியரோ ஈடுபடுவது கண்டு பிடிக்கப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி பணித்துள்ளார்.

இலவசக் கல்வியின் முழுப்பயனையும் மாணவர்கள் பெறவேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும். இந்த நோக்கத்தைக் களங்கப்படுத்தும் விதத்தில் மாணவர்களையும், பெற்றோரையும் துன்பத்திற்குள்ளாக்கி பணமோ அன்பளிப்புகளோ பெறுபவர்கள் பற்றித் தனக்குத் தெரியப்படுத்துமாறு கல்வி உயர்க்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒரே பாடசாலையில் 5 வருடங்கள் சேவையாற்றிய அதிபர்களுக்கும் 8 வருடங்கள் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கும் இடமாற்றம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன் போது அரசியல் பழி வாங்கல் எதுவும் இடம்பெறாது.

நாட்டில் தற்போது 306 தேசியப் பாடசாலைகள் உள்ளன. இனிமேலும் தேசியப் பாடசாலைகளாக எதுவும் தரமுயர்த்தப்படமாட்டாது. தேசியப் பாடசாலைகளை நிர்வகிப்பதற்கு அதிக பணம் தேவைப்படுகிறது. தேசியப் பாடசாலைகளை இனிமேல் மாகாண சபைகள் மூலம் அபிவிருத்தி செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் மேலும் சொன்னார். ■

## காந்தி நகர வாசிகளுக்கு-புதிய வீடுகள்

"நீண்டகாலமாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த திருமலை காந்திநகர் வாழ் மக்களின் தேவை யைக் கருத்திற் கொண்டு காணி ஒதுக்கியும் 121 நிரந்தர வீடுகள் பொதுக் கிணறு, குழாய்க் கிணறு என்பவற்றையும், மலசல கூடங்கள், வடிகால்கள் வசதியுடன் அமைத்துத் தந்த பலதரப்பட்ட நிர்வாகிகளுக்கு எங்கள் கிராமமக்களின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றோம்." இவ்வாறு கூறும் அறிக்கையொன்றை காந்திநகர் கிராம அபிவிருத்திச் சங்கம் விடுத்துள்ளது.

குடியிருப்பதற்கு காணிகள் தந்துதவிய நகரமன்றத்துக்கும் 121 வீடுகள் அமைக்கக் கடனாகவும், மானியமாகவும் பணம் தந்துதவிய தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் திருக்கோணமலை அலுவலகத்தினருக்கும் நோர்வே உயர்ஸ்தானிகர் உதவியுடன் 80 கழிப்பறைகளும் ஒரு பொதுக் கிணறும் அமைத்துத் தந்த திருகோணமலை மாவட்ட முன்னேற்றச் சங்கத்தினருக்கும் இவற்றுக்கு உறுதுணையாக நின்ற ஏனைய உத்தியோகத்தர், ஊழியர்கள் ஆகியோருக்கும் இவ்வறிக்கையின் மூலம் நன்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

காந்தி நகர மக்கள் பலதலைமுறைகளாக வீடு நிலம் எதுவுமற்றவர்களாக வாழ்ந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ●

# 1 வது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வி அனீஷா (09.07.2000)

திரு.திருமதி.தபேந்திரன்-லோஜினி தம்பதியரின் செல்வப் புதல்வி அனீஷா தனது 1வது பிறந்த நாளை 09.07.2000 Swiss. Frauenfeldல் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, ஆசை அம்மா, இலங்கையில் உள்ள அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்திமார், சித்தப்பாமார், மாமா, மாமி மற்றும் Holland இலுள்ள பெரியப்பா, பெரியம்மா, தங்கை அபிராமி இலங்கையிலுள்ள அண்ணன் சுபீந்தர் சுவிஸில் உள்ள மாமாமார், மாமிமார் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஸ்ரீ காமாட்சி அருள் பெற்று பல்கலையும் கற்று சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: திரு.தபேந்திரன் (அப்பா) சுவிஸ். தொடர்புகளுக்கு: 052 7213081


உலகப் புகழ்பெற்ற

## எக்ஸ் ஒயில்

TRADE MARK




- காய்ச்சல்
- தலைவலி
- தலைச்சுற்று
- தலைப்பாரம்
- ஜலதோஷம்
- இருமல்
- மூக்கடைப்பு
- பல்வலி
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை

**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி.**

ஏக விநியோகஸ்தர்:

**SINGHA HOLDINGS (PVT) LTD**

14, Ground Floor - Welikada Plaza - Rajagiriya
Tel : 888214 Fax : 682984


# 45ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 04 ✻ 02 ✻ 1973



விண்ணில் 31 ✻ 05 ✻ 2000

## செல்வி நளாயினி செல்வறட்ணம்

உறவுகள் போனதங்கே
உருவமே இல்லாமல்-இனி இரவுகள் போகுமிங்கே உம்
நினைவுகள் உறங்காமல்
நேற்றடித்த காற்றா-நீ நாளையும் வருவதற்கு
ஊற்றெடுத்த உயிரம்மா-சக உதரத்தின் உதிரத்தில்
வாய் விட்டழவும் வசதியின்றி உருகுதம்மா உணர்விங்கு
ஏங்குதம்மா உம் உறவுகள்
எங்கே நீ ......?
நாட்கள் நாற்பத்தைந்தாய் நடைபோட்ட போதும்
விழித்திரையில் உம் விம்பம் நினைவுகளை எப்போதும் நிழலாக்கும்.
உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,
பிரிவுத் துயரால் வாடும் அப்பா, அம்மா, தங்கை, தம்பிமார், உறவினர்கள்

தகவல்: செ.பிரதீஸ் (சகோதரன்) கனடா (416) 929 3057
செ.நவதீஸ் (சகோதரன்) திருகோணமலை 026-20560




## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

அஸ்மா, வீசிங், தொய்வு, இழுப்பு, இளைப்பு, மாய்ச்சல், மூச்சுத்தட்டல், மூச்சடைப்பு, நெஞ்சுச்சளி, மண்டைச்சளி, கக்கல், இருமல், தடிமன், மூக்கால் நீர் வடிதல், மூக்கடைப்பு, நாசி அரிப்பு, மூக்கரிப்பு, தும்மல், மூக்கினுள் சவ்வு வளர்தல், கண்கடி, கண்ணரிப்பு, தலைவலி, பீனிசம் போன்ற குணங்களுக்கு நிரந்தர சுகம் பெற அஸ்மா சிகிச்சை நிபுணர் டொக்டர் சுறாஜ் சோமசுந்தரம் அவர்களை இல. 25 சில்வெஸ்டர் வீதி, கல்கிசை (மவுண்ட்லெவினியா)(கொழும்பு) எனும் இடத்தில் பழைய நோயாளர்களும், முன் அனுமதி பெற்ற புதிய நோயாளர்களும் தினமும் மாலையில் 4.00மணி முதல் 7.00மணி வரையும், செவ்வாய், வியாழன், சனி கிழமை நாட்களில் காலையில் 9.00மணி முதல் 12.00மணி வரையும் சந்தித்து சிகிச்சை பெறலாம். புதிதாக வரும் நோயாளர்கள் மேற்கூறிய நாட்களிலும் நேரங்களிலும் தொலைபேசி இலக்கம் 074-201582 மூலம் தொடர்பு கொண்டு உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் நாளையும், நேரத்தையும் முன் அனுமதி பெற்றே (பதிவு செய்து) வரவேண்டும்.

THEIVEEGAM INTERNATIONAL SOCIAL AND SPIRITUAL SERVICES

## தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது பக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE"

## COMPUTER CLASSES

வத்தளைச் சந்தியில் தமிழ் விளக்கத்துடனான Computer வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. Microsoft Office 2000. Page Maker 6.5, Corel DRAW 9.0, Internet & E-mail, Hardware. Children Course, English & Tamil தட்டெழுத்து வகுப்புக்கள் மற்றும் Colour& Black and White Typesetting செய்து கொடுக்கப்படும். Software Developments. Computer Assembling & Sales. Trouble Shooting & Services. அத்துடன் Spoken English Classes நடாத்தப்படுகின்றன.

**D.S. COMPUTER STUDIES**

Internet & E-mail dsocm@mail.visual.com
No.6A, Hekitta Road, Wattala. 075-349247.



## மலையாள மாந்திரிகத்தின் வெற்றிகள்

நேற்றல்ல இன்றல்ல தொண்டு தொட்டு 33 வருடமாக உலக மாந்திரிக சக்கரவர்த்தியாக விளங்குவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக வேலைகளில் நன்மைக்கு இடமுண்டு தீமைக்கு இடமில்லை. இப்படி செயல் புரிவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக துறையில் வருமான வரி செலுத்துவது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக துறைக்கு வழிகாட்டியாக வரையறுக்கப்பட்ட நிறுவனமாக P. K. SAAMY ASSOCIATE (PVT) LTDஐ உருவாக்கியது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாடிக்கையாளரின் நலனை கருதி இரகசியத்தை பாதுகாப்பது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாழையடி வாழையாக மக்களுக்கு உண்மை சேவை புரிவது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

தீரும் பிரச்சினைகளுக்கு திட்ட வட்ட திகதி குறித்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசதியற்றோருக்கு தான தர்மம், இலவச சேவை செய்து கொடுப்பது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசியத்தால் திருமணம் செய்து கொள்பவருக்கும் 25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மாத்திரமே! கட்டுப்பாட்டுடன் காதலன் வசியம் செய்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வெளிநாட்டவருக்கு விஷேசமாக அந்தந்த ஆட்களுக்கு உரியவரிடம் பார்சல் போய் சென்றடைய உலகளாவிய ரீதியில் பிரதிநிதித்துவம் அமைத்து வைத்திருப்பவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மதசார்பற்ற சேவை செய்பவர் யார் என்றால் அவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

செய்துகொள்ளும் மாந்திரிக வேலைகளுக்கு Gurantee Card கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

அறவிடும் பணத்திற்கு முத்திரையுடன் ரசீது வழங்குபவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே! 33 மாந்திரிகர் வேலை செய்வதும் என்றால் அது இங்கு தான்.

இனி என்ன உங்கள் பிரச்சினை? மாற்றான் மனைவி தொல்லையா, மனதுக்கு ஏற்றவரை திருமணம் செய்து கொள்ள வேண்டுமா, திருமண வயது ஏறிக் கொண்டே போகிறதா, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரிந்தவரை அழைத்து எடுக்க, விடுபட்ட திருமணம் நிறைவேற, மனதார நேசித்தவரை மற்றவர் விரும்பாமல் இருக்க, சூனியம் விடுபட, கல்வி சிறப்படைய, வியாபார விருத்தியடைய, தீராத நோய் தீர, பிரயாண தடை நீங்க, அன்றன்றாடு மனநிம்மதியுடன் மற்றவர் மனப்பொறாமை தவிர்த்து வாழ, தீயோர் நட்பு கிட்டாமல் இருக்க, மாங்கல்ய மன நிறைவு பெற உங்கள் குறைகளுக்கு முன்னறிவித்தலுடன் நேரில் வருவது சாலச்சிறந்தது. வெளிநாட்டவர்களுக்கு இலங்கை நேரப்படி காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை தேவைகளுக்கு டாக்டர் பீ. கே. சாமி அவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைப்பேசி இலக்கங்கள்: 466271, 466571, 466620. 466820 431137, 470615, 342463, 344831, இவை மட்டுமல்ல அருள் ஞானத்துடன் கூறப்படும் தெட்டத்தெளிவான ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடக்கப்போவது, திருமணம் எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, வாழ்வில் அதிர்ஷ்டம் எப்போது என்பதை என்னால் கூறமுடியும். திகதி மாதம் குறித்து அனுப்பவும். கைரேகை என்றால் திகதி தேவையில்லை. இன்னும் சிறுவர்களுக்கு பிறந்த நாள் பரிசாக தங்க வலம்புரி சங்கு மோதிரத்தை நீங்கள் ஒரு குழந்தைக்கு அணிவிப்பது மூலம் இதன் நன்மையாக சிறுவர்களின் எதிர்காலம் சிறப்படைய நீங்கள் ஒரு தூண்டுகோள் ஆகலாம். அருள் ஞானம் பெற்ற தங்க வலம்புரி சங்கு மோதிரம் எம்மிடம் உண்டு.

கருணாகரபூசனம், உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி
**Prof.Dr. P. K. Samy (J.D.G.A.N) JP**

162, Kotahena Street, Mayfield Road, Colombo 13.
Fax: 0094-1-342464 E-Mail : drpksamy@sltnet.lk
Web site: www.imexpolanka.com/drpksami
Web site: www.lgo.slt.lk/swami

**வெளிநாட்டவர்களுக்கான விஷேட சலுகை:**
வெளிநாட்டவர்கள் எமது கட்டணத்தை கம்பியூட்டர் மூலம் செலுத்தி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம். வழமைபோல் நவரெலியாவிலும் எமது சேவை நடைபெறுகிறது.

## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**

50, THEATRE ROAD, NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349

## தபால் மூலம் விஞ்ஞானம்

G.C.E. (A/L) ~ இரசாயனவியல்
Year - 9, 10, 11 ~ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
Year - 5 ~ ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்: குமார் சிவப்பிரகாசம்

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்

**P.T.C** 14, Covington Road, Batticaloa.

தங்களின் வாழ்க்கையின் கஷ்டங்கள், காதல் தோல்வி, வேலை வாய்ப்பு, கல்யாணத் தடை, பரீட்சைத் தோல்வி, வாகன அனுமதிப்பத்திரம், குடும்பப் பிரச்சனை, கணவன்-மனைவி கருத்துவேறுபாடு ஆகியவற்றை நிவர்த்தி செய்ய என்னை அணுகவும். பிரச்சனை நிவர்த்தியாகியபின் பணம் பெற்றுக் கொள்ளப்படும்.

சந்திக்கும் நேரம்: காலை 10.00 இருந்து மாலை 8.00 மணிவரை

விலாசம் :
MR. ALI, 55. Rue des Poissonniers, 75018 Paris, France.
தொலைபேசி-0142552036

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஜூலை 23 முதல் 30 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 609388.

**கல்முனையில் ஜூலை 08,09 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் ஜூலை 15, 16 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNIINN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

நீங்கள் நீரிழிவு நோயால் அவதிப்படுபவரா? அல்லது உடம்பில் அதிக கொலஸ்ரால் இருப்பதால் கவலைப்படுகிறீர்களா? கவலை வேண்டாம்!




Baraka பாவித்து உங்களது வாழ்வை சுகமாக கழியுங்கள்.

- உணவு நிகரியாகவோ
- நோய் எதிர்ப்புசக்தியை அதிகரிக்கவோ
- குருதிச் சீனியை கட்டுப் படுத்தவோ
- கொலஸ்ரோலின் அளவைக்கட்டுப்படுத்தவோ பாவிக்கலாம்.

ஒவ்வொரு மருந்தும் பல மருத் துவ ஆராய்ச்சிகளிற்கும் வைத்திய பரிசோதனைகளிற்கும் உட்படுத்தப் பட்டு, அது பூரண திருப்தியளிக்கும் பட்சத்திலேயே பாவனைக்கு உகந்தது என அங்கீககரிக்கப்படுகிறது. Baraka கருஞ்சீரக எண்ணெயும் மேலுள்ள படிகளைத் தாண்டியதே.

நவீன மருத்துவ ஆராய்ச்சிகள் மூலம் கருஞ்சீர கமானது ஒமேகா-3, கொழுப்பமிலம், புரதம், கனியுப்பு, விற்றமின், போன்றவற்றைக் கொண்டிருப்பது நிரூபிக்கப்பட்டுள்ள தோடு அது நாளாந்த பாவனைக்கு உகந்தது எனவும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. மேலும் நோயெதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும்எனவும்நிரூபணமாகியுள்ளது.

புரதம் ✓ விற்றமின்கள் ✓ கனியுப்புகள் ✓




ஆயுர் வேத திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றது

நாடு முழுவதிலும் உள்ள எல்லா பாமசிகளிலும் கிடைக்கிறது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேசிய மருத்துவப்பிரிவினால் (IIM) நடாத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளில் இருந்து கருஞ்சீரத எண்ணெய்யை தொடர்ந்து பாவிப்பதன மூலம் இரத்தத்திலுள்ள சீனியின் அளவையும், கொலஸ்ரோலின் அளவையும் கட்டுப்படுத்த முடியும் என நிரூபிக்கப்பட்டு ள்ளது.

EXPO LANKA

இன்னும் Baraka ஆனது சுகாதார, சுதேசிய வைத்திய அமைச்சின் ஆயுள்வேத மருத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு பல வைத்தியர் களினாலும் சிபாரிசு செய்யப்பட்டு வருகிறது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி,
Customer Care, Baraka, No 11A, Mile Post Avenue, Colombo - 03

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தேர்தலுக்குப் பின் தீர்வா? தீர்வுக்குப் பின் தேர்தலா?

முறைப்படி பார்த்தால் இந்தப் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் ஒகஸ்ட் 24ம் திகதியுடன் முடிகிறது. அதாவது இன்னும் சுமார் ஒன்றரை மாதங்கள். இந்த ஒன்றரை மாதங்களுக்குள் தமிழ் பேசும் மக்களின் இதுவரைகால அரசியற் பிரச்சனைகளுக்கெல்லாம் தீர்வு கண்டு விடப்போவதாகக் கூறுவது குறித்துத்தான் வியப்புத் தலைதூக்குகிறது. ஒருபுறம் வேடிக்கையாக இருந்தாலும், மறுபுறம் சில கவலைகளும் தோன்றத்தான் செய்கின்றன.

முதலில் இவ்வாறு ஒன்றரை மாதத்தில் கடுகதி வேகத்தில், இந்நாட்டின் பாரிய பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியுமென்பது உண்மையானால் ஏன் அதை இவ்வளவு காலம் செய்யாதிருந்தனர் என்ற கேள்வி இயல்பாகவே தோன்றுகிறது. இந்த அரசாங்கம் பதவியேற்று ஆறுவருடங்களாகச் செய்ய முடியாது போன காரியத்தை இறுதித் தருணத்திலாவது செய்ய முடிந்தால் நல்லதுதான். ஆனால் முடியுமா?

அந்த ஆறு வருடமும் எங்கே போயிருந்தது இந்த அக்கறையும் அவசரமும்?

இதே ஜனாதிபதி, இதே அமைச்சர்கள், ஆனால் அதைவிடுத்து எதிர்க்கட்சியுடன் தீர்க்கப்படவேண்டிய பிரச்சனைபோன்றே அரசாங்கம் இதைக் கையாண்டது. பெருமளவு காலப்பகுதியை அது எதிர்க்கட்சியுடன் முரண்டுபிடிப்பதும் தாஜா பண்ணுவதுமாக எதிர்க்கட்சியுடனான 'ஊடலிலேயே' செலவழித்தது. தமிழ்த் தரப்பை அதிகம் கருத்திலெடுக்காமலே இருந்தது.

தமிழ்த்தரப்பினை ஏதோ சிங்களப் பெரும்பான்மைக்கட்சிகளுக்கிடையில் முடிவொன்றைக் கண்டுவிட்டு அதை அரசாங்கம் எடுத்துச் சொன்னால், பதுமைகள் போல ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாகவே எடைபோட்டிருந்தது.

இதில் வருத்தத்துக்குரிய விடயம் என்னவென்றால் இப் பிரச்சனையில் பிரதான பாத்திரவாளியாக இருந்தும் கூட, தமிழ்த் தரப்பின் குரலுக்கு முஸ்லிம் காங்கிரசுக்கிருந்த முக்கியத்துவம் கூட வழங்கப்படவில்லை. ஏனெனில் அந்த அரசியல் திட்ட ஆலோசனைகளில் முஸ்லிம் காங்கிரசின் அழுத்தம் காரணமாக முஸ்லிம் மாகாணமான தென்கிழக்கு மாகாணம் பற்றிய ஒரு வினோதமான தீர்மானமும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதாவது வடக்கும் கிழக்கும் விடயங்கள் இன்னும் இன்னும் மலினப்படுத்தப்படவே செய்யப்பட்டது.

இதுவே இதுவரை கண்ட விளைவு. இந்த கீழ் நோக்கிச் சரிந்த விளைவுப் போக்கை மேல்நோக்கி நிமிர்த்தியெடுத்து ஒரு தீர்வைக் கண்டுவிடலாமென இப்போது முனைவது காலம் பிந்திய செயல் என்று தோன்றினாலும், அதையும் தான் பார்ப்போமே என்று எண்ணுவோரும் உள்.

ஆனால் அந்த வகையில் கூட இப்போது நடந்தேறும் விடயங்களை நாம் உன்னிப்பாகக் கவனித்தால் பெரிய அளவில் நம்பிக்கை தரக்கூடிய தடயங்களைக் காணக்கூடியதாக இல்லை.

ஒரேயொரு வித்தியாசம் என்னவென்றால் இப்போது அரசாங்கமும் எதிர்க்கட்சியும் கூடுதலான விடயங்களில் இணக்கம் கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுவதே. அதைப் பெரும் மகிழ்ச்சிக்குரியதாகக் கொள்ள முடியாது. ஏனெனில் அவர்கள் இணங்கிய விடயங்கள் யாவும் தமிழ்த் தரப்பினருக்கு ஏற்புடையவையாகக் கொள்ளமுடியாது.

எனினும் இவ்விருதரப்பும் உடன்பட்ட ஒரு தீர்வே நீடித்து நிலைக்கக்கூடியதாகவும் இருக்க முடியும் என்பது உண்மை. ஆனால்

இந்தக் கேள்விக்கு மத்தியிலும் தற்போது பரபரப்பாக ஆராயப்படும் விடயம் இடைக்கால நிர்வாகசபை. இடைக்கால நிர்வாக சபை என்பது குறித்து ஒரு மயக்கமான கருத்துருவமே இப்போது தெரிகிறது. அது எதுவென்பது இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை. உண்மையில் 'இடைக்கால நிர்வாகம்' என்பதே தனியொரு தீர்வாக இருக்க முடியாது. ஒரு தீர்வை அமுலுக்கு கொண்டுவரும் பொறிமுறையொன்றாகவே 'இடைக்கால நிர்வாகம்' அமைய முடியும்.

இந்த வழிமுறை சரியா தவறா என்பது கேள்விக்குரிய விடயமல்ல. இந்த வழிமுறை பல்வேறு நாடுகளிலும் பல சந்தர்ப்பங்களில் கையாளப்பட்ட ஒரு தற்காலிக ஏற்பாடே. அதனை இங்கு மேற்கொள்வதை தவறென்று கூறமுடியாது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் தோன்றிய மாகாணசபைத் தீர்வுக்குக்கூட ஆரம்பத்தில் இடைக்கால நிர்வாக சபையே ஏற்பாடு செய்யப்பட்டது.

அவ் ஏற்பாட்டில் 11 பேர்கொண்ட அச் சபையில் விடுதலைப்புலிகளுக்கு 7 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. அச் சபையை கொள்கையளவில் ஏற்று விடுதலைப் புலிகள் கிறது. சிங்கள, அல்லது முஸ்லிம் மக்கள் பற்றிய எந்தத் தீர்மானமும் சபையின் பெரும்பான்மையோடுமட்டுமன்றி, அச்சபையின் சிங்கள, முஸ்லிம் அங்கத்தவர்களின் பெரும்பான்மை உறுப்பினர்களாலும் அங்கீகரிக்கப்பட வேண்டுமென மிக நுணுக்கமான ஏற்பாடுகளுக்கு முனைகிறார்கள். ஆனால் இதில் அவர்களை அக்கறை காட்ட முன்தள்ளிய அதே விடயத்தை, ஏன் பாராளுமன்றத்திலும் ஏனைய மாகாண சபைகளிலும் தமிழர்கள் மற்றும் முஸலிம்கள் பக்கத்தில் கடைப்பிடிக்க ஏற்பாடு செய்யக்கூடாது என்ற கேள்விக்கு இவர்களால் பதிலளிக்க முடியுமா?

எது எவ்வாறாயினும் இந்த முனைப்புகள் யாவும் எதிர்வரும் பொதுத்தேர்தலின் எல்லைக் கோட்டை முன்னிட்டே மேற்கொள்ளப்படுகின்றன என்பது யாவருக்கும் தெளிவாகத் தெரிந்த விடயம். அதற்கான குறுகியகால எல்லைக்குள் இப்பிரச்சனைக்குத் தீர்வு காணுவதென்பது கேள்விக்குரிய விடயம்.

அதில் எதிர்க்கட்சியுடன் மட்டுமன்றி தமிழ்த்தரப்பினருடன் இணக்கம் காண்பது முதற்தேவை. அவ் விணக்கப்பாட்டுக்கு விடுதலைப் புலிகள் உடன்படுவது அடுத்த கட்டம்.

இதே எம்.பிக்கள், இதே எதிர்க்கட்சி, இதே தமிழ்க்கட்சிகள் தான் அப்போதும் இருந்தனர், இப்போதும் இருக்கின்றனர். அப்படியாயின் அப்போது செய்ய இயலாது போனது ஏன்? இப்போது செய்யக்கூடியதாக என்ன புதிதாகத் தோன்றியுள்ளது?

இப்போதும் இப் பிரச்சனைக்கு இந்த அரசாங்கத்தால் தீர்வுகாண முடியுமா இல்லையா என்பது ஒருபுறமிருக்க, தீர்வுகாண முயற்சிக்கிறது என்று வைத்துக் கொண்டால் இவ்வளவு காலமும் தற்போதையது போன்ற ஒரு முயற்சியில் இறங்காததற்கான காரணம் அக்கறையின்மையா?

அக்கறையின்மையெனில் அதை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. ஏனெனில், இந்த அரசாங்கம் பதவிக்கு வரும்போதே இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்படாததைப் பிரதானமான குற்றச்சாட்டாக முன்வைத்துத் தான் பதவிக்கு வந்தது. அதன் பின் அது குறித்து அக்கறையின்றி இருக்க அதற்கு எந்த நியாயமும் இல்லை.

1994ல் பதவிக்கு வந்து, சில மாதங்கள் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அது முறிவடைந்தபின் 1995ல் ஜனாதிபதி ஒரு அரசியல் தீர்வு ஆலோசனைகளை வெளிப்படுத்தியது உண்மையே. ஆனால் அந்த ஆலோசனைகளிலும் தமிழ்த் தரப்பிற்கு சில அம்சங்களில் குறைபாடுகள் இருக்கத்தான் செய்தன. குறிப்பாக விடுதலைப் புலிகள் அதை நிராகரித்திருந்தனர்.

எனினும் அந்த ஆலோசனைகளுக்குத் தன்னும் பின்னர் என்ன நடந்தது? அதில் தமிழ்த்தரப்பினருக்கு இருந்த குறைபாடுகளை நீக்கிப் பூரணப் படுத்துவதற்குப் பதிலாக, எதிர்க்கட்சிகளுடன் இணக்கம் காண்பது என்ற கோதாவில் வருடக் கணக்காக ஊறப்போட்டுப் பிசைந்து இறுதியில் 1997ல் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கவென ஒரு தீர்வுத் திட்ட ஆலோசனைகளை முன்வைத்தது அரசாங்கம். ஆரம்பத்தில் கூறப்பட்டிருந்தவைகூட இங்கே மறுக்கப்பட்டு, மாற்றப்பட்டு மேலும் சிதைந்த ஒரு வடிவமாகத்தான் இது காணப்பட்டு தமிழ்த்தரப்புக்கு ஏமாற்றத்தையே கொடுத்தது.

'எதிர்க்கட்சியைத் திருப்தி செய்வதற்காக', என்று கூறிக்கொண்டு இந்த மாற்றங்களைச் செய்திருந்த போதிலும், இதற்குக்கூட எதிர்க்கட்சியின் இணக்கத்தை அப்போது அரசாங்கத்தால் பெற முடியவில்லை.

இனப்பிரச்சனையென்பது பிரதானமாகத் தமிழ்த் தரப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலாகத் தீர்க்கப்படவேண்டிய பிரச்சனை.

இணைந்தால் (அதுவே தமிழ்த் தரப்பின் கோரிக்கை) தென்கிழக்கு மாகாணம் தானாகவே கிழக்கிலிருந்து பிரிந்துவிடும். அது பிரியவேண்டுமா இல்லையா என்பதற்கு எந்தத் தேர்தலும் தேவையில்லை. ஆனால் வடக்கும் கிழக்கும் பிரியவேண்டுமா என்பதற்குத்தான் ஒரு தேர்தல் தேவை. அதாவது தமிழ்த் தரப்பின் கோரிக்கைக்கு தேர்தல் மூலமே அரசாங்கம் விடை தரப் பிடிவாதமாய் நின்றாலும் முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கைக்கு அவ்வாறு எந்தக் கெடுபிடியும் இல்லை.

இதை எப்படி விளங்கிக் கொள்வது? முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பது என்பதனாலான சலுகையா? அப்படியானால் தமிழ் மக்களின் போராட்டமெல்லாம் அர்த்தமற்ற கூத்தா?

இதேவேளை வடக்கும் கிழக்கும் இணையும் பட்சத்தில் தான்தோன்றியாக உருவாகும். இத் தென்கிழக்கு மாகாணத்துடன் அம்பாறை மாவட்டச் சிங்களவர் சேர்ந்திருக்க விரும்புகிறார்களா? அல்லது அருகிலுள்ள சிங்கள மாகாணத்துடன் இணைய விரும்புகிறார்களா என்பதற்கு இன்னொரு தேர்தல் வைக்கப்படும். இது எப்படியிருக்கிறது? அதாவது அந்த உத்தேச முஸ்லிம் மாகாணத்துள் இருக்கக் கூடிய சிங்கள மக்கள் பற்றிக் கரிசனைப்படும் அரசாங்கம் அங்குள்ள தமிழர்கள் பற்றி எண்ணிப் பார்க்கத் தயாராக இல்லை.

ஆனால் வடக்கும் கிழக்கும் பிரிய நேர்ந்தாலோ....? தென்கிழக்கு முஸ்லிம் மாகாணம் உருவாகப் போவதில்லை. அது கிழக்கு மாகாணத்துடனேயே சேர்ந்திருக்கும்.

அதாவது வடக்கும் கிழக்கும் சேர்ந்தால் நாம் பிரிவோம், பிரிந்தால் நாம் சேர்வோம் என்றவகையான ஒரு புதுமையான வாதம் இது. உண்மையில், முஸ்லிம்களின் பிரச்சனைக்கு முஸ்லிம் மாகாணம் ஒன்றுதான் தீர்வென முஸ்லிம் காங்கிரஸ் கருதினால், வடக்கு கிழக்கும் சேர்ந்தாலென்ன, பிரிந்தாலென்ன, முஸ்லிம் மாகாணம் தமக்குத் தேவையென்றல்லவா நின்றிருக்க வேண்டும்? ஆக, முஸ்லிம் மாகாணம் பற்றிய கருதுகோள் அவர்களின் ஓர் அடிப்படைப் பிரச்சனை குறித்த தீர்வாக எழாமல், சந்தர்ப்பவாதமாக உபயோகிக்கப் படுகிறதா என்ற கேள்வியை, அது முன்வைக்கப் படுகின்ற பாங்கே கிளப்பிவிடுகிறது.

எவ்வாறாயினும் முஸ்லிம் காங்கிரஸின் இந்த அழுத்தத்துக்கு அடி பணிந்து அரசாங்கத்தின் 1997ல் முன்வைத்த ஆலோசனைகளில் இது எழுத்து மூலமாகவே முன்வைக்கப் பட்டுள்ளது. அதேவேளை தமிழ்த் தரப்பினர் அழுத்த அழுத்த, அவர்கள் அழுத்தும்



அத்தீர்வு தமிழ்த் தரப்பினருக்கும் உடன்பாடானதாக இருக்கவேண்டுமென்பது அடிப்படையான விடயம். அந்த அடிப்படையை விடுத்து காணப்படும் தீர்வு, தீர்வாகவன்றி திணிப்பாகவே அமையும்.

ஆனால் திணிப்புக்களை ஏற்கும் நிலையில் இன்றைய சூழ்நிலை இல்லை. திணிப்புக்களை ஏற்க மறுத்தே இந்த யுத்தமே உருவானது. யுத்தத்தை நிறுத்த உதவாத எந்தத் தீர்வும் பயன்தரப்போவதில்லை.

இந்த நிலையில் தற்போது அரசாங்கம் எதிர்க் கட்சியுடன் பேசி இணங்கிய விடயங்கள் தொடர்பாகத் தமிழ்த் தரப்பினருடன் பேச வேண்டியுள்ளது. உண்மையில், தமிழ்த் தரப்பினருடன் இணக்கம் கண்ட விடயங்களில் எதிர்க் கட்சியினரை இணங்க வைப்பதற்குப் பதிலாக தற்போது தலைகீழாக, எதிர்க்கட்சியினருடன் இணக்கம் கண்ட விடயங்களைத் தமிழ்த் தரப்புடன் ஆராய வருகிறார்கள். இங்கே இப் பேச்சுவார்த்தைகள் எவ்வளவு தூரம் வெற்றியளிக்கப் போகிறது என்பதைப் பொறுத்தே இம் முயற்சியின் பலாபலன் வெளிப்படப் போகிறது. இதையடுத்து விடுதலைப் புலிகள் இது குறித்து என்ன பதிலளிக்கப் போகிறார்கள் என்ற மிகப்பெரிய கேள்வி தொக்கி நிற்கிறது. விடுதலைப் புலிகள் என்ன கூறுவார்கள் என்று பார்ப்பதை விட, விடுதலைப் புலிகள் தமது தமிழீழப் போராட்டத்திலிருந்து இறங்கி வரக்கூடிய என்ன அம்சத்தை இது கொண்டிருக்கப் போகிறது என்று கேட்பதே பொருத்தமானது.

கூட அதன் முதலமைச்சர் பதவிக்கு சிவஞானம், பத்மநாதன், மாத்தையா ஆகிய மூன்று பெயர்களை முன்மொழிந்தார்கள். எனினும் பின்னைய அரசியல் முரண்பாடுகளின் வளர்ச்சிகள் அதனைச் சிதைத்து யுத்தத்துக்கு வழிவகுத்தமை பழைய கதை.

எனவே இடைக்கால நிர்வாக சபையொன்றை அமைப்பதல்ல சர்ச்சைக்குரிய விடயம். எதனை நிர்வகிப்பதற்கு இந்த சபை என்பதே பிரதானமான விடயம். ஏற்புடைய ஒரு தீர்வு காணப்பட்டால் அதனை நிர்வகிக்க அமையும் இடைக்கால நிர்வாகசபை சர்ச்சைக்குரியதாக இருக்காது. ஆனால் தீர்வுபற்றி எந்த முடிவுமன்றி வெறும் சபை பற்றிப் பரபரப்பாகப் பேசுவது அர்த்தமற்றது.

எனினும் இந்த இடைக்கால நிர்வாகசபை 5 வருடங்கள் பொறுப்பிலிருக்குமென்றும், ஐந்து வருடத்தினுள் வடக்கும் கிழக்கும் இணைந்திருப்பதா என்பதற்கான சர்வசன வாக்கெடுப்பு கிழக்கில் நடத்தப்படுமென்றும் முடிவெடுத்துள்ளார்கள். இதில் 5 வருடங்களுக்கு வடக்கும் கிழக்கும் தற்காலிகமாக இணைந்திருக்க வழியேற்பட்டுள்ளமையை மட்டும் எண்ணி இதைச் சாதகமானதாகக் கருத முடியாது. ஏனெனில் வடக்கும் கிழக்கும் பிரிக்கப்படமுடியாத பிரதேசம் என்ற தமிழ்த் தரப்பின் அடிப்படைக் கோட்பாடுக்கு இங்கே சவால் எழுகிறது. மேலும் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை வடக்கையும் கிழக்கையும் பிரிப்பது அவர்களின் தாயகக் கோட்

**-நரன்-**

பாட்டுக்கு முரணானது. தமிழீழத்தைக் கைவிட்டுவிட்டு வரும்படி விடுதலைப் புலிகளிடம் கோருபவர்கள் அவர்களிடம் தாயகக் கோட்பாட்டைக்கூட மதிக்கத்தயாரில்லையெனில் புலிகளை இவ்ஏற்பாட்டுக்குச் சம்மதிக்க வைக்க முடியுமா என்பதை உணரவில்லை.

அதனால் இப்போது விடுதலைப் புலிகளை இவ் விடைக்கால நிர்வாகசபையில் உள்ளடக்குவதா இல்லையா என விவாதிப்பது வேடிக்கையானது. இது புல்லுக்கட்டொன்றை வைத்துக் கொண்டு புலியை விருந்துக்கு அழைப்பதா என்று விவாதிப்பதைப் போன்றது.

இதேவேளை இந்த 5 வருடகால உத்தேச சபை தமிழருக்கு என்ன தரப்போகிறது என்பது முடிவாக முன்னர் சிங்களவரும் முஸ்லிம்களும் அதில் பாதிப்படையக்கூடாதென்ற பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றியே கரிசனை காட்டப்படு

அதற்கான சாத்தியங்கள் எதுவும் தென்படவில்லை. ஆனால், இந்தத் தீர்வுத் திட்டத்துக்கான ஆராய்வுகள் முடிவுறுமுன்னரே புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இதை நிராகரித்து விட்டார். இந்நிலையில் அடுத்த நகர்வுகளே நம்பிக்கையின்மையுடன் தான் தொடர்வதாக இருக்கும்.

ஈற்றில் புலிகளால் ஏற்கப்படாது எனத் தெரிந்த ஒரு தீர்வு ஆலோசனையில் ஏனைய கட்சிகள் எவ்வளவு ஆர்வத்துடனும் இதய சுத்தியுடனும் பங்கேற்கும் என்பதும் கேள்விக்குரியது. ஆக, அதைத் தமது தேர்தல் அரசியல் லாபத்துக்கான மேடையாகப் பயன்படுத்தும் மனோபாவமே பிரதான கட்சிகளிடம் மேலிட வழிசெய்யும்.

இவற்றைவிட இத் தீர்வுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப் படவேண்டும். அவ்வாறானால் அதற்கு எதிர்க் கட்சியும், தமிழ்க்கட்சிகளும் சாதகமாக நிற்க வேண்டும். அதுமட்டுமன்றி பாராளுமன்றம் கலைக்கப்படுமுன்னர் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும். அல்லது பாராளுமன்றத்தை நீடிக்க எதிர்க்கட்சி உடன்பட வேண்டும்.

பாராளுமன்ற நீடிப்புக்கு எதிர்க்கட்சி உடன்படாவிட்டால் கட்சி மாறும் சட்ட மூலத்தை நிறைவேற்றி, எதிர்க்கட்சியினரின் ஒருபகுதியினரை ஆளுங்கட்சிக்கு மாற்றியெடுக்கும் திட்டமும் உண்டு. அப்படி மாற்றி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றாலும் கூட சர்வஜனவாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும்.

இந்த நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாதுபோனால் அரசாங்கத்தால் தேர்தலுக்கு முன் தீர்வுத்திட்டத்தை நிறைவேற்ற முடியாது போகும். அப்படியானால் தீர்வு தேர்தலுக்குப் பின்னால் பிற்போடப்பட்டு விடும்.

அவ்வாறு ஏற்படின் தேர்தலின் பெறுபேறுகளைப் பொறுத்தே தீர்வுத்திட்டத்தின் எதிர்காலமும் அமையும். ஒருவேளை தேர்தலில் ஐ.தே.க. அதிகாரத்துக்கு வந்துவிட்டால் விடயம் மிகவும் சிக்கலானதாகிவிடும். ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்குமான இழுப்பறியே பிரதான விடயமாகி தீர்வு பற்றிய முனைப்பு மங்கிப்போய்விடும்.

எனவே தீர்வின் பின் தேர்தல் நிகழுமாயின் கிடைப்பது ஏற்கக்கூடிய தீர்வாக அமையுமா என்பது சந்தேகம். ஆனால் தேர்தலின் பின் தீர்வானால் அதுகூடக் கிடைக்குமா என்பதே சந்தேகமாகிவிடும்.

## செய்திச் சிதறல்

★ அரசாங்கத்தின் உத்தேச அதிகாரப் பரவலாக்கல் திட்ட யோசனைகளில் இந்த நாட்டின் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய எந்த அம்சமும் இடம் பெறாமையினால் இந்த யோசனையை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இவ்வாறு விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரான அன்டன் பாலசிங்கம் இலண்டனிலிருந்து வெளியாகும் 'தமிழ் கார்டியன்' பத்திரிகைக்களித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். அரசின் யோசனைகள் தமிழர்களுக்கு எதுவிதமான உரிமைகளும் வழங்காமல், பெரும்பான்மையினரான சிங்கள மக்களின் நலன்களைப் பேணிப் பாதுகாப்பதிலேயே இந்த யோசனைகள் முக்கிய கவனம் செலுத்தியுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

★ அவசரகாலச் சட்ட விதிகளுக்கு அமைவாக யாழ் குடாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கும் அரசப்படைகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் மோதல்கள் தொடர்பான எந்தச் செய்தியும் வெளியிடப் படலாகாது என்று செய்தித் தணிக்கை பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது. இதனடிப்படையில் கொழும்பிலிருந்து வெளியான 'சண்டே லீடர்' ஆங்கில வார ஏடும் 'இரிதா பெரமுன' என்ற சிங்கள வார சஞ்சிகையும் 6 மாதங்களுக்கு பிரசுரிக்கப் படலாகாது என்று தடுக்கப்பட்டன. இத் தடைச் சட்டம் சட்ட விதிகளுக்கு முரணானது என்றும் தகுதி வாய்ந்த அதிகாரியாக, தகவல் திணைக்களத்தின் தலைவர் ஆரியருபசிங்க பதவியேற்றதும் சட்ட விதிகளுக்கு ஒவ்வாத நியமனம் என்றும் 'சண்டே லீடர்' பத்திரிகை நிறுவனத்தின் சார்பில் அதன் ஆசிரியர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இவ்வழக்கை விசாரித்த நீதிபதிகள் இப் பத்திரிகைகளைத் தடை செய்தது சட்ட விரோதம் என்றும் செய்தித் தணிக்கையின் சட்ட விதிகளுக்கு முரணானது என்றும் தீர்ப்பளித்துள்ளார்.

★ அரசாங்கத்தின் புதிய அரசியல் யாப்பு விதிகள் தொடர்பாக ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சிக்குமிடையில் இதுவரை காலமும் சுமுகமாக நடைபெற்று வந்த பேச்சு வார்த்தைகளால் எதுவிதமான பலனும் கிடைக்கப் போவதில்லை, என்று அரசியல் அவதானிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். புதிய அரசியல் அமைப்பின் நகலை ஆகஸ்ட் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து மக்கள் பிரதிநிதிகளின் அங்கீகாரத்தைப் பெறுவது தொடர்பாக இரு கட்சிகளுக்குமிடையில் உடன்பாடு காணுவது சந்தேகத்துக்கிடமாக இருப்பதனாலேயே இந்த அச்சம் தோன்றியுள்ளது. ஆகஸ்ட் 24ம் திகதியன்று பாராளுமன்றத்தின் ஆயுட் காலம் முடிவடைகிறது. ஒக்டோபர் இறுதிக்குள் பொதுத்தேர்தல் நடைபெறுமென்றும் ஜனாதிபதி அவர்களும் ஆளுங்கட்சியின் தரப்பிலுள்ள பல பிரபலஸ்தர்களும் கருத்துக் கூறி வருகின்றனர். இதே வேளை ஆளுங்கட்சியில் ஒரணியினர் புதிய அரசியல் யாப்பினை பாராளுமன்றம் முழுமையாக விவாதித்து ஒரு முடிவுக்கு வருவதற்கு போதுமான அவகாசம் இல்லையென்பதனால், பாராளுமன்றத்தின் ஆயுட் காலத்தை மேலும் சில வருடங்களுக்கு ஒத்தி வைத்து விடலாமென்று ஆலோசனை கூறி வருவதாகவும் தகவல்கள் மூலம் அறியமுடிகிறது.

★ 'சண்டே லீடர்' பத்திரிகை மீதான தடை உயர் நீதி மன்றத்தால் சட்ட விரோதமானதெனத் தீர்ப்பளிக்கப்பட்டு விட்ட போதிலும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'உதயன்' தமிழ்த் தினசரி மீதான தடை ஜூலை 3ம் திகதி வரை நீக்கப்படவில்லை மேலும் 19ம் திகதியன்று இப்பத்திரிகை அலுவலகமும் அச்சகமும் யாழ் பிராந்தியப் பொலிஸ் அதிபரினால் பூட்டி சீல்வைக்கப்பட்டது. பத்திரிகை முகாமையாளர் இது தொடர்பாக பொலிஸ் அதிகாரியிடம் வினவியபோது, அவர் நீதிமன்றத்தீர்ப்பின் பிரதி தமக்குகிடைக்கவில்லை என்பதனால், தன்னால் எதுவும் செய்யமுடியாதெனத் தெரிவித்துவிட்டாராம்.

# அண்டை மண்டலத்தில்....

## மோசடியை மறைக்க மதத்தை துணைக்கழைப்பதா?

இலட்சோப இலட்சம் இரசிகர்களைக் கொண்டிருக்கும் கிரிக்கெட் நட்சத்திரங்கள் இப்போது சூதாட்ட விவகாரத்தில் சிக்கி உதிரும் நட்சத்திரங்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள்.

தென்னாபிரிக்க முன்னாள் கப்டன் ஹன்ஸி குரோன்யே கிரிக்கெட் சூதாட்ட ஊழலில் வசமாகச் சிக்கிக் கொள்ள, அவர் மீது விசாரணைகள் நடந்து வருகின்றன. கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையாக குரோன்யே விசாரணைகளின் போது சூதாட்டத்தில் சம்பந்தப்பட்ட இந்தியப் பிரபலங்களின் பெயர்களும் வரத் தொடங்கியுள்ளன.

இந்தியக் கிரிக்கெட் இரசிகர்களின் மனதில் நீங்காத இடம்பிடித்திருக்கும் இந்திய முன்னாள் கப்டன் முஹம்மட் அஸாருதீன், 'இஸ்லாமியர்' என்ற பேதத்தை இவர் எழுப்பியிருப்பது இந்திய கிரிக்கெட் இரசிகர்களுக்கு வேத னையை ஏற்படுத்தி இருக்கிறது.

ஹன்ஸி குரோன்யே கிரிக்கெட் சூதாட்ட மோசடி குறித்து கேப்டவுனில் நீதிபதி எட்வின் கிங் முன்னிலையில் கடந்த 15ம் திகதி சாட்சியமளித்தார். அப்போது,

"1996ல் இந்தியாவில் கான்பூர் நகரில் டெஸ்ட் போட்டியில் விளையாடினோம். மூன்றாவது நாள் ஆட்டத்தின் போது இந்திய கப்டன் அஸாருதீன் எனக்கு போன் செய்து ஒரு ஹோட்டலுக்கு வரச் சொன்னார். அங்கே ஓர் அறைக்குக் கூட்டிச் சென்று முகேஷ் குப்தா என்ற சூதாட்டக்காரரை எனக்கு அறிமுகப்படுத்தினார். அவர் மூலமாக 30 இலட்சம் அமெரிக்க டொலரை இலஞ்சமாகப் பெற்றேன்" என்று திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டார்.



குரோன்யேவின் இந்தக் குற்றச் சாட்டுக்களை மறுத்த அஸாருதீன், "இந்திய அரசும், டெல்லி பொலிசாரும்தான் குரோன்யே பற்றிய உண்மைகளை உலகுக்கு வெளிப்படுத்தினர். அதற்குப் பழி வாங்கவே தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை சதி செய்துள்ளது. அதன் வெளிப்பாடு தான் குரோன்யேவின் வாக்கு மூலம். அவரது குற்றச்சாட்டை மறுக்கிறேன்!, அலட்சியப் படுத்துகிறேன்" என்று கூறியிருந்தார்.

அஸாருதீன் இத்தோடு நிறுத்தியிருந்தால் அவர் மீது மதிப்பும் மரியாதையும் இருந்திருக்கும். ஆனால் அஸாருதீன் வாயிலிருந்து இதுநாள் வரை வெளிவராத வார்த்தைகள் வெளிப்பட்டன.

"நான் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவன். 10 ஆண்டு காலமாக கப்டனாக இருந்ததால் பொறாமைப்பட்டு என்மீது அபாண்டமாகப் பழி சுமத்துகிறார்கள். கவாஸ்கரும், ரவி சாஸ்திரியும் என் புகழுக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டும். என்ற நோக்கத்தில் எனக்கெதிராக பழி சுமத்துகிறார்கள்" என்று அஸாருதீன் திடீரென தனது மதத்தையும் துணைக்கழைத்துத் தன் மதிப்பைத் தானே குறைத்துக் கொண்டார்.

மதக்கலவரங்களால் படாதபாடு பட்டுக் கொண்டிருந்த இந்தியா, கிரிக்கெட் அணிக்கு அஸாருதீன் கப்டனாகத் தேர்வு செய்யப்பட்ட போது, எந்தவொரு இந்தியக் குடிமகனும் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த ஒருவர் கப்டனாக இருக்கக் கூடாது என்று அப்போது எதிர்க்கவில்லை.

20 ஆண்டுகளுக்கு முன்பு சாதாரண அரசு ஊழியரின் மகனாக இருந்த அஸாருதீன் இன்று 150 கோடி ரூபாக்கு அதிபதி. இவ்வளவு சொத்தும் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி சம்பாதித்திருக்கலாம் என்பது இயலாத காரியம் என்று பெரும் தொழிலதிபர்களே கூறி வருகிறார்கள்.

எனவே இவ்வளவு பெரும் சொத்துக்களுக்கு அதிபராக வேண்டுமானால் வேறு வழிகளில் அவர் பணத்தைக் குவித்திருந்தால் மட்டுமே இயலும் என்பதும் அவர்களது கருத்தாக இருக்கின்றது.

15 வருடங்களுக்கு முன் ஒரு ஸ்கூட்டர் வாங்கவே ஏங்கிய அஸாருதீன் இன்று விதம் விதமான ஸ்போர்ட்ஸ் கார்களில் வலம் வருகிறார். இவை ஒவ்வொன்றும் 40,50 இலட்சம் ரூபாய் மதிப்புடையவை என்று இது போன்ற கார்களை உபயோகிப்பவர்கள் தெரிவிக்கிறார்கள்.

அஸாருதீனின் சொந்த ஊரான ஹைதராபாத்தின் விட்டல்வாடி என்ற இடத்தில் மட்டுமே அவருக்கு சொந்த வீடு இருந்தது. இப்போது மும்பையிலும் ஹைதராபாத்திலும் அஸாருதீனுக்கு ஏராளமான சொத்துக்களும் சொகுசு பங்களாக்களும் உள்ளதாகக் கூறப்படுகிறது.

அரசியல் தலைவர்களுடன் நெருக்கமான தொடர்பு வைத்திருக்கும் அஸாருதீனுக்கு கிரிக்கெட் சூதாட்டக்காரர்கள் மட்டுமன்றி சர்வதேச கடத்தல்காரர்களுடனும் நெருக்கமான தொடர்பிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்தக் குற்றச்சாட்டுக்களை எல்லாம் மறுத்து வந்த அஸாருதீன், குரோன்யே தெரிவித்த குற்றச்சாட்டில் வசமாக மாட்டிக் கொண்டார். அதிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ள 'மதம்' என்ற கேடயத்தை கையில் எடுக்க, அதுவே அவருக்கு எதிரான வாளாக மாறிவிட்டது.


அஸாருதீன் இந்த அறிக்கைக்கு இந்திய மத்திய விளையாட்டுத்துறை இணை அமைச்சர் ஷாநவாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

"கிரிக்கெட் மோசடிப்புகாருக்கு ஆளான அஸாருதீன் அப்பிரச்சனையை வகுப்புவாதப் பிரச்சனையாக்க முயல்கிறார். இது மிகவும் துரதிஷ்டவசமானது. அபத்தமானது. சிறந்த கிரிக்கெட் வீரர் என்று அவரை நாடே கொண்டாடியது. அப்போதெல்லாம் இந்த வகுப்புவாதப் பிரச்சனை கிளம்பவில்லை. குற்றம் சாட்டப்பட்டுள்ளோர் பட்டியலில் அவரது பெயரும் இடம்பெற்றவுடன் இத்தகைய மலிவான பேச்சுக்களில் இறங்கி விட்டார்" என்று கண்டித்துள்ளார் ஷாநவாஸ்.

**திருமகன்**

அஸாருதீன் கையாண்ட மதப்பிரச்சனை இப்போது அவருக்கு எதிராகவே பிரதிபலிக்கத் தொடங்கியுள்ளன.

அண்மையில் அஸாருதீனைக் கண்டித்து கல்கத்தாவில் கிரிக்கெட் இரசிகர்கள் கண்டன ஊர்வலம் நடத்தினார்கள். அஸாருதீனின் உருவப்படத்திற்கு செருப்புமாலை அணிவித்து, அவருக்கு எதிரான கோஷங்களை எழுப்பியபடி இருந்தார்கள். ஊர்வலமாகச் சென்றார்கள். இதுபோன்ற கண்டன ஊர்வலங்கள் நாட்டின் பல பகுதிகளிலும் நடக்கின்றன.




---

வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள், அங்கு அவர்களுடைய தஞ்சம் கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதும் அவர்கள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுகின்றனர். அவ்வாறு இங்கு வருபவர்கள் படும் துயரம் தொடர்பாக மனித கௌரவத்துக்கான அமைப்பு விடுத்துள்ள அறிக்கையின் முதல் மூன்று பகுதிகளையும் கடந்த வாரங்களில் இங்கு தந்திருந்தோம். அதன் தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது.

### மேற்கு நாடுகளில் தஞ்சம் மறுக்கப்பட்டு

## திருப்பி அனுப்பப்படுவோர் இங்குபடும் துயரங்கள் (04)

மனித கௌரவத்துக்கான அமைப்பின் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம் அவர்கள், திருப்பி அனுப்பப்படுவோர் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்படுவது பற்றியும், அவ்வாறு கைதானோருக்கு பிணை மறுக்கப்படுவது தொடர்பாகவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் திரு.டக்ளஸ் தேவானந்தா (பா.உ) அவர்களுக்கு எழுதிய சில கடிதங்களின் விவரங்களை இங்கு தருகிறோம்.

**(அ) 28 ஏப்ரல், 1999**

கௌரவ டக்ளஸ் தேவானந்தா (பா.உ)

அவர்களுக்கு,

அன்புள்ள ஐயா,

தற்பொழுது நீர்கொழும்பு மற்றும் வெலிக்கடைச் சிறைச்சாலைகளில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் தமது பிள்ளைகள் பற்றி அவர்களின் பெற்றோர் அனுப்பி வைத்திருக்கும் விண்ணப்பங்களை தங்களுக்கு அனுப்பி வைத்துள்ளோம்.

பிறநாடுகளில் தஞ்சம் கோரி இவர்கள் இலங்கையை விட்டு அந்நாடுகளுக்குச் சென்றார்கள். இவர்கள் அந்நாடுகளுக்கு செல்லும்போது தங்களுடைய உண்மையான கடவுச் சீட்டில் விசா பெற்றே அந்நாடுகளுக்குச் சென்றார்கள். அவர்கள் பெய்யான ஆவணங்களுடன் செல்லவில்லை.

வெளிநாடுகளில் அவர்களுக்கு தஞ்சம் கிடைக்காமையினால் அவர்கள் நாடு கடத்தப்பட்டார்கள்.

அவர்கள் விமான நிலையத்தை வந்தடைந்ததும், 1998ம் ஆண்டுக்குரிய குடிவரவுச் சட்ட புதிய விதியான 42ன் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டனர். இவர்கள் தற்பொழுது சிறைவாசம் அனுபவிக்கின்றனர்.

இவர்கள் இந்த நாட்டு சட்ட விதிகள் எதனையும் மீறியவர்களுமல்ல. இந்நாட்டில் எந்தக் குற்றச் செயல்களையும் புரிந்தவர்களுமல்ல. புதிய சட்ட விதிகளுக்கமைய இவர்கள் குற்றஞ் சாட்டப்பட்டு தண்டனை அனுபவிக்க வேண்டியவர்கள் அல்ல. இது தொடர்பாக கௌரவ சட்டமா அதிபர் அவர்களுடன் இதுபற்றி, கலந்து பேசி இவர்களுக்கு உதவுமாறு நன்றியுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வண்ணம்,
(ஒப்பம்) மகேஸ்வரி வேலாயுதம்
செயலாளர்.

**1999 மார்ச் 27ம் திகதி எழுதிய கடிதம்.**

அன்புள்ள ஐயா,

நீர்கொழும்பு மற்றும் வெலிக்கடைச் சிறைச்சாலைகளில் தற்பொழுது சிறைத் தண்டனை அனுபவித்து வரும் பிள்ளைகளின் பெற்றார் அனுப்பியுள்ள விண்ணப்பத்தினை இத்தால் தங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். இவர்களுக்கு சிறைத் தண்டனை வழங்கியும், அபராதம் விதித்தும் தீர்ப்பு வழங்கிய நீதிபதி அவர்கள், சட்டத்தின் படியும் திருத்தங்களின் அடிப்படையிலும் நீதிமன்றம் இத்தண்டனையை விதித்துள்ளது. குடிவரவுச் சட்டத்துக்கான திருத்த விதி, தண்டனை வழங்குவது கடமைப்பாடு என்று தெரிவித்திருந்த போதும் எஸ் 303ம் இலக்க குற்ற நடவடிக்கை நெறியின் அடிப்படையில் சிறைத் தண்டனையை நீதிமன்றம் ஒத்தி வைக்க முடியும்.

இந்த நாட்டில் நிலவும் இனப்பிரச்சனை காரணமாக 5 இலட்சத்திற்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் இந்த நாட்டை விட்டே வெளியேறி இருக்கிறார்கள் என்பதை தாங்கள் அறிவீர்கள். தமிழர்களாக இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் இவ்வாறு வெளியேறுகிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு அத்தகையோர் மீது சிரத்தையும் அனுதாபமும் காட்டப்பட வேண்டும் என்பது எங்களுடைய கணிப்பாகும்.

இத்தகைய சூழ்நிலையில் புதிய சட்டத் திருத்தத்தின் அடிப்படையில் அவர்களுக்கு வழங்கப்படும் சிறைத் தண்டனை கொடுமையானதும் மனிதாபிமானமற்றதும் ஏற்றுக் கொள்ளமுடியாததுமாகும். ஆகவே இந்தச் சட்டம் நிராகரிக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

இது தொடர்பாக சட்டமா அதிபருடன் தாங்கள் தொடர்பு கொண்டு இந்தப் பிள்ளைகளுக்கு உதவவேண்டுமென்று நன்றிப் பெருக்குடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வண்ணம்,
(ஒப்பம்) மகேஸ்வரி வேலாயுதம்
செயலாளர்.

இதே போன்று, 1999 மார்ச் 19ம் திகதி ஒரு கடிதத்தை மகேஸ்வரி வேலாயுதம் எழுதியுள்ளார். நீர்கொழும்பு நீதிபதி, புதிய சட்டத்திருத்தத்தின் அடிப்படையில் ஒரு வருடச் சிறைத்தண்டனையையும் அபராதத்தையும் விதிக்கத் தொடங்கி விட்டார் என்று அக் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேற்கு நாடுகளிலிருந்து திரும்பிய பெருவாரியான தமிழர்கள் இவ்வாறு தண்டனை பெற்றுள்ளார்கள்.

1. கிளிநொச்சி, வட்டக்கச்சி, ஆசுப்பத்திரி வீதி 932ம் இலக்கத்தைச் சேர்ந்த சுவாமிநாதன் சுபவரதன், தஞ்சம் கோரி, 1996ல் நோர்வே சென்றார். அவர் அங்கிருந்து 23.01.1999ல் திருப்பி அனுப்பப்பட்டார். அன்றைய தினமே அவர் விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார். 27.01.1999ல் விடுதலை செய்யப்பட்டார்.

(இன்னும் வரும்)

அலசுவது-இராஜதந்திரி

# தகர்ந்தது தணிக்கை!

ஒரு ஜனநாயக அமைப்பின் இருகண்களாக நீதித்துறை,பத்திரிகைத்துறை ஆகியன விளங்குகின்றன.

இந்த இரண்டிலும் குளறுபடிகள், அல்லது தலையீடுகள் தோன்றும்போது ஜனநாயகம் அச்சுறுத்தலுக்குள்ளாகி விடுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை நீதித்துறை, பத்திரிகைத்துறை ஆகியவை அடிக்கடி அச்சுறுத்தலுக்குள்ளாகி வருவதையே அவதானிக்க முடிகின்றது.

நீதித்துறை, பத்திரிகைத்துறை என்பவை சுதந்திரமாகவும், பக்கச்சார்பற்றதாகவும், இயங்கி நியாயங்கள், அநியாயங்களை பிரித்தறிந்து நீதியை நிலைநாட்ட வேண்டியவையாக இருக்கின்றன.

இருந்தபோதிலும் இலங்கையில் நீதித்துறை, பத்திரிகைத்துறை என்பவை கடந்த சுமார் முப்பது வருடங்களாகவே பெரிதும் சங்கடத்துக்குள்ளாகி வருபவையாகவே இருக்கின்றன.

நீதிபதிகளின் நியமனங்கள், மற்றும் நியாயாதிக்கம் குறித்த அணுகுமுறைகள் என்பவை கடுமையான விமர்சனங்களுக்குள்ளாகியிருப்பதுடன் ஆட்சியதிகாரங்களுக்கு வருவோரின் செல்வாக்கிற்குட்பட்டதாகவே நீதித்துறை இலங்கையில் அண்மைக்காலங்களில் இருந்து வருகின்றதென குற்றச்சாட்டுகள் வெளிப்படுவதையும் அறிய முடிகின்றது.

பத்திரிகைத்துறையைப் பொறுத்தவரை இலங்கையில் முன்னணிச் செய்தி நிறுவனமாக ஏரிக்கரை (லேக்ஹவுஸ்) பத்திரிகை ஸ்தாபனமே விளங்குகின்றது.

இன்றைய எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பாட்டனார் அமரர் டி.ஆர்.விஜேவர்த்தன அவர்களே இந்த ஏரிக்கரை நிறுவனத்தை ஸ்தாபித்திருந்தார்.

இந்த நிறுவனமே இலங்கையில் ஆங்கில, சிங்கள, தமிழ் பத்திரிகைகளின் பிரசுரத்துக்கு முன்னோடியாக இருந்ததுடன், மேற்குறிப்பிடப்பட்ட மும்மொழிகளிலும் சிறந்த பத்திரிகையாளர்களையும் உருவாக்கி விட்டிருந்தது.

ஆனால் 1970ம் ஆண்டில் பதவிக்குவந்த சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்தை அரசுடமையாக்கி விட்டிருந்தது.

இந்த நடவடிக்கையே இலங்கையில் பத்திரிகைத்துறைச் சுதந்திரத்தின் மீது நடத்தப்பட்ட முதலாவது தாக்குதலாக விளங்கியிருந்தது.

பத்திரிகைத்துறையில் ஒரு விருட்சமாகவே விளங்கிய லேக்ஹவுஸ் நிறுவனத்தின் மீது சிறிமாவோ அரசாங்கம் கைவைத்ததையடுத்து இலங்கையில் பத்திரிகைத்துறை ஆட்டங்காணும் அறிகுறிகள் வெளிப்பட ஆரம்பித்தன.

ஏனெனில் இன்றிருப்பதுபோல அன்று அதிகளவு பத்திரிகைகள் வெளிவரவில்லை. அத்துடன் பொதுசன ஊடகத்துறை என்ற ரீதியில் வானொலி, தொலைக்காட்சி என்பவை விரிவடைந்திருக்கவில்லை.

லேக்ஹவுஸ் நிறுவனத்தை சிறிமாவோ ஆட்சி அரசுடமையாக்கியதை அன்று எதிர்க்கட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாகவே கண்டித்திருந்தது.

எதிர்க்கட்சித்தலைவராக அப்போதிருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன, சிறிமாவோ அரசின் லேக்ஹவுஸ் நிறுவனத்தை அரசுடமையாக்கும் செயலை பெரிதும் ஆட்சேபித்திருந்தார்.

ஆனால் 1977ம் ஆண்டில் ஜே.ஆர்.ஜயவர்த்தன பதவிக்குவந்ததும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சியை அறிமுகம் செய்து நாட்டில் ஏறத்தாழ ஒரு சர்வாதிகார அரசியலுக்கே வழியமைத்து விட்டிருந்தார்.

சிறிமாவோ ஆட்சியில் எதிர்க்கட்சியிலிருந்தபோது, லேக்ஹவுஸ் நிறுவனம் அரசுடமையாக்கப்பட்டதற்கு ஜே.ஆர்.ஜயவர்த்தன எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

ஆனால் ஜே.ஆர்.தாம் பதவிக்குவந்ததும் லேக்ஹவுஸ் நிறுவனத்தை அரசின் கட்டுப்பாட்டிலிருந்து அகற்றுவதை விடுத்து, மேலும் அதிகளவில் தமது அரசின் ஆதிக்கத்தை அந்த நிறுவனம் மீது செலுத்தினார்.

ஐ.தே.க.அரசு சார்பான பத்திரிகையாசிரியர்கள் நியமிக்கப்பட்டதோடு, லேக்ஹவுஸ் நிறுவனத்தின் நிர்வாக சபைக்கும் ஜே.ஆருக்கு விசுவாசமானவர்களே நியமிக்கப்பட்டனர்.

ஜே.ஆரின் ஆட்சியின் பின்னர் ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்த ரணசிங்க பிரேமதாஸா கூட லேக்ஹவுஸ் நிறுவனத்தை தமது மனம்போனபோக்கில் கையாண்டதுடன், அந்நிறுவனத்தின் பத்திரிகை அச்சிடப்படும் காகிதாதிகளைக்கூட தேர்தல் பிரசாரப் பிரசுரங்களை வெளியிடுவதற்கு உபயோகித்திருந்தார்.

இது தவிர ஐக்கிய தேசியக் கட்சி பதவியிலிருந்த காலத்திலேயே 'தி ஐலண்ட்' பத்திரிகையை ஆரம்பித்த உபாலி விஜேவர்த்தன மர்மமான முறையில் விமான விபத்தொன்றில் கொல்லப்பட்டிருந்தார்.

உபாலி விஜேவர்த்தன பயணஞ் செய்த அவரது தனிப்பட்ட ஜெட் விமானமொன்று மலேஸியாவிலிருந்து இலங்கைக்குப் பறந்து கொண்டிருந்த சமயம் நடுவானில் வெடித்துச்சிதறியிருந்தது. இச்சம்பவம் ஒரு நாசவேலையாகுமென்றே புலன் விசாரணைகள் மூலம் தெரியவந்திருந்தது.

இதேசமயம் வடக்கே யாழ்ப்பாணத்தில் பொதுசன நூலகம் தீயிட்டு எரிக்கப்பட்ட அதே இரவில் அங்கிருந்து வெளியாகும் ஈழநாடு பத்திரிகையும் காடையர் கும்பலொன்றினால் தீயிட்டு நாசமாக்கப்பட்டது.

ஈழநாடு நிறுவனத்தின் கொழும்புச் செய்தியாளராக இருந்த இ.கந்தசாமி என்பவர் விசாரணைகளெதுவுமின்றி நீண்டகாலம் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியிலேயே பிரபல ஆங்கிலப் பத்திரிகையாளரான ரிச்சார்ட் டி சொய்ஸா கொலை செய்யப்பட்டிருந்தார்.

வேறுபத்திரிகையாளர்கள் கூட அச்சுறுத்தப்பட்டிருந்தனர்.

கடந்தகாலங்களில் பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக மேற்கொண்ட பிரசாரங்களில் இலங்கையில் பத்திரிகைச்சுதந்திரம் நிலைநாட்டப்படுமெனவும் சூளுரைத்திருந்தது.

ஆனால் இன்றைய ஆட்சியாளர்களால்கூட பத்திரிகைச் சுதந்திரத்தை உரிய வகையில் பேணமுடியாதென்பதையே, கடந்த இரு மாதகாலமாக அமுல்செய்யப்பட்ட தணிக்கை நடவடிக்கை புலப்படுத்தியிருந்தது.

அனையிறவில் இராணுவத்துக்கு ஏற்பட்ட பின்னடைவையடுத்து இலங்கையில் பொதுசனத்துறை ஊடகங்கள் மீது முழு அளவில் தணிக்கை விதிக்கப்பட்டிருந்தது.



அத்துடன் கொழும்பிலிருந்து வெளியாகும் 'சண்டே லீடர்' ஆங்கிலப் பத்திரிகையும் தடைசெய்யப்பட்டதுடன், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'உதயன்' நாளிதழ் மீதும் தடைபோடப்பட்டிருந்தது.

தடைவிதிப்புக்குள்ளான 'சண்டே லீடர்' ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கூட சிலகாலத்துக்கு முன்னர் மிக மோசமான முறையில் நையப் புடைக்கப்பட்டு ஆபத்தான நிலையில் சிகிச்சைக்குள்ளாகியிருந்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

இதுதவிர 'சட்டன' என்ற சிங்களப்பத்திரிகை ஆசிரியர் மற்றும் எமது ஆசிரியர் நடராஜா அற்புதராஜா என்போரும் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

எனவே பத்திரிகைச் சுதந்திரம் மீதான அச்சுறுத்தல் என்பது தொடர்ந்து இருந்துவரவே காணப்படுகின்றது.

இருமாதங்களுக்கு முன்னர் வடக்கே இராணுவத்துக்கு ஏற்பட்ட இழப்புக்களையடுத்து தணிக்கைகொண்டுவரப்பட்டது. ஆரம்பத்தில் இராணுவச் செய்திகளுக்கே தணிக்கை என அறிவிக்கப்பட்ட போதிலும் பின்னர் ஏனைய அரசியல் செய்திகளுக்கும் தணிக்கை போடப்பட்டது.

இந்நிலையில் 'சண்டே லீடர்' ஆங்கிலப் பத்திரிகை மீது விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து மேற்படி பத்திரிகை ஆசிரியரும், சட்டத்தரணியுமான லசந்த விக்கிரமதுங்க இலங்கை உயர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

இவ்வழக்கை விசாரணை செய்த மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் 'சண்டே லீடர்' பத்திரிகைமீதான தடை சட்டவிரோதமானது எனத் தெரிவித்ததோடு, செய்தித்தணிக்கை கூட பத்திரிகைத்துறை சார்ந்த சட்டவிதி முறைகளுக்கு முரணானது எனத் தீர்ப்பளித்திருந்தது.

இத்தீர்ப்பின் மூலம் ஒரு பத்திரிகை மீது விதிக்கப்பட்ட தடை மட்டும் நீக்கப்படவில்லை. இலங்கையில் பொது சனத் தொடர்புத்துறைச் சாதனங்கள் அனைத்தின் மீதும் போடப்பட்டிருந்த தணிக்கை சட்டவிரோதமானது என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் இன்று திரும்புமிடமெல்லாம் குளறுபடியான தன்மைகளையே அவதானிக்கமுடிகின்றது. சட்டம், ஒழுங்கு என்பவை நிலைதளர்ந்து மக்கள் நீதித்துறையின் மீதே நம்பிக்கை இழக்கும் நிலை கூட தோன்றியிருக்கவே காணப்படுகின்றது.

நாட்டில் ஒரு குற்றச் சம்பவமோ, அல்லது வீதியில் ஒரு விபத்தோ நடந்துவிட்டால் மக்களே ஒன்று திரண்டு 'ஸ்தல விசாரணை' செய்து குற்றவாளிகளென்று தாம் கருதுவோர் மீது தண்டனை விதிக்கின்றனர்.

இதன் காரணமாக சட்டத்துக்கு முரணான முறையில் உயிர் உடமைகளுக்குச் சேதங்கள் விளைவதையும் காணமுடிகின்றது.

சட்டத்தின் பாதுகாவலர்கள் என்றிருப்போரின் அசட்டைத்தனமான போக்கு, நீதிமன்ற விசாரணைகள், தீர்ப்புக்கள் என்பவற்றில் ஏற்படும் தாமதங்கள் என்பவையே பொதுமக்களை சட்டம் ஒழுங்கில் நம்பிக்கையிழக்கச் செய்வதாகவும் இருக்கின்றது.

எனவே ஜனநாயகத்தின் முக்கிய தூண்களில் ஒன்றாக இருந்து வரும் பத்திரிகைத்துறை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் இலங்கையில் பாதுகாக்கப்பட்டுள்ளது.

செய்தித்தணிக்கையை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளமை பத்திரிகைச் சுதந்திரத்துக்கு உரமூட்டுவதாகவே இருக்கின்றது.

இராணுவ ஆட்சி, அல்லது ஒரு சர்வாதிகார ஆட்சி நிலவுகின்ற நாடுகளிலேயே பத்திரிகைச் சுதந்திரம் பாதிக்கப்பட்டு ஆட்சியதிகாரங்களில் இருப்போரின் நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன.

ஜனநாயக அரசியலை நடத்துவதாகக் கூறும் ஒரு நாட்டில் அரசியல் வாதிகளுக்கப் பேச்சுச் சுதந்திரம் இருப்பது போலவே பத்திரிகையாளர்களுக்கு கருத்துச் சுதந்திரமும் முழு அளவில் இருக்கின்றது. நீதித்துறையிலும் வழக்கு விசாரணைகளில் பாரபட்சமற்ற, மற்றும் அரசியல் தலையீடுகளற்ற நிலை ஜனநாயக நாடொன்றில் இருக்க வேண்டியதாகின்றது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சரும், சிரேஷ்ட வழக்கறிஞர்களில் ஒருவருமான லக்ஷ்மன் கதிர்காமர் கூட ஒரு மாதத்துக்கு முன்னர் செய்தித்தணிக்கையை கடுமையாக விமர்சித்து கருத்து வெளியிட்டிருந்தார். இதன் மூலம் ஆட்சியதிகாரங்களில் இருப்போர் கூட தமது மனச்சாட்சிக்கு விரோதமான முறையிலேயே தணிக்கையை அமுலாக்கியிருந்ததை அவதானிக்கமுடிந்தது.

செய்தித் தணிக்கையை அமுலாக்குவதில் கூட பாரபட்சமான போக்கே கடைப்பிடிக்கப்பட்டிருந்தது.

தணிக்கை அறிவிக்கப்பட்ட சமயத்தில் இலங்கையில் இருந்து இயங்குகின்ற வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களுக்கும் தணிக்கை ஏற்புடையதாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் நாளடைவில் வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் மீதான தணிக்கை நீக்கப்பட்டதுடன் உள்நாட்டுச் செய்திச் சாதனங்கள் மீதே தணிக்கை தொடர்ந்து இருந்து வந்தது.

இதன் மூலம் வெளி உலகுக்கு உண்மைச் செய்திகள் சென்றடைந்தன. ஆனால் உள் நாட்டில் உண்மைகள் மறைக்கப்பட்டு தகவல்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருந்தன.

தணிக்கை என்ற விடயத்தை நோக்கும் போது, பத்திரிகைத்துறையை மட்டும் பாதிக்கும் ஒரு சமாச்சாரமாக அது விளங்கவில்லை.

நாகரிகமான ஒரு சமூக அமைப்பையே கேலிக்கூத்தாக்கி விடுவதாகவே தணிக்கை விளங்குகின்றது.

வியட்நாமில் அமெரிக்கா நடத்திய நீண்ட யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதில் கூட பத்திரிகைகளின் பங்களிப்பே அபரிமிதமாக இருந்தது.

வியட்நாமிய யுத்தத்தின் இழப்புக்கள் கொடுமைகள் என்பவற்றை, அமெரிக்க தொடர்புச்சாதனங்கள் மிக விரிவாகவே தமது நாட்டுமக்களுக்கு எடுத்துக்கூறியிருந்தன.

இதனையடுத்து அமெரிக்க மக்கள் வியட்நாமில் யுத்தம் தொடருவதையும் அங்கே தமது நாட்டினர் வீணாகப் பலியாவதையும் கடுமையாகவே எதிர்த்தனர்.

வியட்நாமிய யுத்தத்துக்கு எதிராக உலக அபிப்பிராயத்தைக்கட்டியெழுப்புவதில் கூட பத்திரிகைகளின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகவே இருந்தது.

எதனையும் மூடிமறைத்து கண்ணாமூச்சி ஆட்டம்போடுவதை விட உண்மைகளைத் தெரியப்படுத்துவதன் மூலம் நியாயங்களை நிலைநாட்டமுடியும்.

இந்நிலையில் பத்திரிகைத் தணிக்கையை இலங்கையின் உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளதன் மூலம் ஜனநாயகத்தை உயிரோட்டமுள்ளதாக இருப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதென்றே கருதமுடிகின்றது.

## அதிரடி அய்யாத்துரை



**அண்மையில் எங்கட** தொலைக்காட்சிச் சேவைகள் அனைத்திலும் பல குழல் பீரங்கி எப்படிச் சுட்டுத் தள்ளுகின்றது என்று போட்டுக் காண்பித்தவை. புதிதாகப் பெறப்பட்ட கனரக ஆயுதங்களில் அதுவும் ஒன்று. ஒரு சில செக்கன்களில் எண்ணிப் பார்க்க முடியாதளவு வேட்டுக் களை அந்தப்பீரங்கி சுட்டுத்தள்ளியிருந்தது. இதனைப்பார்த்த நண்பர் ஒருவர் கூறுகையில்; பீரங்கி நல்லாத்தான் வேலை செய்யுது. ஆனால் கைதவறி மற்றப்பக்கத்துக்கு அப்பீரங்கி போய்ச் சேர்ந்தால் சுட்டிபுரம் கண்ணகை அம்மன் கோயில் பூங்காவனத்தில வாணவேடிக்கைபார்த்த கதையாகத்தானிருக்கு மென்றார். சிரிப்பைக் கஷ்டப்பட்டு அடக்கவேண்டியிருந்தது.

**சனத் ஜயசூரியர் சகடயோகக்காரராக** மாறியிருந்தாலென்ன அவர் செஞ்சரிகள் போடும்போது ஏதோ சாதனையாக அவைமாறி விடுகின்றன. இத்தடவை கண்டியில் அவர் அத்தப்பத்துவுடன் சேர்ந்து எடுத்த 335 ஓட்டங்கள் இலங்கை அணியின் ஆரம்பத்துடுப்பாட்டக்காரர்கள் போட்ட ஒரு சாதனையாகவே இடம்பிடித்திருக்குது.

**கலாபூஷணம் இரா.பத்மநாதன்** அவர்களது பேட்டி ரூபவாஹிணியில் ஒளிபரப்பாகியிருந்தது. தந்தை செல்வாவுக்கு இருந்த கர்நாடக சங்கீத இரசனை பற்றிச் சொல்லியிருந்தார் இரா.பத்மநாதன். தந்தைபற்றி இன்னுமொரு விடயம், ஆடி வேல் விழா கொழும்பில் களைகட்டியிருந்த காலத்தில் மிகப்பிரபலமான தமிழக நாதஸ்வர வித்வான்கள் கொழும்பு வந்து கச்சேரி நடத்தினர். அப்போதெல்லாம் சாதாரண இரசிகர்களோடு ஒருவராக நின்று எவருமே கண்டுகொள்ளாதவாறு நாதஸ்வரக் கச்சேரிகளை தந்தை செல்வா தம்மை மெய்மறந்து கேட்டு ரசிப்பாராம். இக்காலத்தில ஒரு தமிழ் அரசியல் புள்ளி அப்படி நின்றால் அம்போதான்.

**இலண்டன் விம்பிள்டன்** டென்னிஸ் போட்டிகளில் இலங்கைத் தமிழ்ப் பெண் ஒருவரும் கலந்து கொண்டுள்ளார். அப்பெண்ணின் பூர்வீகம் தான் இலங்கை. ஆனால் அவரும் நம்மட ஏனைய சொந்த பந்தங்களைப் போல கனடாவில் குடியேறிவாழ்கிறார். இலங்கையில் இருந்தால் கிடைக்காத பெருமையை புலம் பெயர்ந்த நாட்டிலிருந்து பெற்றுள்ளார் அத் தமிழ்ப்பெண்.

**தலைநகரில் அண்மைக் காலங்களில்** தரமான ஆங்கிலத்திரைப்படங்கள் தலைகாட்டத் தொடங்கியிருக்கின்றன. இரசிகர்களுக்கு நல்ல விருந்தாக இருக்குது. உள்நாட்டுத் திரைப் படத்துறையை ஊக்குவிக்க வேண்டுமென்று வெளிநாட்டுப் படங்களைத்தடுப்பதால் பயனில்லை. தங்கம் தங்கம்தான். வெள்ளி, வெள்ளி தான். மட்டரகமான இரசனைகளை உசுப்பி விடாது தரமானவை எங்கிருந்தாலும் அவற்றுக்கு வழிவிட வேண்டும்.

## உண்மையில் நடந்த கதை

**( 2 வாரங்கள் மட்டும்)**

*ஒரே உருவ அமைப்புள்ள இருபெண்களை ஒருவன் கொன்றிருக்கிறான். இதற்கான காரணகர்த்தா மணி பொலிசாரின் துப்பாக்கி வேட்டால் சாகிறான். அவனிடம் வாய் மொழி எடுக்க முடியவில்லை.*

# நடந்த கதை

# கொலையாளி யார்?

## புஷ்பா தங்கத்துரை



"ஆச்சரியமா இருக்கே! அப்போ விசாரணை தேவை! ஸ்டூடியோ எப்படி எரிஞ்சுது?"

இன்ஸ்பெக்டர் பதி, தாமே அந்த ஸ்டூடியோவிற்குச் சென்றார்.

இன்னும் அது தீயணைக்கும் இலாகா பாதுகாப்பிலிருந்தது. தீ ஏற்பட்ட விதத்தை அவர்கள் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் பதி தம்மை அறிமுகப் படுத்தினார்.

ஸ்டூடியோவில் அதிகம் நாசமாக வில்லை. சொற்ப சேதங்கள்தான்!

ஓர் அறையிலிருந்த பழைய அலமாரிகள் முழுமையும் பழம் ஆயுதங்கள் இருந்தன. உண்மையில் ரமணியைவிட இந்த மணியிடம் அதிகம் பொருள்கள் இருந்தன.

"சார்! உண்மையில் எனக்கு ஒரு சந்தேகம்! இந்த ஸ்டூடியோவுக்கு இந்த மணியே தீ வச்சிட்டானோன்னு!"

இதைச் சொன்னவர் தீப்படை அதிகாரி.

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"வேறே காரணமே இல்லை!"

பதிக்கு அது சுரீர் என்று பட்டது.

மேலும் சோதனை போட எண்ணினார். அங்குள்ள மேசையைத் திறந்து பார்த்தார். கடிதங்களையும், தாள்களையும் பார்த்துக் கொண்டே வந்தார். ஒரு கவர் கிடைத்தது. உள்ளே பார்த்தபோது முதல் படம் அவரை உலுக்கியது.

ஒரு வெட்ட வெளியில் வித்யா படுத்திருந்தாள். அவளை அவன் காதலோடு அணைக்கப் போயிருந்தான்.

திடுக்கிட்டார் இன்ஸ்பெக்டர் பதி.

"தெரிந்துவிட்டது சார்! வித்யாவின் ஃபோட்டோ இது!" என்றார்.

துணை இன்ஸ்பெக்டர் விசுவும் பார்த்தார்.

"இப்போது எல்லாம் வெட்ட வெளிச்சம். இந்த மணி, இந்தப் பெண் வித்யாவை காதலித்திருக்கிறான்!"

"சார்! இந்த ஃபோட்டோவில் வித்யா இளவயசிலே இருக்கிறா!" என்றார் விசு.

"ரைட்! நான் அதைக் கவனிச்சாச்சு! வித்யா அப்போது கல்லூரி மாணவியாக இருக்கலாம்! இவன் அவளைக் காதலிச்சிருக்கிறான். ஆனா அவள் வேறே ஒருத்தனைத் திருமணம் செய்திருக்கிறாள். இவன் அவளையும், அவள் கணவனையும் கொன்றிருக்கிறான்!"

"கணவனை எதற்குச் கொல்கிறான்?

இன்ஸ்பெக்டர் பதி பதில் சொல்லவில்லை!" போலீஸ் நிலையத்திற்கு வந்தார்கள். விசு அந்தப் ஃபோட்டோவைக் கையிலேயே வைத்திருந்தான்.

உள்ளே வந்து சிறிது நேரத்தில் "சார்!" என்று திடும் என்று அழைத்தான் விசு.

பதி தலையைத் தூக்கினார்.

"இந்தப் பாருங்க! இந்தப் பெண் வித்தியாசமா இருக்கிறா! வாய் மூக்கு, காது எல்லாத்தையும் பாருங்க!"

பார்த்தார் பதி. அவர் பார்வையும் பிரமித்தது. இந்தப் ஃபோட்டோவில் சின்ன சின்ன வித்தியாசங்களும் இருந்தன. அவைகளைப் பொருட்படுத்த வேண்டாம் என்று நினைத்தார்.

"சார்! காது பக்கத்திலே இந்த பொடிமச்சம் பாருங்க! இது இறந்துபோன வித்யா கிட்டே இல்லை" என்றான் விசு.

பதி ஒத்துக்கொண்டார்!

ஃபோட்டோவின் பின்புறம் பார்த்தார்கள். அதில் ஸ்டூடியோ பெயர் மங்கி இருந்தது. திருச்சி என்ற பெயர் மட்டும் தெரிந்தது.

விசு திருச்சிக்கு அனுப்பப்பட்டான்!

இரண்டு நாட்களில் விசாரணை செய்து விட்டுத் திரும்பி வந்தான்.

பதி ஆவலோடு அவன் கூறிய செய்திகளைக் கேட்டார்.

"ஃபோட்டோவில் இருந்த அந்தப் பெண்ணின் பெயர் ரூபா! கிட்டத்தட்ட வித்யா போலத்தான் இருந்தாள் அவள்!

அவள் படிக்கும்போது ஒரு கல்லூரி மாணவன், அவளைக் காதலித்திருக்கிறான்.

அதற்கு ரூபாவின் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள்.

அந்த் இளைஞனே பின்னர் ரூபாவின் பெற்றோரிடம் சென்று பெண் கேட்டிருக்கிறான்.

அவர்கள் அவனை அவமானப்படுத்தி அனுப்பிவிட்டார்கள்!

அப்போதிலிருந்து அந்த இளைஞன் பைத்தியம் பிடித்ததுபோல் இருந்தான்.

சில மாதங்களில் பெற்றோருடன் ரூபா கொடைக்கானலுக்குச் சென்றபோது ஒரு விபத்தில் இறந்து விட்டாள்.

சோகத்துடன் ஊருக்குத் திரும்பிய அவள் பெற்றோர் அவளைப் பற்றிய செய்திகளைப் பரப்பியபோது, இளைஞன் அதை நம்பவில்லை! பெண்ணை எங்கேயோ அனுப்பி விட்டு அவனுக்காக அப்படிப் பொய் சொல்கிறார்கள் என்று நினைத்தான். பின்னர் இந்த இளைஞன் ஊரை விட்டுப் போய்விட்டான்! வேலூர் போனான் என்று கேள்வி!

"அவன்தான் இந்த மணியனா?" என்றார் பதி.

"அப்படித்தான் இருக்கணும் சார்!

இருந்தாலும் வேலூர்லே விசாரிச்சுட்டா நல்லது..." என்றான் விசு!

அடுத்தது வேலூருக்குச் சென்றான் அவன்.

இரண்டு நாட்களில் திரும்பி வந்தான்.

"சார்! வேலூர் இன்ஸ்பெக்டர்கிட்ட காட்டின உடனே, "அய்யய்யோ! இந்த ஆள் உங்க ஊரிலேயா இருக்கிறான்? இங்கே அவன் தேவைப்படுகிறானே! ரெண்டு வருஷம் முன்னாடி நடந்த கொலைக் கேஸ்!" என்று சொன்னார்.

எனக்குச் சந்தேகம் வந்துடுத்து சார்! 'கொலை ஆனது ஒரு பெண்தானே?' என்று கேட்டேன்.

"ஆமாம்!"னு சென்னார்.

வித்யா படத்தை அவர்கிட்டே காட்டினேன்!

ஆச்சரியத்தோட பார்த்தார்.

அவர் "சார்! இந்தப் பெண்தான்" என்று இழுத்தார்.

"ஆனா வித்தியாசம் உண்டு அவ்வளவு தானே?"ன்னு கேட்டேன்.

"ஆமாம்!"னு சொன்னார்.

"மணி அங்கேயும் ரூபா போல ஒரு பெண்ணைப் பார்த்திருக்கிறான். அவளை அடைய முயன்றிருக்கிறான். அவளும் கிடைக்கலை. அவளையும் கொன்னுட்டு வந்துட்டான்! இப்போ அந்த வேலூர் கேசுக்கும் அவன் தேவைப்படறான்!" என்று முடித்தான் விசு.

பதிக்கு சட்டென்று எண்ணங்கள் ஓடின! சிறிது யோசனையில் இருந்தார்.

"விசு! இந்த மணி, ஒரு மன வியாதிக்காரன்! இன்னும் அந்த ரூபா இறந்துபோனதாக அவன் நம்பலை! அவளை மாதிரி பெண்ணை எங்கேக் கண்டாலும் அவளைக் கொன்னிருக்கிறான்!

"ஏன் கொல்லணும் சார்?"

"அதுதான் மன வியாதி! ரூபா மாதிரி உள்ள ஒரு பெண் பூமியிலே வாழறதிலே அவனுக்கு விருப்பமில்லை. கொன்று விடறான்! இப்போ ஆளை உடனே தேடி ஆகணும்!"

மணியைத் தேடினார்கள்.

புலன் விசாரித்ததில் ஒரு நண்பரின் பிளாட்டில் இருப்பதாகத் தெரிந்தது.

பதி, தனியாகப் போக விரும்பவில்லை. படையுடன் சென்றான். கதவு தட்டப்பட்டது. கதவு திறக்கவில்லை.

கதவு உடைக்கப்பட்டது. உள்ளே போன பொலீசை துப்பாக்கியால் சுட்டான் மணி. நல்லவேளை, அது அவர் தொடை ஓரமாக ஓடியது. அடுத்தகணம் ஒரு பொலீஸ்காரர் அவனைச் சுட்டுவிட்டார். தலையில் அடி!

உடனே ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டான்.

அவன் கையிலிருந்த துப்பாக்கியை போரன்சிக்காரர்கள் ஆராய்ந்தார்கள்.

ரமணி தம்பதிகளை அந்தத் துப்பாக்கியால்தான் சுட்டிருக்கிறான் என்று ஆராய்ச்சியில் தெரிய வந்தது.

மணி, ஆறு மாதம்வரை உயிரோடு இருந்தான். ஆனால் நினைவு திரும்பவேயில்லை.

அவனோடு அந்தகேஸ் முடிக்கப்பட்டு விட்டது.

கொலை நடந்த அன்று மணி, அந்த தம்பதியர் பிளாட்டுக்குப் போயிருக்கிறான். அங்கே என்ன நடந்ததோ! தம்பதிகளைச் சுட்டுக் கொன்றிருக்கிறான்.

மணி... இவர்கள் இருவரையும் தனது மறைந்து போன காதலி ரூபா என்ற நினைத்திருக்கிறான்.

இவர்கள் இருவரையுமே காதல் செய்ய முயன்றிருக்கிறான்.

இருவருமே எதிர்த்திருக்க வேண்டும்.

எனவே இருவரையுமே தீர்த்திருக்க வேண்டும்.

அது ஒன்றுதான், அவன் கொலை செய்ய ஒரு காரணமாகத் தோன்றியது.

வேறு எதுவும் தெரியவில்லை.

(இக்கதை முடிந்தது; இருப்பினும்... நடந்த கதை தொடரும்)

## உலகப் பெரும் பணக்காரர்கள்

உலகின் மிகப் பெரும் பணக்காரராக மைக்ரோ சொஃப்ட் கம்பியூட்டர் நிறுவனத்தின் பில் கேட்ஸ் இந்த வருடமும் முதலிடத்தில் இருக்கிறார். அவருடைய சொத்து மதிப்பு 60 பில்லியன் டொலர். அதாவது 6 ஆயிரம் கோடி டொலர். நம்நாட்டு மதிப்பில் 47 ஆயிரத்து 400 கோடி ரூபா. (என்ன தலையைச் சுற்றுகிறதா?)



பில்கேட்ஸ்



லொரி



வாரன்

அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'ஃபோர்பஸ்' என்ற பத்திரிகை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. உலகில் 100 கோடி டொலருக்கும் மேல் சொத்துள்ளவர்கள் எண்ணிக்கை இந்தவருடம் 482 ஆக உயர்ந்திருக்கிறது. கடந்த வருடம் 465 ஆகும்.

'ஃபோர்பஸ்' வெளியிட்ட அந்தப் பட்டியலில் முதல் 5 இடங்களில் உள்ளவர்கள் இவர்கள்.

1. பில்கேட்ஸ்-60 பில்லியன் டொலர்
2. லொரி எலிசன்-47 பில்லியன் டொலர்
3. வாரன் பஃபெட்- 28 பில்லியன் டொலர்
4. போல் அலன்- 28 பில்லியன் டொலர்
5. சவுதி இளவரசர் அல்வலீத் பின்தலால்--20 பில்லியன் டொலர்

முதல் பத்து இடங்களில் வந்துள்ள கோடீஸ்வரர்களில் 5 பேருக்கு வயது 47 என்பது குறிப்பிடத்தக்கது.

தாங்களாகவே உழைத்து முன்னுக்கு வந்தவர்கள், அல்லது மூதாதையர்கள் விட்டுச் சென்ற சொத்துக்களைத் தொழிலில் முதலீடு செய்து பெரும் பணக்காரர்களாக உயர்ந்தவர்களையே இப்பட்டியலில் ஃபோர்பஸ் சேர்த்திருக்கிறது.

இப்படியில்லாத கோடீஸ்வரர்களும் நிறையப்பேர் இருக்கிறார்கள். அத்துடன் ராஜாக்கள், ராணிகள் சர்வாதிகாரிகள் என்று தனிப்பணக்காரர்கள் பட்டியலும் உண்டு. அவை தனியாக வெளியிடப்பட்டிருக்கின்றன.

## கல்கத்தா காளிபக்தர் கங்குலி



இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் சௌரவ் கங்குலி மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்தவர். கல்கத்தா காளி பக்தர்.

இவர் இந்திய அணிக்குக் கப்டனானது காளியின் வரம் தான் என்று திடமாக நம்புகிறார் கங்குலி.

எந்தச் சோதனைக்காலத்திலும் மனம் தளராமல் இருக்க, மூன்று மந்திரங்களைக் கடைப்பிடிக்க காளிதான் உறுதுணையாக இருந்து வருகிறார் என்று கூறி வருகிறார் கங்குலி.

இவர் எந்தப் பேட்டிக்குச் சென்றாலும் இவரது சூட்கேசில் மூன்று மந்திரங்கள் அடங்கிய சிறு பளபளப்பான காகிதம் இருக்கும்.

'கனவு காண் கடுமையாக உழைக்க மறவாதே'; 'தோல்வி வரும் துவண்டு விடாதே'; 'குறிக்கோளை எட்ட மனதில் ஊக்கம் தேவை.'

இந்த மூன்று மந்திரங்கள் தனக்கு வாழ்க்கையில் பல தடவைகள் உதவியிருப்பதாகக் கூறியுள்ளார் கங்குலி.

இவர் உடுப்புக்களை எடுக்க சூட்கேஸைத் திறக்கும் போதெல்லாம் இந்த மந்திரத்தைப் பார்க்காமல் இருக்க மாட்டார்.

## பெண்களுக்கும் எங்கும் பாதுகாப்பில்லை

வளர்ந்து வரும் நாடுகளிலும், வறுமை தாண்டவமாடும் நாடுகளிலும் தான் பெண்களின் நிலை மோசமாகவுள்ளதாகவும் ஆண்களினால் கொடுமைப்படுத்துவதுபோலவும் பொதுவான கருத்து நிலவி வருகிறது.

ஆனால் நவீன நாகரிகம் சிறந்து விளங்கும், பெண்கள் சுதந்திரம் கொடிகட்டிப் பறக்கும் பணக் காரநாடுகளான அமெரிக்கா, ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளில் பெண்களின் நிலை திருப்தி கரமான நிலையில் இல்லை என்று ஐக்கிய நாடுகள் சபை நடத்திய ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவில் 6 நிமிடங்களுக்கு ஒரு முறை ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு ஆளாகிறார். அங்கு நடக்கும் பாலியல் வன்முறைகளில் 85 சதவீதமானவை பொலிஸின் கவனத்துக்கு வருவதே இல்லை. 5 சதவீதமானவர்கள் பாலியல் வன்முறைக்காக சிறை செல்கின்றனர்.

கனடாவில் 4 பெண்களில் ஒருவர் தனது வாழ்க்கையின் ஏதாவது ஒரு கட்டத்தில் பாலியல் வன்முறையை அனுபவித்துள்ளார்.

ஃபிரான்ஸ் நாட்டின் வன்முறையில் பாதிக்கப்படும் 95 சதவீதத்தினர் பெண்கள் தான், இதில் 51 சதவீதத்தினர் தங்கள் கணவர்களால் கொடுமைப்படுத்தப் படுகின்றனர்.

## துயரத்திலும் பெரும் துயரம்



தமிழ்த்திரையுலகில் எம்.ஜி.ஆர்., சிவாஜி, ஜெமினி படங்கள் அந்தக் காலங்களில் வருடத்திற்கு மூன்று, நான்கு தான் வெளிவரும். ஆனால் தென்னகத்து ஜேம்ஸ்பாண்ட் என அழைக்கப்பட்ட மறைந்த ஜெய்சங்கரின் படங்கள் வருடத்திற்கு 10 வரை வெளியாகும்!

அந்த விகிதத்தில் பார்த்தால் தமிழகத்தில் உள்ள சுமார் 2000 திரையரங்குகளுக்குத் தொடர்ந்து தொழில் கொடுத்துள்ளார் ஜெய்சங்கர்.

வெள்ளிக்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் இவர் நடித்த படங்கள் வெளியாவதால் இவருக்கு வெள்ளிக்கிழமை நாயகன் என்றும் ஒரு பெயருண்டு.

இவர் அறிமுகமான 'இரவும் பகலும்' இயக்குநர் ஜோசப் தளியத் ஒருமுறை, ஜெய்சங்கரிடம், "நீ எனக்கு உதவி செய்வதாக நினைத்தால் அதை ஒரு கருணை இல்லத்திற்கு உதவுவதன் மூலம் செய்துவிடு!" என்று கூறினார்.

அதன் பிறகு கருணை இல்லத்திற்கு உதவுவதே ஒரு போதையான பழக்கம் போலாகி விட்டது ஜெய்சங்கருக்கு. ஏதாவது ஒரு கலைநிகழ்ச்சிக்கு அழைத்தால் கூட அதில் ஒரு பங்கை அனாதை இல்லத்திற்கு அளித்து விடுவார்.

போலித்தனமில்லாத இயல்பாகப் பழகும் பழக்கமுள்ள ஜெய்சங்கருக்கு எதிரிகளே கிடையாது. எல்லாரும் நண்பர்கள் தான். இப்படிப்பட்டவரின் இறுதிக்காலத்தில் நடந்த துயரமான சம்பவம் இது:

இவருக்குத் திடீரென நெஞ்சுவலி வர, அதைப் பார்த்த இவரது மனைவி, தாங்கமுடியாமல் மூச்சையாகி விட்டார். ஜெய்சங்கரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று விட்டார்கள். மனைவிக்கு வீட்டில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரியில் ஜெய்சங்கர் இயற்கை எய்தி விட்டார். மனைவிக்கு இந்த விஷயத்தைச் சொன்னால் மனைவியின் உடல் நலம் மோசமாகி விடும் என்று இவருக்குச் சொல்லாமல், ஜெய்சங்கருக்குச் சொந்தமான இன்னொரு வீட்டில் ஈமச்சடங்குகள் நடந்தன.

இறுதிச் சடங்குகள் முடியும் வரை கணவன் மரணித்தது மனைவிக்குத் தெரியாது. துயரத்திலும் பெரும்துயரம் இதுதானோ?

# மிகப் பெரிய இரட்டைத் தட்டு விமானம்

பஸ்களில் இரட்டைத்தட்டு (டபிள் டெக்கர்) பஸ்களைப் பார்த்திருப்பீர்கள். இப்போது இரட்டைத்தட்டு விமானமும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

555 பயணிகள் செல்லத்தக்க, உலகிலேயே மிகப் பெரிய 'சூப்பர்-ஜம்போ டபிள் டெக்கர்' விமானத்தின் கணினி வரைபடம் தான் இது.

ஐரோப்பிய நாடுகளின் கூட்டு நிறுவனமான ஏயார்பஸ் இன்டஸ்ட்ரீஸ் தயாரிக்கும் இந்த இரட்டைத்தட்டு விமானம் 2005ம் ஆண்டு பயன்பாட்டுக்கு வரவுள்ளது.






# ஒலிம்பிக் பதக்கங்கள்

↑ புத்தாயிரமாம் ஆண்டின் முதல் ஒலிம்பிக் போட்டி என்ற சிறப்புடன் ஆரம்பமாகும் சிட்னி ஒலிம்பிக் போட்டி, வரும் செப்டம்பரில் ஆரம்பமாகிறது.

அவுஸ்திரேலியாவின் முன்னாள் தடகள வீரர் ஷிர்லே டேலா ஹண்டி கைகளில் இருக்கும் இவை தான் இம்முறை வழங்கப்படவிருக்கும் தங்கப்பதக் கங்களின் மாதிரி. இந்தப் பதக்கங்கள் பேர்த் நகரில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் கான்பரா நகரில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

↓ வீடுகளில் செல்லப்பிராணியாக நாய், பூனை, கிளி, குருவி, எலி என்று வளர்ப்பதைப் பார்த்தும் கேட்டும் படித்தும் இருக்கிறோம். ஒரு சிலர் இந்தப் பிராணிகளைத் தவிர்த்து கொஞ்சம் பெரிய பிராணிகளை வளர்ப்பார்கள்.

அமெரிக்காவின் வாஷிங்டனைச் சேர்ந்த செல்வந்தரான ஹெய்டரின் செல்ல பிராணி எது தெரியுமா? ஒரு பெரிய கரடி. இவர் பெரும்பாலும் தனது செல்லப்பிராணியான கரடியுடன் தான் தனது பொழுதைப் போக்குவார்.

உணவுண்ணும் போது கூட கரடியை அருகிலமர்த்தி அதற்கு உணவூட்டி அதன் பின் தானும் உண்ணுவார். கொடுத்து வைத்த இந்தக் கரடியின் பெயர் 'கென்னி.'

(பட உதவி: எஸ்.வாணி-லெபனான்)

# பென்னம் பெரிய செல்லப் பிராணி





# ரொக்கட் விடும் துணை ஜனாதிபதி

↖ அமெரிக்காவின் மினசோட்டா மாகாணத்தில் உள்ள ஹொப்கின்ஸில் மாதிரி ரொக்கட்டுக்களை ஏவிச் சோதனை செய்யும் பாடசாலை மாணவர்களுடன் இருப்பவர் அமெரிக்கத் துணை ஜனாதிபதி அல்கோர் (இடது பக்கம் இருப்பவர்).

பாடசாலைகளின் கல்வித் தரத்தை உயர்த்த, கல்விச் சீர்திருத்தம் மற்றும் குழந்தைகள் நிதியமொன்றை ஏற்படுத்துவதில் ஆர்வம் காட்டும் அல்கோர் மாணவர்களோடு மாணவனாகத் தானும் ரொக்கெட் விட்டு மகிழ்கிறார். □


# அலகு குத்தும் அரபுச் சிறுவன்


**தகவல் பெட்டி**

↓ வேண்டுதல்களை நிறைவேற்றுவதற்காகப் பலர் தம்மையே வருத்தி இறைவனிடம் இறைஞ்சுவார்கள்.

படத்தில் அலகு குத்திக் கொள்ளும் இந்தச் சிறுவன் பெயர் அகமது உமர். ஜோர்டான் நாட்டைச் சேர்ந்தவன்.

அண்மையில் கொண்டாடப்பட்ட இஸ்லாமிய பெருநாளான மிலாதுன் நபியையொட்டி ஜோர்டானின் தலைநகர் அம்மானில் உள்ள பள்ளிவாசலில் அலகு குத்திக்கொண்டான் இந்த அரபுச் சிறுவன்.





# குட்டிக் குட்டிச் சிற்பங்கள்

↑ குட்டிக் குட்டிச் சிற்பங்களை உருவாக்கும் தாய்வான் சிற்பி சென்ஃபிராங்-ஸீன் கை வண்ணத்தில் உருவான சிற்பங்கள்தான் இவை.

மிக்கிமௌஸ், டொனால்ட் டக், மிக்கி, ஃபன்னிரபிட் ஆகிய இந்தச் சிற்பங்களை, பல் குத்த உதவும் குச்சிகளில் செதுக்கியுள்ளார்.

பூதக்கண்ணாடி மூலம் பெரிதாக்கப்பட்டு படம் பிடிக்கப்பட்டுள்ள இந்தச் சிற்பங்களில் பின்னால் இருப்பது ஸீனின் பெருவிரல். ▪

திரையுலக மறுபக்கம் (155)

# பிரபல நடிகையின் தற்கொலை முயற்சி

## தமிழ்நாட்டிலிருந்து மயன் — நடிகர் வைத்த மேலதிகச் செலவு

படங்களில் நடன இயக்குநராகப் பணியாற்றும் இளைஞர் ஒருவரிடம் நடனம் பயிலச் சென்றார் ஒரு நான்கெழுத்துப் பிரபல நடிகை. பயிலப்போன இடத்தில் நடன இயக்குநரிடம் மனதைப் பறிகொடுத்தார் நடிகை.

காதல் விவகாரத்தை எப்படி எப்படி எல்லாமோ மூடிமறைக்கப்பார்த்தும் அது வெளியே கசிந்து விட்டது. இப்போது இந்த விஷயம் தெரியாதவர்களே கிடையாது எனலாம். அத்துடன் அடுத்த திருமணம் இவர்களது திருமணம் தான் என்ற பேச்சும் அடிபடுகிறது.

ஊடல் இல்லாத காதலர்களே கிடையாது. அடிக்கடி இவர்கள் இருவரிடையேயும் ஊடல் வரும். சில மாதங்களுக்கு முன் நடிகை படமொன்றின் படப்பிடிப்புக்காக வெளியூர் சென்று விட, நடன இயக்குநரான காதலருக்கு ஒரு புதிய நடிகையின் அறிமுகம் கிடைத்தது.

புதிய நடிகையுடன் ஏற்பட்ட அறிமுகம், கட்டிலில் இருவரும் 'சங்கமம்' ஆகும் கட்டம் வரை சென்று விட்டது. இதைப் பற்றிய செய்தி பத்திரிகைகளில் வெளிவந்துவிட்டன.

படப்பிடிப்பிலிருந்து திரும்பிய நடிகை நேராக காதலரிடம் சென்று புது நடிகையின் பழக்கத்தைப் பற்றிக் கேட்டு அவருடன் சண்டையிட்டார். பின் காதலர், புதுநடிகையின் தொடர்பைத் துண்டித்து விடுவதாக சத்தியம் செய்ய, சமாதானமானார் நடிகை.

இருப்பினும் காதலர் சொன்னபடி செய்யவில்லை. நடிகை ஊரில் இல்லாத சமயங்களில் புதிய நடிகையுடன் தொடர்பு கொள்வார். இதைத் தெரிந்து கொண்ட நடிகை காதலருடன் அடிக்கடி சண்டை போடுவது வாடிக்கையாகிவிட்டது.

அண்மையில் சென்னையில் காதலருடன் சண்டையிட்டபடி சென்ற நடிகை நட்டநடு வீதியில் காரை நிறுத்தினார். நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்ததால் அந்த வீதியில் போக்குவரத்து அவ்வளவாக இருக்கவில்லை.

சத்தமிட்டபடி காரிலிருந்து இறங்கி ஓடினார் நடிகை. அழுது புலம்பியபடி "நான் தற்கொலை செய்வேன்" என ஆங்கிலத்தில் கூறிக்கொண்டு ஓடத் தொடங்கினார்.

காரில் இருந்து இறங்கிய காதலர் ஓடிச் சென்று "நில் நில்" என்றபடி நடிகையைப் பிடித்து, வலுக்கட்டாயமாக அவரைக் காரில் திணித்தார். ஆனால் நடிகையோ காரில் இருந்து இறங்க முயற்சிக்க, அவரை உள்ளே தள்ளிக் கதவைப்பூட்டிக் கொண்டு, காரை அவசரமாகக் கிளப்பிச் சென்றார் காதலர்.

இதைத்தொடர்ந்து இன்னொரு சம்பவமும் நடந்துள்ளது. இது நடந்தது இந்தியாவில் அல்ல, சுவிற்சர்லாந்தில். படப்பிடிப்புக்காக சென்ற இடத்தில் நடந்தது.

கிட்டத்தட்ட இந்தியாவில் நடந்தது போன்றே அங்கும் நள்ளிரவில் இருவருக்குமிடையே பனிபடர்ந்த வீதியில் சண்டை ஏற்பட்டது.

"தற்கொலை செய்வேன்" என்று அழுது, கலாட்டா செய்த நடிகையின் கழுத்தில் நகக்கீறல் களும் இருந்தன. காதலர் எவ்வளவோ சமாதானப்படுத்தியும் நடிகை சமாதானமாகவில்லை.

என்ன நடந்தது இவர்களுக்கிடையில்? புதிய நடிகையின் வரவால் ஏற்பட்ட விரிசலா அல்லது வேறேதும் பிரச்சனையா?

### துணை நடிகை -500 ரூபாய்

உச்ச நட்சத்திரம் உட்பட பல முன்னணி நடிகர்களை வைத்துப் பல படங்களைத் தயாரித்த தயாரிப்பாளர் ஒருவர் அண்மையில் தயாரித்த படத்தின் படப்பிடிப்புக் கணக்கு வழக்குகளைப் பார்வையிட்டார். அதில் துணை நடிகை-500 ரூபாய் என்று எழுதப்பட்டிருந்தது.

உடனே தயாரிப்பு நிர்வாகியைக் கூப்பிட்டு "என்ன இது" என்று கேட்டார். அதற்குத் தயாரிப்பு நிர்வாகி தலையைச் சொறிந்தபடி 'அந்த....' என்று இழுத்தார்.

"நீ போறதுக்கெல்லாம் என் பணமா கிடைச்சது?" என்று கேட்க.

"நான் போகல, படத்தின் ஹீரோதான் கொடுக்கச் சொன்னார்" என்று சொல்ல பேசாமல் இருந்து விட்டார் 'சுதந்திர'மான அந்தத் தயாரிப்பாளர்.

### தெலுங்கில் 'குஷி'

சூர்யா இயக்கத்தில் விஜய்-ஜோதிகா நடித்து வெற்றி நடை போடும் 'குஷி' தெலுங்கில் தயாராகிறது.

தமிழில் 'குஷி' படத்தைத் தயாரித்த ஏ.எம்.ரத்னம் தான் தெலுங்கிலும் தயாரிக்கிறார். தெலுங்கில் 'செப்பவினி உந்தி' என்று தயாராகும் 'குஷி'யை சூர்யாவே இயக்கவுள்ளார்.

விஜய் வேடத்தில் தெலுங்கில் சிரஞ்சீவியின் தம்பி பவன் கல்யாண் நடிக்கிறார்.

### புதிய செண்டிமெண்ட்

தமிழ்த் திரையுலகில் செண்டிமெண்ட்களுக்குக் குறைவில்லை. இப்போது அங்கு அடிபடும் செண்டிமெண்ட் சங்கதிகள் இவை.

இது விக்கிரம ஆண்டு என்பதால் 'வி' என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் கலைஞர்களின் படங்கள் பிய்த்துக் கொண்டு ஓடுமாம்.

இயக்குநர் விக்ரமன், விஜயகாந்த், விக்ரம், விஜய், விவேக் என இவர்களுடைய படங்கள் தான் வசூல் சாதனை புரிகின்றனவாம்.

இதனால் இப்போது அங்கு 'வி' செண்டிமெண்ட் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள்.

### அதிர்ச்சிக்குள்ளாக்கியவர்

'அலைபாயுதே' படத்தில் ஷாலினி விபத்தில் சிக்கி விசப்படுவதைப் பார்த்து அதிர்ச்சிக் குள்ளானவர்கள் பலர்.

இந்தக் காட்சியை கம்பியூட்டர் கிரஃபிக்ஸ் மூலம் தத்ரூபமாக அமைத்தவர் அரவிந்த்.

'பூம் பூம் ஷக்கலக்க' தொலைக்காட்சித் தொடரில் ரேவதியை கிரஃபிக்ஸ் மூலம் குள்ளமாகக் காட்டுபவரும் இவர்தான்.

### மீண்டும் வசந்த்

'அப்பு' படத்தை இயக்கிய வசந்தை வைத்தே அடுத்த படத்தையும் தயாரிக்கிறது கேயாலச் சந்தரின் கவிதாலயா நிறுவனம்.

படத்திற்கு 'ஒரு காதல் கதை' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதில் கதாநாயகனாக 'அலைபாயுதே' மாதவன் நடிக்கவுள்ளார்.

### முந்துவானா 'மூத்தவன்'?

தெலுங்கு சுப்ரீம் ஸ்டார் சிரஞ்சீவி நாயகனாக நடித்து பெரும் எதிர்பார்ப்புக்களோடு வெளியான படம் 'அன்னய்யா' இதில் சிரஞ்சீவிக்கு ஜோடியாக தெலுங்கில் நம்பர் வன்னாக இருக்கும் சௌந்தர்யா நடித்துள்ளார். ஒரு பாடல் காட்சியில் சிரஞ்சீவியோடு சிம்ரானும் நடனமாடியிருந்தார். ஆனால் படம் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை.

இப்போது 'அன்னய்யா' தமிழில் 'மூத்தவன்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. ஷங்கரின் 'முதல்வன்' வெற்றி பெற்றதால், கிட்டத்தட்ட அதே போன்றதொரு தொனியோடு பெயர் சூட்டப்பட்டிருக்கும் 'மூத்தவன்', 'முதல்வனை' வசூலில் முந்துவானா?

### பிஸியாக இராம.நாராயணன்

'திருப்பதி ஏழுமலை வெங்கடேசா' படத்தின் மூலம் 100 படங்களை இயக்கிச் சாதனை படைத்தார் இராமநாராயணன். அதையடுத்து 'ராஜகாளியம்மன்', 'கந்தா கடம்பா கதிர்வேலா' ஆகிய படங்களை இயக்கினார்.

இப்போது 'ராஜராஜேஸ்வரி', 'பாளையத்து அம்மன்', 'ஐயப்பா ஐயப்பா ஐயப்பா' ஆகிய படங்களை இயக்கி வருகிறார்.

அத்துடன் கார்த்திக்-மந்த்ரா-கௌசல்யா நடிக்கும் 'குபேரன்' படத்தையும் இயக்குகிறார். இராம. நாராயணன் கையில் இவ்வளவு படங்கள் இருப்பதற்குக் காரணம் என்ன?

குறைந்த செலவில், மிகக்குறுகிய காலத்திற்குள் இவரது படங்கள் தயாராகி விடுவது தான் காரணம். அதுமட்டுமன்றி இவரது படங்கள் வசூலிலும் வெற்றி பெற்று விடுகின்றன.

### திரையரங்கம் ...

பிரபு ப...

சென்னையில் ...
திரையரங்கம் ...
நடிக்கும் 'சந்...
தைத் தயாரிக்...
சென்னையில் உ...
திரையரங்கமான ...
படமொன்றைத் ...

பிரபு கதாநா...
இப்படத்தை வி...
ராக இருந்த ...
இயக்குகிறார்.

முதல் முறை...
பில் சுடுபட்டிரு...
திரையரங்கம் '...
தின் பின்புலமாக ...



மந்த்ரா-விஜயகாந்த்-ராதிகா சௌத்ரி
படம்: சிம்மாசனம்



சத்யராஜ்-பாபிலோனா
படம்: என்னம்மா கண்ணு

### மினி சினி

★ ரஜினி கதை-திரைக்கதை-வசனம் எழுதி மோகன்பாபு கதாநாயகனாக நடிக்கும் 'ராயல சீமராமன்னா சௌத்ரி' என்ற தெலுங்குப்படத்தில், முக்கிய வேடமொன்றில் ரஜினியும் நடிக்கவுள்ளார்.

★ அருண்குமார்-ரம்பா ஜோடியாக நடிக்கும் 'அன்புடன்' படத்தில், விஜயகுமார் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரு பாடல் காட்சியில் தோன்றி நடனமாட சம்மதித்திருக்கிறார் மீனா.

★ டி.ராஜேந்தரின் 'சொன்னால் தான் காதலா' படத்தில் குகன் என்ற இளம் கதாநாயகன் அறிமுகமாகிறார். இவர் முன்னாள் நடிகை ரோஜாரமணியின் மகன் ஆவார்.

★ மன்சூரலிகான் தயாரித்து, விக்னேஷுடன் இணைந்து நடித்து வரும் 'ஆனா அந்த மடம் ஆகாட்டி சந்தை மடம்' படத்தின், கதாநாயகியாக 'சேது' புகழ் அபிதா நடித்து வருகிறார்.

★ ஏ.வி.எம். பட நிறுவனத்தின் ஆஸ்தான இசையமைப்பாளர் சந்திரபோஸ் நீண்ட காலமாக படங்களுக்கு இசையமைக்காமல் இருந்தார். இப்போது புதிய படமொன்றுக்கு இசையமைக்கிறார்.

★ கவர்ச்சி வேடங்களில் நடித்து வரும் ரோஜா, 'கனவும் கற்று மற' என்ற படத்தில் நடிக்கிறார். இது தனக்கு இன்னொரு 'உள்ளத்தை அள்ளித்தா'? 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படம் போன்று இருக்குமாம்.

★ ஜெயராம்-பிஜுமேனன் இணைந்து நடித்து இந்த வருடத்தின் முதல் நாளில் வெளியான 'மில்லேனியம் ஸ்டார்ஸ்' என்ற மலையாளப்படம் 'சிவசங்கர்' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றப்படுகிறது.

★ பிரசாந்த்-தேவயானி-பிரகாஷ்ராஜ் நடித்திருக்கும் 'அப்பு' படத்தின் தெலுங்கு மொழிமாற்ற உரிமையைப் பெற்று, அதைத் தெலுங்கில் வெளியிடுகிறார் பிரகாஷ் ராஜ். தெலுங்குப் படத்திற்கு 'மகாராணி' என்று பெயரிட்டுள்ளார்.

### சிஷ்யரின் சிபார்சு

பாரதிராஜா இயக்கும் 'கடல் பூக்கள்' படத்தில் முரளி ஜோடியாக விந்தியாவும், மனோஜ் ஜோடியாக கமீந்ராவின் மகள் உமாவும் நடிக்கின்றனர்.

உமாவை பாரதிராஜாவிடம் சிபார்சு செய்தவர் சீமான். இவர் தான் 'வீரநடை' படத்தில் உமாவை நாயகியாக அறிமுகப்படுத்தியவர். சீமான் முதலில் பாரதிராஜாவிடம் உதவி இயக்குநராக இருந்தவர்.

### பாவனாவும் இருக்கிறார்

தற்போது பரபரப்பாகப் பேசப்படும் 'தேவதாசி 2000' படத்தில் ஆடை அவிழ்ப்புப்போர் புரிந்திருப்பவர் 'சேது' புகழ் அபிதா மட்டுமல்ல 'தாசி' படத்தின் நாயகியாக நடித்து வரும் பாவனாவும்தான். படத்தில் அபிதாவுடன் போட்டி போட்டு கவர்ச்சியில் பெரும் புரட்சி செய்திருக்கிறார் பாவனா.

**முகப்பில்** சிரஞ்சீவி-
படம்:



பிரசாந்த்-தேவயானி
படம்: அப்பு

# விக்ரம் நடிக்கும் 'மந்திரக் கோட்டை'

'எந்திரியம்' என்ற மலையாளப்படம் 'மந்திரக்கோட்டை' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றப்படுகிறது.

ஒரு கிராமத்தில் தொடர்ந்து நடக்கும் கொலைகளுக்குக் காரணம் அற்ப ஆயுளில், கொலை செய்யப்பட்டு இறந்து போன ஒரு பெண்ணின் ஆவி தான் என்று ஒரு மந்திரவாதி மூலம் கண்டு பிடித்து அடக்கும் கதைதான் இது.

இந்தப் பேய்ப்படத்தில் விக்ரமுடன் வாணி விஸ்வநாத், தேவன், சஷ்மிதா ஆகியோரும் நடித்துள்ளார்கள்.

திரைக்கதை அமைத்துப் படத்தை இயக்கியுள்ளார் ஜோர்ஜ் கிட்டு.

# விஜயகாந்துடன் மோதும் விஜயகாந்த்

'வானத்தைப்போல', 'வல்லரசு' ஆகிய படங்களின் வெற்றிப் பூரிப்புடன் 'சிம்மாசனம்' படத்தில் நடித்துவருகிறார் விஜயகாந்த்.

இதில் முதல் முறையாக அப்பா-அண்ணன்-தம்பி என மூன்று வேடங்களில் நடிக்கிறார் விஜயகாந்த்.

அப்பா விஜயகாந்திற்கு ஜோடியாக அம்பிகா, விஜியும், அண்ணன் விஜயகாந்திற்கு ஜோடியாக குஷ்புவும், தம்பி விஜயகாந்திற்கு ஜோடிகளாக மந்த்ராவும், ராதிகா சௌத்திரியும் நடிக்கிறார்கள்.

விஜயகாந்திற்கு வில்லன் இன்னொரு விஜயகாந்த் தான். இப்படத்தின் இறுதிக்காட்சியில் விஜயகாந்துடன் இன்னொரு விஜயகாந்த் சண்டைக் காட்சி கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் மூலம் விறுவிறுப்பான முறையில் படமாக்கப் படுகிறது. புது இயக்குநர் ஈஸ்வரன் இயக்கும் இப்படம் ஜூலை இறுதியில் வெளியாகவுள்ளது.



சீதாலி
படம்: மட்டமுறுத்தாள்

# காதோடு சொல்லுகிறோம்

**இ**ந்தியில் நம்பர் ஒன்னாக இருந்து, நம்பர் ஒவாக வாழ்க்கைப்பட்ட நடிகையின் சித்தி மகளான 'வரி' நடிகை, அண்மையில் கலைச்சேவை செய்ய வெளிநாடு சென்றிருந்தார். கலைச்சேவையை முடித்துக் கொண்டு எல்லோரும் நாடு திரும்பி விட, 'வரி' நடிகை மட்டும் அவ்வூர்ப் பெரும்புள்ளியுடன் சில நாட்களைக் கழித்துவிட்டுத் தனியாக நாடு திரும்பினாராம்.

**க**தாநாயகி வாய்ப்புக்கள் வரவரக் குறைந்து கொண்டிருப்பதால் உஷாரான மீன் நடிகை அம்மன் வேடங்களைக் கேட்டு வாங்கி நடித்து வருகிறாராம். அம்மன் வேடங்களில் முன்னணி ஹீரோக்கள் நடிக்க மாட்டார்கள். அதனால் 'அந்த' மாதிரியான தொந்தரவுகளும் கிடையாது என்று சொல்லிச் சந்தோஷப் படுகிறாராம்.

**சி**க நகைச்சுவை நடிகர்களின் படங்கள் சக்கை போடு போட்டாலும், 'அவன் நடிச்ச படம் புட்டுக் கிச்சாமே' என்று மற்றவர்களிடம் நையாண்டி பேசும் உதை மணி, தான் நடித்த படம் என்றால், ஊத்திக் கொண்டாலும் 'பிச்சுக்கிட்டுப்போகுதய்யா' என்று சொல்லி வருகிறாராம்.

**க**டனாளியாகிக் கோர்ட் படி ஏறிக்கொண்டிருந்த இரண்டெழுத்துப் பூநடிகையின் வழக்குப் பிரச்சனைகள் எல்லாம் இப்போது ஓ.கே.வாம். இவற்றையெல்லாம் இல்லாமல் செய்தது திரைக்குப் பின்னால் அரசியல் செய்து கொண்டிருக்கும் ஒரு கோஷ்வரப் பிரமுகராம்.

**கா**ணாததைக் கண்டுகொண்ட இயக்குநர் 'மண் வாசனை' நடிகையின் வீட்டுக்கு அடிக்கடி போய் நடிகையைச் சந்தித்து வருவாராம். இதனால் இப்போது அந்தக் குள்ள நடிகையின் நெட்டைக் கணவருக்கும் அந்த இயக்குநருக்கும் தகராறாம்.

# அந்தமானில் தயாராகும் 'அந்தமான்'

நடிகர் திலகம் சிவாஜிகணேசன்-சுஜாதா நடித்த 'அந்தமான் காதலி' படத்தின் படப்பிடிப்புகள் அந்தமான் தீவுகளில் படமாக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து பல படங்கள் அங்கு படமாக்கப்பட்டாலும் அப்படங்களின் பெயர்களில் அந்தமான் என்று பெயர் வரவில்லை.

இப்போது அர்ஜுன் நடிக்கும் 'வானவில்' படத்தை இயக்கி வரும் மனோஜ்குமார் அடுத்து 'அந்தமான்' என்ற படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தின் படப்பிடிப்புகள் அந்தமானில் படமாக்கப்படவுள்ளன.

இப்படத்தில் மனோஜ்குமாரின் மருமகன் மனோஜ் கதாநாயகனாக நடிக்கிறார். இவர் வேறுயாருமல்ல பாரதிராஜாவின் மகன் மனோஜ் தான். பாரதிராஜாவின் மனைவியும் மனோஜ்குமாரும் கூடப்பிறந்தவர்கள்.

# சாமியாடும் அம்மா

'பாளையத்து அம்மன்', 'சிவகாமி' என பக்திப்படங்களில் நடித்து வருகிறார் மீனா.

'பட வாய்ப்புகள் இல்லாததால் தான் மீனா அம்மன் வேடங்களில் நடிக்கிறார்' என தமிழகப் பத்திரிகை ஒன்றில் செய்தி வர கொதித்துப் போய் விட்டார் மீனாவின் தாய்.

'இந்தமாதிரி எழுதுறவங்க கைய முறிச்சு அடுப்பில வைக்கணும். ரெண்டாயிரத்து பத்து வரை மை டாட்டர் தான் கனவுக்கன்னி,' என்று தயாரிப்பாளர் ஒருவரிடம் ஆங்கிலமும் தமிழும் கலந்து சாமியாடியுள்ளார் மீனாவின் தாய்க்குலம்.

# மாறும் நாயகிகள்

விஜய்-சூர்யா இணைந்து நடிக்கும் 'ஃப்ரெண்ட்ஸ்' படத்தில் நாயகிகள், நாளுக்கு நாள் மாறி வருகின்றார்கள்.

ஜோதிகா, சிம்ரான், சுவலட்சுமி, தேவயானி என்று தினம் ஒரு நடிகை நடித்து வருகிறார். படத்தின் நாயகி யார் என்பது குழப்பமாகவே இருக்கிறது.

இந்த நாயகிகள் மாற்றத்திற்குக்காரணம் சம்பளவிவகாரம் தான். படத்தைத் தயாரிப்பவர் முன்னாள் நடிகை சரிதா என்பது குறிப்பிடத்தக்கது.



ரதி

# முதலில் 3 படங்கள்

'சேது' படத்தின் பெருவெற்றிக்குப் பின் அதன் நாயகன் விக்ரம் மொத்தம் 3 படங்களில் மட்டுமே நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார்.

'நீ வருவாய் என' ராஜகுமாரன் இயக்கும் 'விண்ணுக்கும் மண்ணுக்கும்', ஷங்கரிடம் உதவியாளராக இருந்த பாலாஜி இயக்கும் 'சாமுராய்' இன்னொரு புதிய இயக்குநரின் படம் ஆகியவற்றில் மட்டுமே முதலில் நடிக்கிறார்.

இதில் 'சாமுராய்' படத்தின் படப்பிடிப்புகள் முழுவதும் வெளிநாடுகளில் மட்டுமே படமாக்கப்படவுள்ளன.

# சத்யராஜ் நீக்கம்

இராம.நாராயணன் இயக்கும் 'ஐப்பா ஐப்பா ஐயப்பா' படத்தில் நாயகனாக சத்யராஜ் ஒப்பந்தமாகி இருந்தார். இதில் இன்னொரு நாயகனாக நடிக்கும் 'திருநெல்வேலி'யில் அறிமுகமான உதயாவை நீக்க வேண்டும் என்று சத்யராஜ் வற்புறுத்தியதால் அவரையே நீக்கி விட்டாராம் இயக்குனர்.

# மீண்டும் ரதி

பாரதிராஜாவால் 'புதிய வார்ப்புகள்' படத்தில் அறிமுகப்படுத்தப்பட்டவர் ரதி. அதன் பின் ரஜினி, கமல் ஜோடியாகப் பல படங்களில் நடித்தார்.

கே.பாலச்சந்தரின் 'ஏக் துஜே கேலியே' இந்திப் படத்தில் கமலுக்கு ஜோடியாக நடித்தார். அந்தப் படம் அங்கு ஓடி பெரு வெற்றி பெறவே, பம்பாய்க்கே சென்று பல படங்களில் நடித்தார்.

மணமாகிய பின்னர் படங்களில் நடிப்பதை நிறுத்திக் கொண்ட ரதி பதினைந்து வருடங்களுக்குப் பின் இப்போது மீண்டும் நடிக்க வந்துள்ளார்.

# ஞானராஜசேகரன் இயக்கும் பாரதியார் படம்

சக்தி தொலைக்காட்சியில் இடம்பெறும் ...கேந்திராவின் 'கதை நேரம்', வஸந்தின் ... ஜூனியர்' போன்ற தொலைக்காட்சித் ...களைத் தயாரிக்கும் மீடியா ட்ரீம்ஸ் ... முதன் முறையாகத் தயாரிக்கும் படம் பாரதி.

'மோகமுள்', 'முகம்' போன்ற படங்களை ... ஞானராஜசேகரன் இப்படத்தை இயக்கு... பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் இப்படத்தில் பாரதியாக சாயாஜி ஷிண்டே என்ற மராட்டிய நடிகரும் செல்லம்மாவாக ...

...சௌந்தர்யா ...

தேவயானியும் நடிக்கிறார்கள்.

இவர்களுடன் இந்து, 'நிழல்கள்' ரவி, டி.பி.கஜேந்திரன், விஜிபி சந்தோஷம், டெல்லி குமார், ஜூனியர் பாலையா, பாலு ஆனந்த் மற்றும் பலர் நடிக்கின்றனர்.

தங்கப்பச்சான் ஒளிப்பதிவு செய்யும் இப்படத்திற்கு இளையராஜா இசையமைக்கிறார். இந்திய சுதந்திர நாளான ஆகஸ்ட் 15ல் 'பாரதி' வெளியாகவுள்ளது.

# கிரிக் 'கெட்டுப்' போச்சு



இன்று
கிரிக்... கெட்டு
தரங் கெட்டு
போனதொரு
விளை..யாட்டு!

அரசின்
அனுமதி பெற்....று
ஆறு விக்கட்டு
நட்டு...
ஆடிய கிரிக் கெட்டு
இன்று
இப்படிப் போனது
யார் கண்... பட்டு?

நாட்டுக்கு
நாடு
வீட்டுக்கு வீடு
புகழ் பெற்ற
விளையாட்டு
போனதே இன்று
கேவலப் பட்டு!!

கஷ்டப்பட்டு
கிரிக்கெட்டு-ஆல்
கீர்த்தி பெற்று
ஆடிய வீரரெல்லாம்
இன்று... அகப்பட்டு...!
விளையர்ட்டு!

துட்டு
ஆசைப் பட்டு
வேண்டினர்
வெட்கம் விட்டு
கையூட்டு...!

விக்கட்டு
வீழ்த்திய
கபிலுக்கும் இதனால்,
இக்கட்டு!

பல வெற்றி கண்டு
ஆடிய ஹன்ஸிக்கும்
அணியை விட்டு
ஒதுங்க கிழி.. பட்டு
போனது
அவர் டிக்... கெட்டு!

பல நூற்.. றாண்டு
பழமை போன
கிரிக்கெட்டு
இவ்...வாண்டு
போனது தான் வேதனை
மானங்..கெட்டு

கிரிக் கெட் டு
விளை யாட்டு
இன்று
'கிலி' க்க(ா)ட்டு

ஷல் டிானுல் ஹரிஸ்-வாழைச்சேனை

## தாலாட்டு

அன்னை பூமியது அரக்கர்களின்
கைப்பிடியில்....
அந்நிய தேசத்திலே அகதிகளாய்
எம்வாழ்வு...
அப்பாவிற்கோ வேலை.....வேலை....
அம்மாவிற்கும் நேரமில்லை....
அழகழகாய்ப் பொருட்களுண்டு
அரவணைக்க ஆட்களில்லை!

அன்றாடம் மழலைகள் நாம்
அந்நியரின் தொட்டிலிலே
காப்பகத்தில் காத்திருந்து
கண்ணீரைத் தான் பொழிந்து,
களைத்து விட்ட பின்பு-நாம்
கண்ணுறங்கி விடுகிறோம்..!

தாத்தா பாட்டியில்லை;
தாலாட்ட யாருமில்லை;
தாய்மடியில் தானுறங்க-இளம்
தளிர்களுக்கோ நாதியில்லை!

தாய்மொழியில் தாலாட்டை
தாய்பாடக் கேட்பதற்காய்
தவமிருக்கும் மழலைகள்-நாம்
தாய் நாட்டில் படுத்துறங்க
தவித்து நிற்கும் பிஞ்சுகள்- நாம்
எம்மினத்தின் துயரமது
எப்போது தான் முடியும்...?
எங்களுக்கோர் தாலாட்டு
என்றுதான் இனிக்கிடைக்கும்?
அன்று வரை அகதிகளாய்
அழுதபடி வாழ்ந்திருப்போம்!

சுவிஸிலிருந்து த.யமுனா.

## காதலிக்காத காதலிக்கு

சரிதான் போடி...
சுஸ்மிதா வென்றுதான்
நினைப்புனக்கு...!

போட்டு வருவது
வாரறுந்த செருப்பென்றாலும்
வாயென்றால்...!

உன்
பரட்டைத் தலைக்கும்
எண்ணெய் வழியும்
முகத்துக்கும்
எவனாவதுன்னைத்
திரும்பிப்
பார்த்திருக்கிறானா...?
என்னைத் தவிர!

போட்டு வரும் தாவணியில்
நட்சத்திரங்களாய்
ஆயிரம் ஒட்டைகள்...
நிலாவென்றுதான்
நினைப்புனக்கு.

பிய்த்தல் பாவாடைக்கு
முதலில் ஒட்டுப்போடு!
பின்னர் பார்க்கலாம்...
நீ ரம்பாவா,
சிம்ரனாவென்று.

குரல் கேட்டு காகம் கூட
நின்றதில்லை...
நினைப்பென்னவோ
லதா மங்கேஷ்கர்தான்.

காவி படிந்த
உன் பற்களுக்கு
தேவைதானா இந்த
'சிக்னல்' சிரிப்பு....!

என்ன சொல்லியென்னடி...,
நீயில்லா வாழ்வொன்றை
நினைத்துப் பார்க்கவே
முடியவில்லையே என்னால்....!

மன்னார் எம்.ஷிபான்.

## தேன் கிண்ணம்



## என்று தீரும்...?

என்
கனவுகள் எல்லாம்
காற்றோடு போய்விட்டன.

அடிக்கடி
என் நினைவுகளில்
வரும்
அகிலா ரீச்சர்
எனக்குள்-ஒரு
டீச்சர் ஆசையை
விதைத்துவிட்டுப் போனார்...!

தடுப்பூசி போடவந்த
டாக்டர் அக்காவும்
என்
கனவுகளுக்கு
படிக்கட்டமைத்துச் சென்றார்....!

அந்த வெள்ளை கோட்டுடனும்
'ஸ்டத்தஸ்' கோப்புடனும்
எத்தனை முறை
என்னை
கற்பனையில்
அலங்கரித்துப்
பார்த்திருக்கிறேன்...!

என் கனவுகளுக்கும்
கற்பனைகளுக்கும்
முற்றுப் புள்ளி வைக்கவா
நான்
பூப்பெய்தினேன்....?

அய்யன் சொன்னார்...
"அடுத்தவன் வீட்டுக்குப்
போறவளுக்கு
படிப்பெதற்?"கென்று...!

ஆத்தா சொன்னாள்....
"ஆம்படையானுக்கு
அடங்கி இருக்க
படித்துக் கொண்டால்
அதுபோதும்,!" என்று...!

அப்பாத்தா சொன்னாள்...
"வயசுக்கு வந்தவ
வாக்கப் பட்டுப்போகணும்...
படிப்பு கிடிப்புனு
பாழா போகவேண்டாம்!" என்று....!

எல்லோரும்
எதை எதையோ சொல்லி என்னை
ஏலம்விட்டுவிட்டனர்....!
நானும் தாரமாகி
தாயாகி
தத்தளித்து போனேன்...!

என் கனவுகளும்
கற்பனைகளும்
நான் பருவம் வந்த நாளோடு
பறிபோய் விட்டனவே...!

ரி.நந்தினி-கண்டி.

# தினமுரசு இதழ்களைப் பாதுகாக்க

## மைக்ரோ ஃபிலிமிங்

ஈழத் தமிழ் மக்கள் தங்கள் பண்டைய வரலாற்றை ஒழுங்காகப் பேணிப் பாதுகாக்கத் தவறிவிட்டார்கள். இதனால் அவர்களுக்கு இந்த நாட்டில் எவ்வித உரிமையும் கிடையாது என்று பேரினவாதிகள் குரலெழுப்பி வருகின்றனர். வரலாற்றுச் சான்றுகளை மாற்றியும் திரித்தும் எழுதி வருகின்றார்கள்.

பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு உண்மையான வரலாற்றுச் சான்றுகளை மூடிமறைத்து பொய்யான கதைகளைக் கூறி வருகின்றனர். இந்த ரீதியில் தமிழ் மாணவர்களையும் மூளைச் சலவை செய்கின்றனர்.

இத்தகைய இழி நிலையைப் போக்கி ஈழத் தமிழ் இனம் இந் நாட்டின் மூத்த குடிமக்கள் என்பதை காலந் தாழ்த்தாது நிரூபிப்பதற்கு ஏற்ற ஆவணங்களை, இந்தக் காலகட்டத்திலாவது தேடிப் பாதுகாத்து வைக்க வேண்டியது கடமையாகின்றது.

இந்த நல்ல நோக்கத்தோடு கடந்த 45 வருடங்களாக தமிழ் ஏடுகளையும் ஆவணங்களையும், பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றையும் தனி மனிதனாக நின்று, எண்ணற்ற இடையூறுகளுக்கும் துன்ப துயரங்களுக்கும் ஈடுகொடுத்து, எதிர்நீச்சலடித்து சேகரித்து வருகிறார் குரும்பசிட்டி கனகரத்தினம் அவர்கள்.

அழிந்து போய்க் கொண்டிருக்கும் ஈழத் தமிழர் வரலாற்றுத் தரவுகளை பேணிப் பாதுகாக்க மைக்ரோ, ஃபிலிமிங் என்ற நவீன தொழிநுட்ப முறையினைத் துணை கொண்டு ஆவணங்களைப் பாதுகாக்கும் செயல்முறையினைக் கையாண்டு வருகிறார்.

1864 தொடக்கம் இன்று வரை இலங்கையில் வெளியான சஞ்சிகைகள், ஏடுகள், நூல்கள் போன்றவை திரு.கனகரத்தினம் அவர்களுடைய முயற்சியால் மைக்ரோ ஃபிலிம் படச்சுருள் மூலமாகப் பதிவு செய்யப் பட்டு வருகின்றன.

இவற்றை எக்காலத்திலும் அழித்து விடமுடியாமல் பாதுகாப்பாக வைத்திருப்பது சுலபமாகும். ஒரு சிறு பெட்டியின் உள்ளே ஒரு பெரும் நூல் நிலையத்தையே அடக்கிவிடலாம்.

தினமுரசு வாரமலர் ஆரம்ப இதழிலிருந்து இப்பொழுது மைக்ரோ ஃபிலிமில் பதியப்பட்டு வருகின்றன.

தினமுரசின் எந்த இதழை வேண்டுமானலும் அல்லது ஈழத்தமிழர் வரலாற்றுடன் தொடர்புடைய ஆவணங்களானாலும் தேவைப்படுவோர் கீழ் காணப்படும் திரு.கனகரத்தினம் அவர்களின் முகவரியுடன் தொடர்பு கொண்டு மிகக் குறைந்த செலவுடன் பெற்றுக் கொள்ளலாம்.



தினமுரசு பதிவுசெய்யப்படுவதை உ.த.ஆ.செயலாளர் குரும்பசிட்டி இரா.கனகரத்தினமும் ஏனையோரும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் மக்களுக்கு, அவர்களுடைய பூர்வீக வரலாற்று உண்மைகளைத் தெரிந்து கொள்ள இது ஓர் அரிய வாய்ப்பாகும். அத்துடன் தன்னந்தனியாக இந்த அரிய பணியில் ஈடுபட்டிருக்கும் திரு.கனகரத்தினம் அவர்களுக்கு, இப் பணியினைத் தொடர பொருளாதார ரீதியில் உதவுவதற்கும் இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும்.

**திரு.இரா.கனகரத்தினம்,**
**128/8, HETTIYA WATTA,**
**MUL GAMPOLA, KANDY. (SRI LANKA)**
**Telephone : 08-233547.**

## பேனா நண்பர்கள்



பெயர்: எம். றிபாய்.
வயது: 19
முகவரி:
பள்ளிவாசல் வீதி,
கல்முனை-08.
பொழுது போக்கு:
வானொலி, பத்திரிகை.



பெயர்: வி. தவச்செல்வி
வயது: 19
முகவரி:
சமயபுரம். வவுனியா.
பொழுது போக்கு:
வழமையானவை.

# இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கானா'

09.07.2000 முதல் 15.07.2000வரை

**மேடம் :**
உறவினர் வருகையும் பணப் பெருக்கமும் நலன்களும். பரீட்சை முடிவுகள் சீராகக் காணப்படும். புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும். பெண்களுக்கு திருமணப் பேச்சுக்கள் நடைபெறும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 09, 15.

**இடபம் :**
ஓரளவு சிக்கலானவாரம். செலவுகள் அதிகரிக்கும். வார இறுதியில் ஸ்தலயாத்திரை, முக்கியவர்களின் சந்திப்பு அமையும். கார்த்திகை நட்சத்திரர் போக்குவரவில் கவனம் தேவை.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 14, 11.

**மிதுனம் :**
தொழில் பலம் கூடும். கல்வி வசதிகள் பெருகும். நெடுநாள் நீடித்த பிரச்சனைகள் தீரும். பெண்களுக்கு குடும்பத்தில் வசதிகள் வாய்ப்புக்கள் பெருகும். திருவாதிரைக்காரர் பலவசதிகளைப் பெற உள்ளனர்.
அதிஷ்ட நாட்கள் : புதன், திங்கள்.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 11, 15.

**கடகம் :**
பிள்ளைகளால் மகிழ்ச்சி. தொழில்நுட்பத்துறை வேலை செய்வோருக்கு பதவி மகிழ்ச்சியைக் கொடுக்கும். தொழில் இல்லாதோருக்கு தொழில் வாய்ப்புக்கிடைக்கும். பூசக்காரருக்கு ஓரளவு நல்ல பயன் உள்ளது.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 12, 15.

**சிம்மம் :**
நெடுநாள் கனவு பலிக்கும். பணச் செலவு கட்டுக்கடங்கும். காரிய வெற்றியும், புதிய முயற்சிகள் வெற்றி தரும். பெண்களால் பல உதவிகள் கிடைக்கலாம். மக நட்சத்திரருக்கு பொன்னான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 10, 15.

**கன்னி :**
மனதில் மகிழ்ச்சி தோன்றும். புதிய குடும்ப வாழ்க்கை சிறக்கும். நோய்த்துன்பம் மாற்றமடையும். கொடுக்கல் வாங்கல் தாமதமடையும். தொழில் விடயத்தில் கவனமாக இருக்கவும். உத்தர நட்சத்திரருக்கு மனமகிழ்ச்சி.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம்:வெள்ளை; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 10, 12.

**துலாம் :**
மனதில் பயமும் எடுத்த கருமங்களில் தடையும் ஏற்படும். மருத்துவச்செலவுடன் வீண் செலவுகள், வெளியாட்களின் தலையீடுகள் காணப்படும். சுவாதிப் பெண்கள் அவமானப்பட நேரிடும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : சாம்பல் வர்ணம்; எண்: 08.
அதிஷ்ட திகதிகள் : 09, 13.

**விருட்சிகம் :**
பெரியோர்களின் ஆசிர்வாதம் கிடைக்கும். தூர இடத்து நற்செய்தியும் பணவரவுமுண்டு. திருமணத் தடைகள் நீங்கும். வெளிநாட்டுப்பயண முயற்சிகள் வெற்றிபெறும். புதிய வெற்றிகள் அமையும். கேட்டைக்காரர் வசதிகள் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 10, 15.

**தனுசு :**
மனப்போராட்டத்துடன் எவையும் இழுபறியான நிலையுடன் காணப்படும். கல்வித்தொழில் நிலையால் சிக்கல்கள் வந்து போகும். தொழில் நிலையால் செலவுகள் அதிகரிக்கும். முயற்சிகளில் கவனமாக இறங்கவும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 09, 15.

**மகரம் :**
பெண்களுக்கு சிறப்பான காலமாகும். புதிய தொழில் பண, அந்தஸ்து உயரும். விவசாய தொழில், கைத்தொழில் வளர்ச்சியினைக் கொடுக்கும். திருவோணக்காரருக்கு நற்கால பலன் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : ஒரேஞ்சு வர்ணம்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 14, 15.

**கும்பம் :**
பொருள் விரயமும். தேக நிலை மாற்றமும் காணப்படும். அரச தலையீடுகள் தோன்றும். வார இறுதியில் மருத்துவச் செலவு அதிகரிக்கும். சதயக்காரருக்கு செலவுகள் அதிக மாகும்.
அதிஷ்ட நாட்கள் : சனி, செவ்வாய்.
அதிஷ்ட நிறம்: இளமஞ்சள்; எண்:09.
அதிஷ்ட திகதிகள் : 11, 12.

**மீனம் :**
வாகன வசதிகள் கிடைக்கும். சகோதர முன்னேற்ற முயற்சிகள் மனதை திருப்திப்படுத்தும். ஆலயதரிசன மும். பெரியோர்களின் ஆதரவும் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : இளம்சிவப்பு; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 09, 15.

# நில்- கவனி - முன்னேறு

இளமை என்பது நாம் விரும்பும் பொழுது மட்டும் அணிந்து கொள்ளும் ஆடை அல்ல. சில ஆண்டுகளுக்கு மட்டுமே உடுத்தக் கூடியது, அது விரைவில் கிழிந்து விடும் தன்மை உடையது என்பதனை அறிந்து அதனை நல்வழியில், போற்றிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இளமையைச் சரியாகப் பயன்படுத்தா விட்டால் பிறகு எவ்வளவு தான் முயன்றாலும் அது திரும்பி வராது. இதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயலாற்றினால் சிறப்பளிக்கும். வாழ்வும் வளமாக அமையும்.



இதை நாம் முற்றிலும் உணர்ந்து இருக்கிறோமா? இளமையை நாம் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலேயே வாழ்வு அமையும். வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளும் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பும், கொட்டிய பாலும் திரும்பப் பெற முடியாது.

இதைப் போலவே இளமையும் மீண்டும் பெற இயலாது. இளமை ஒரு பறவை. அதை விட்டு விட்டால் மீண்டும் பிடிக்க முடியாது. கடமை எவ்வளவு முக்கியமானதோ அதே போன்று முக்கியமானது இளமையும்.

இளமையில் கவனமின்றி துள்ளினால் முதுமைக் காலத்தில் வருந்த நேரிடும். இளமை நம்பிக்கைக்குரிய பருவம். இளமையிலேயே கடமையை கண்ணியமாகச் செய்திட வேண்டும். இளமையை உதறிவிட்டால் அதுவும் நம்மை உதறிவிடும்.

வெள்ளைத்தாளில் எதை எழுதினாலும் பதிந்து விடுவது போன்றே இளமையிலும் எதுவும் எளிதாகப் பதிந்து விடும்.

நிலம் எவ்வளவுதான் வளமுடையதாக இருந்தாலும் அதனை உழுது பயிரிடாமல் தரிசாக விட்டுவிட்டால் நிலத்தினால் என்னப் பயனைப் பெற முடியும்? ஒன்றும் பெற முடியாது அல்லவா!

அதே போலத்தான் இளமைக் காலமும்!

சலவைக்கல் உயர்ந்தது தான். உன்னதமானது தான். அழகானது தான். புகழ்பெற்ற தாஜ்மகாலை கட்டிய சிற்பியின் கைத்திறனும், மனத்திறனும் இவ்வளவு அழகுடன் மிளிருகிறது. சலவைக் கல் உயர்ந்த நிலையை அடைய காரணமாக இருந்தது சிற்பியின் கைத்திறன் தானே?

வாழ்வு என்னும் சலவைக் கல் உயர்ந்த நிலையை அடைய வேண்டுமானால் இளமை என்னும் சிற்பியை கொண்டு செதுக்கப்பட வேண்டும்.

இளமை என்ற சலவை கல்லைக் கொண்டு மனத்திறனும், அறிவுத் திறனும் சேர்த்து கட்டினால் தான் தாஜ்மகால் போன்ற புகழ் பெற்ற வாழ்க்கையை அமைக்க முடியும்.

இல்லையென்றால் ஒரு பயனும் விளையாது. எவருமே அறியாதபடி எங்கோ கிடக்கும் சலவைக் கலவைப் போல் நம்முடைய வாழ்வும் வீணாகி விடும். புயலில் சிக்கிய தோணி போல் இல்லாமல் கற்பாறை போன்று உறுதியுடன் இருக்க வேண்டும்.

வாழ்க்கை என்ற நாடகத்தில் இளமை என்ற தாமரை மலர் மலர்ந்து இருப்பதைப் போல் நற்செயல்கள் மலர வேண்டும். இளமைப் பருவம் என்றென்றும் இருக்காது. வாழ்நாளில் இனிய பருவம் இளமைப் பருவம் என்பதை முதுமையில் உணராமல் இளமையிலே உணர வேண்டும்.

இளமை நம்மிடம் இருக்கும் பொழுதே அதனைப் பயன்படுத்திக் கொண்டு செழுமையான வாழ்க்கையை அமைத்து கொண்டு வெற்றியுடன் திகழ வேண்டும்.


# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## பிரசவம் எப்போது?

## கண்டறிய அட்டவணை



கருவுற்றிருக்கும் பெண்கள் தங்களது பிரசவ திகதியை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவார்கள். அதைச் சுயமாகக் கண்டறிய கீழ்காணும் அட்டவணை பயன்படும்.

கடைசியாக மாதவிலக்கு எந்தத் திகதியில் ஏற்பட்டதோ, அந்தத் திகதியுடன் அட்டவணை இரண்டில் கொடுத்துள்ள நாட்களைக் கூட்டி, அட்டவணை மூன்றில் கொடுத்துள்ள மாதத்தின், குறிப்பிட்ட திகதியில் பிரசவம் நிகழும் என்பதைக் கணக்கிடலாம்.

உதாரணமாக, கடைசியாக மாதவிலக்கு ஆகஸ்ட் 28ல் ஏற்பட்டிருந்தால், அட்டவணை இரண்டில் உள்ள 7 நாட்களைக் கூட்டினால் அட்டவணை மூன்றில் மே 35ம் திகதியில் பிரசவம் ஏற்படும். மே மாதத்தில் 35ம் திகதி இல்லாததால் ஜூன் 4ல் பிரசவம் நடக்கும்.

திருமணமாகவுள்ள, புதிதாக திருமணமாகியிருக்கும் பெண்களும் இந்தக் குறிப்பை 'வெட்டி' வைத்துக் கொள்ளலாம்.

**அட்டவணை**

| ஒன்று | இரண்டு | மூன்று |
|---|---|---|
| ஜனவரி | 7 | அக்டோபர் |
| பெப்ரவரி | 7 | நவம்பர் |
| மார்ச் | 5 | டிசம்பர் |
| ஏப்ரல் | 4 | ஜனவரி |
| மே | 4 | பெப்ரவரி |
| ஜூன் | 7 | மார்ச் |
| ஜூலை | 6 | ஏப்ரல் |
| ஆகஸ்ட் | 7 | மே |
| செப்டெம்பர் | 7 | ஜூன் |
| ஒக்டோபர் | 7 | ஜூலை |
| நவம்பர் | 7 | ஆகஸ்ட் |
| டிசம்பர் | 6 | செப்டெம்பர் |

## தலைவலியைத் தவிர்க்க முடியுமா?



தலைவலி வருவது அனைவருக்கும் சகஜம் தான். சிலர் தலைவலி வருகிற மாதிரி இருக்கிறது என்று கூறிக்கொண்டே மாத்திரைகளை விழுங்கிக் கொள்வார்கள். இந்த வழக்கம் தவறானது.

தலைவலிக்குப் பல காரணங்கள் உள்ளது காரணமே தெரியாமல் தலைவலி வருவது உண்டு. இதற்காக அடிக்கடி வலி நிவாரண மாத்திரைகள் சாப்பிடவும் கூடாது. ஓயாமல் தலைவலியால் அவஸ்தைப்படுபவர்கள் உணவு முறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.

கோப்பி, தேனீர், பாலாடைக்கட்டி, குளிர்பானங்கள், சொக்கிலேட் போன்றவற்றை அறவே தவிர்க்க வேண்டும். நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டும்.

மிதமான உணவுவகைகளைச் சாப்பிட வேண்டும். இரவு உறங்கப் போவதற்கு முன்பாக, பாதங்களை வெதுவெதுப்பான நீரில் அமிழ்த்தி வைத்திருப்பதும் நல்ல பலனைக் கொடுக்கும். இதை விட தலைவலியைத் தவிர்க்க சில வழிகள்.

* தலைவலி சமயத்தில் வெதுவெதுப்பான நீரில் எலுமிச்சைச்சாறு, இஞ்சிச்சாறு கலந்து, சிறிதளவு உப்புச் சேர்த்துப் பருகலாம்.

* நல்லெண்ணெயைச் சூடுகாட்டி, ஆற வைத்த பின் அதைத் தலையில் தேய்த்து மசாஜ் செய்து பின் குளிப்பதும் தலைவலி வருவதைத் தடுக்கும்.

* தலைவலி மிக அதிகமாக இருந்தால், மிளகைப் பொடித்து நீரில் குழைத்து அதைச் சூடாக்கி, பொறுக்கும் அளவு சூட்டில் இந்தக் கலவையை நெற்றியில் பற்றுப் போட்டுக் கொள்ளலாம்.

* முருங்கை இலைச் சாற்றுடன் மிளகுத் தூளைச் சேர்த்து நெற்றிப் பொட்டில் தடவலாம்.

* இலேசாகத் தலைவலி ஆரம்பித்ததும் ஆப்பிள் துண்டங்களில் உப்புத் தூவிச் சாப்பிடலாம். தினமும் ஒரு டம்ளர் கரட்சாறு சாப்பிட்டு வர தலைவலி வருவதைத் தடுக்கலாம்.

* பன்னீரைக் குளிர்ந்த நீரில் விட்டு முகத்தில் தெளித்துக் கொள்ளலாம்.

* முக்கியமாக அடிக்கடி தலைவலி வந்தால் மருத்துவரிடம் சென்று மருத்துவப் பரிசோதனை செய்து அவரது ஆலோசனையின்படி நடந்து கொள்ளவேண்டும்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** HV

பெயர்:...............................

முகவரி:...............................

...............................

தொழில்:...............................

கையொப்பம்:...............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 15.07.2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

வழங்குவது புவனா

45

# மோனிக்கா என் மோனிக்கா

வெள்ளை மாளிகைப்பணியை விட்டு மோனிக்கா பெண்டகன் சென்றதும், அவளிடமிருந்த வெள்ளை மாளிகை அடையாள அட்டையையும் திருப்பிக் கொடுக்க வேண்டியதாயிற்று. ஆகவே ஒவல் அலுவலகத்துக்குள் நுழைவதற்கு மட்டுமல்லாமல் வெள்ளை மாளிகைக்குள் பிரவேசிப்பதற்கும் மோனிக்காவிற்கு பெட்டிகியூறியின் உதவி தேவைப்பட்டது.

பதிவு ஏடுகளில் பெயர் விபரங்களை பதியாமலே. பெட்டிகியூறி மோனிக்காவை அழைத்துச் சென்று ஒவலின் பின்புறமாக உள்ளே அனுமதிக்க வேண்டியதாயிற்று. அவ்வாறு ஒவலுக்குள் மோனிக்கா சென்ற போதும் கிளின்ரனை அவள் நெருங்க முடியாத சூழ்நிலை அப்போது உருவாகி இருந்தது.

கிளின்ரன் தன் இருக்கையில் இருந்து எழுந்து தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தார். அவருடைய முகம் கடுகடுப்பாக மாறியிருந்தது. கிளின்ரன் ஒரு தொலைபேசியில் பேசிக்கொண்டிருக்கும் போதே அவருடைய மேசையிலிருந்த வேறு இரு தொலைபேசிகளும் மணிகளை ஒலித்துக் கொண்டிருந்தன. இதனைத் தொடர்ந்து ஒவலின் பிரதான கதவைத் திறந்து கொண்டு பெட்டிகியூறி உள்ளே நுளைந்தார். அங்கு மோனிக்கா வந்திருப்பதையே மற்றைய இருவரும் கவனிக்கவில்லை என்று மோனிக்காவுக்குப் பட்டது. இதனால் அவள் விரக்தியின் விளிம்புக்கே சென்று விட்டாள்.

பெட்டிகியூறி தனது தொலைபேசி உரையாடலை முடித்துக்கொண்டு கிளின்ரனுடன் ஏதோ இரகசியமாகப் பேசினார். அவர்கள் என்ன பேசினார்கள் என்பது மோனிக்காவுக்குப் புரியவில்லை.

### ஏமாற்றம்

சற்று நேரத்துக்கெல்லாம் பெட்டிகியூறி மோனிக்காவை வெளியே அழைத்துவந்தார். இந்தச் செயல் மோனிக்காவுக்கு பெரும் ஏமாற்றமாகப் போய்விட்டது. கிளின்ரனுடன் சிறிது நேரமாவது உறவாட வாய்ப்புக் கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்தாள். ஆனால் முடியாமல் போய்விட்டது.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் ஒரு சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்துவதுக்கு கிளின்ரன் அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தார். எத்தனையோ முன்னேற்றகரமான ஏற்பாடுகளையும் அவர் செய்திருந் தார். ஆனால் அன்றைய தினம்

## பழைய காயத்தின் தழும்புகள்

கிளின்ரனுக்கு எட்டிய செய்தி அவரை உணர்ச்சிவசப்படுத்தி விட்டது. இஸ்ரேலில் சில அசம்பாவிதங்கள் நடந்திருந்தன. பாலஸ்த்தீன தீவிரவாதிகள் வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபட்டு பல அநர்த்தங்களை விளைவித்திருந்ததாக கிளின்ரனுக்கு தகவல் எட்டியது. இரு தரப்பினருக்கு மிடையில் தான் ஏற்படுத்தி வந்த இணக்கப்பாடுகள் இடையில் முறிந்துவிடுமோ என்று அவர் கவலைப்பட்டார்.

இந்தச் சூழ்நிலையை ஒட்டி கிளின்ரன் உடனடியாக அறிக்கை ஒன்று வெளியிடவேண்டிய நிலையிலிருந்தார்.

மோனிக்கா அவரைவந்து சந்திப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த அதே வேளையிலேயே இஸ்ரேல் வன்முறைச் செய்தியும் அவருக்கு வந்து சேர்ந்திருந்தது. பெட்டிகியூறி இந்தச் சூழ்நிலையை மோனிக்காவிற்கு விளக்கி, அவளை வழியனுப்பிவைத்தாள்.

ஏமாற்றமும் கவலையும் ஒன்றிணைந்து ஏற்படுத்திய சோர்வுடன் மோனிக்கா படுக்கச் சென்றாள். அப்போது கிளின்ரன் பற்றி கனவு கண்டாள். திடீரென விழித்தெழுந்த அவள், தான் நேசித்த தனது அன்பருக்கு ஏதோ தீங்கு நேர்ந்துவிட்டதோ என்று எண்ணி ஏங்கினாள். அடுத்தநாள் தொலைக்காட்சியில் கிளின்ரன் தோன்றினார். அவர் தவறுதலாக கீழே விழுந்து அவருடைய முழங்காலில் காயம் பட்டிருந்தது. தான் கண்ட கனவுக்கும் தன் அன்பருக்கு ஏற்பட்ட விபத்துக்கும் ஓர் ஒற்றுமை இருப்பதை உணர்ந்தாள்.

### மானசீக உறவு!

கிளின்ரனுக்கு விபத்தில் காயம் ஏற்பட்டது அவளுடைய உள்ளத்தில் வேதனையை ஏற்படுத்திய போதும், தனக்கும் அவருக்கும் இடையில் உள்ள மானசீகமான அன்பு இத்தனை வலிமை பொருந்தியதாக இருக்கிறதே என்று எண்ணி மகிழ்ச்சியும் அடைந்தாள்.

'விரைவில் குணமடைக, என்ற வாழ்த்து அடங்கிய அட்டையைத் தேடிப் பொறுக்கி எடுத்தாள். அத்துடன் வேறுபல பரிசுப் பொருட்களையும் எடுத்து பொதியாக்கி வெள்ளை மாளிகைச் சென்று பெட்டி கியூறி மூலம் கிளின்ர னுக்கு அனுப்பி வைத்தாள்.

மார்ச் 29ம் திகதி அன்று ஒவல் அலுவலகத்துக்கு, பின்புறமாகச் சென்ற மோனிக்கா அவரைச் சந்தித்தாள். அன்றைய தினம் கிளின்ரன் ஊன்று கோல்களுடன் அவளை வரவேற்றார். அவளை அணைத்து முத்தம் சொரிந்தார். அவள் சிறு குழந்தைபோல் விம்மி விம்மி அழுதாள். அவளுடைய கண்ணீரைத் தன்னுடைய கைக்குட்டையால் துடைத்து விட்டார்.

இருவரும் உரையாடிக்கொண்டிருந்த போது கிளின்ரன் முன்னெச்சரிக்கையான சில வார்த்தைகளை அவளிடம் கூறினார். அவர்கள் இருவருக்குமிடையில் உள்ள நெருக்கமான உறவு பற்றி எந்தச் சந்தர்ப்பத்திலும் எவரிடமும் கூறலாகாது என்று சொன்னார். அவளும் தான் நிச்சயமாக எவரிடமும் எதையும் கூறப் போவதில்லை என்று உறுதியளித்தாள். அதுமட்டுமல்லாமல், "எந்த நிலையிலும் நான் உங்களை எவரிடமும் காட்டிக் கொடுக்கமாட்டேன், எப்போதும் பாதுகாப்பேன்!" என்று சத்தியம் செய்தாள்.

தன்னுடைய அலுவலக தொலைபேசியும்



ஒட்டுக்கேட்கப்பட்டு வருவதாகவும் தனக்கு நம்பகமான தகவல் கிட்டியிருப்பதாக மோனிக்காவிடம் சொன்னார். அவளுக்கு மீண்டும் வெள்ளை மாளிகையில் பணிபுரிவதற்கான ஏற்பாடுகளில் இரு அதிகாரிகள் ஈடுபட்டிருப்பதாகவும் கிளின்ரன் கூறினார். ஆனால் எதுவும் துரிதமாக நடைபெறவில்லை என்பதை அவர் ஒப்புக்கொண்டார்.

மோனிக்காவுக்கு பெண்டகன் வேலையில் அலுப்புத்தட்டி விட்டது. எப்போதும் ஒரே பாணியில் அவள் வேலை செய்ய வேண்டியிருந்தது. இருப்பினும் அவளுடைய வேலைத் திறனை மேலதிகாரிகள் பாராட்டினார்கள். அதுமட்டுமல்லாமல், அந்த ஆண்டின் சிறந்த பணியாளர்களுக்கு வழங்கப்படும் விருதும் அவளுக்கு வழங்கப்பட்டது. ஒரு மாத காலம் ஆசிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளுவதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டது. இருப்பினும் இந்தப்பயணம் கூட அவளுக்கு மகிழ்வைத் தரவில்லை. அத்தகவல்களையும் அவள் கிளின்ரனிடம் சொன்னாள்.

ஏப்ரல் மத்தியில் மோனிக்கா ஆசிய நாடுகளுக்கான பயணத்தை முடித்துக் கொண்டு திரும் பியபோது, அவள் வீட்டில் பல பிரச்சனைகள் தலை யெடுத்திருப்பதை அவதானித்தாள். அவளுடைய தம்பி மைக்கேல், ஒரு மோட்டார் விபத்தில் சிக்கி தெய்வாதீனமாக உயிர் தப்பியிருந்தான். தனது வண்டியைச் செலுத்திக் கொண்டிருக்கும்போது தூங்கியிருக்கிறான். இதனால் பாதையை விட்டு விலகிய மோட்டார் ஒரு பள்ளத்துள் வீழ்ந்து புரண்டிருக்கிறது. அதே வேளை மைக்கேல் வண்டிக்குள்ளிருந்து வெளியே குதித்துவிட்டான். அதே சமயம் அந்த வண்டி தீப்பிழம்பாக வெடித்துச் சிதறியிருக்கிறது. இத்தகவலை அறிந்ததும் மோனிக்கா மிகவும் வேதனைப்பட்டாள். ஆனால் மைக்கேல் சிறு உரசல் காயங்களுடன் வீட்டிலேயே இருந்தான். அவனைக்கட்டி அணைத்துக்கொண்டு ஒவென்று அழுதாள்.

### தொலைபேசியில் தொல்லை

அடுத்தநாள் மோனிக்கா பெண்டகன்



சென்று தனது பணியைத் தொடங்கிய அதே வேளையில் அவளுக்கு ஒரு தொலைபேசி அழைப்புவந்தது. அவசரமாக போனைக் கையில் எடுத்தாள். அடுத்த பக்கத்திலிருந்து நாய்குரைப்பது போன்று ஒரு பெண்ணின் குரல் ஒலித்தது. அந்தக் காலைப் பொழுதில் மோனிக்காவை அந்தப் பெண் குரல் திட்டித்தீர்த்தது. சற்றும் எதிர்பாராத நிலையில் இச்சம்பவம் நடைபெற்றதால் மோனிக்கா குழப்பமடைந்தாள். அலுவலகத்தில் பணிபுரியும் ஏனைய ஊழியர்களின் முன்னிலையில் தனது மனஉளைச்சலை வெளிக்காட்டாமல் தொலைபேசியைத் தடாலெனவைத்து விட்டாள். இருப்பினும் அவளுடைய முகம் கோபத்தால் சிவந்து போயிருந்தது.

தொலைபேசியில் அந்த வேளையில் பேசியவள், ஆண்டி பிளேய்லரின் மனைவி கேற். தன்னுடைய கணவனுடன் மோனிக்கா கள்ளத்தனமான உறவு வைத்திருப்பதாக குற்றஞ்சாட்டியிருந்தாள். தற்செயலாக பிளேய்லரின் நாட்குறிப்பை தான் பார்க்க நேர்ந்ததாகவும், அதில் இருவரும் கொண்டிருந்த உறவுகளின் விபரங்களை வாசிக்க நேர்ந்ததாகவும் கடுகடுப்புடன் கூறினாள். வலண்டைன் தினத்தை முன்னிட்டு பிளேய்லருக்கு மோனிக்கா அனுப்பி வைத்த வாழ்த்து அட்டைகளையும் குறிப்புகளையும் கூடதான் கண்டதாகவும் கேற் கூறியிருந்தாள்.

மோனிக்கா மீது அவர் கொண்ட காதலால் தான் பிளேய்லர் தன் மீதும் தன் குழந்தை மீதும் பாராமுகமாக நடந்து கொள்கிறார் என்றும் குற்றஞ்சாட்டினாள்.

இத்தனைக்கும் மத்தியில் அலுவலகத்திலிருந்து பணியைத் தொடர அவளால் முடியவில்லை. அவசரமாகத் தான் வெளியே செல்ல வேண்டியிருப்பதாக, குறுகிய கால விடுமுறை போட்டுவிட்டு பெண்டகனை விட்டு வெளியே வந்தாள். தெருவிலிருந்த பொதுத் தொலைபேசிக் கூண்டை அடைந்து பிளேய்லரின் அலுவலகத்துக்கு அழைப்பெடுத்து, பிளேயிலருடன் பலத்த சத்தத்துடன் சண்டை போட்டாள்.

பிளேய்லர் தன் புதிய காதலி தன் மனைவியிடம் முதல் நாளன்று வீட்டுக்கு வந்து, தான் கருவுற்றிருப்பதாகவும் பிளேய்லரை மறந்துவிடுமாறு கூறிச் சென்றதாகக் கூறினான். அதுமட்டுமல்லாமல் இருவரும் கட்டிப்புரண்டு சண்டைபோட்டதாகவும் அவர்களை விலக்குப் பிடிக்க தான் பெரும் சங்கடப்பட்டதாகவும் தெரிவித்தான். கேற்றுடன் நடைபெற்ற வாக்குவாதத்தின் போது, தன் காதலியிடம் மோனிக்காவுக்கும் தனக்குமிருந்த கள்ளக் காதல் பற்றிக் கூறியிருந்த கதைகளையும் அவள் கேற்றிடம் கூறியதாகவும் சொன்னான்.

பிளேய்லரை வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்தாள் மோனிக்கா. இனிமேல் தன் முகத்தில் விழிக்க வேண்டாம் என்றும் அவள் கூறி ஓய்ந்தாள்.

(வருவாள்)

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**தெஹிவளை வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் – **திருமதி.ப.புஸ்பநாதன்,**
45, புகையிரத வீதி, தெஹிவளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பாப்பா முரசு சிறுகதை

## ஆயிரம் தந்திரம் தெரியும்

சம்மங்கி காட்டில் பூனையாரும், நரியாரும் மிகவும் நட்பாக பழகி வந்தனர். இவர்களது நட்பைக் கண்ட பலர் பூனையாரை எச்சரித்துக் கொண்டே இருந்தனர். 'மிகவும் தந்திரம் பிடித்தவன் இந்த நரி. தனக்கு ஆபத்து என்றால் உயிர் நண்பனான உன்னைக் கொல்லவும் தயங்க மாட்டான். இவனிடம் ஜாக்கிரதையாக இரு', என்றனர்.

பூனையும் எல்லா விஷயத்தையும் மனதில் வைத்துக்கொண்டது. ஆனால், பூனையால் நரியின் நட்பை வெட்ட முடியவில்லை.



தினம் தினம் நரியார் வந்து பூனையை அழைத்துக் கொண்டு தான் எந்த இடத்திற்கும் செல்லும். எனவே, நரியாரின் நட்பை முறிக்கவும் முடியாமல், தொடரவும் முடியாமல் தவித்தது பூனை.

அவ்வப்போது தன் இனத்தாரின் பெருமைகளை, தங்களது தந்திரங்கள் அறிவுக்கூர்மை எல்லாவற்றையும் சொல்லி பயங்கரமாக பீத்திக் கொள்ளும் நரியார். இவை எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக் கொள்ளும் பூனையார்.

அன்று பூனையாரிடம் சுவாரஸ்யமான கதை ஒன்றை சொல்லியபடி வந்தது நரி.

"இந்த இடத்தில் நமக்கு எதிரிகள் அதிகம் இருக்கின்றனர் என்று எனது அம்மா சொன்னார். சட்டென்று யாராவது நம்மைத் தாக்கினால் நீர் என்ன செய்வீர்?" என்றது பூனை.

"ஹோ... என்னைப் பற்றி உனக்கு தெரிந்தது அவ்வளவுதான் நண்பரே. எங்கள் குலத்திற்கு ஆயிரம் தந்திரங்கள் தெரியும். அதில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தி நான் தப்பிவிடுவேன். நீர் என்ன செய்வீர்?" என்றது நரி.


"நண்பரே! எனக்கு ஒரே ஒரு தந்திரம் தான் தெரியும். அதை பயன்படுத்தி தப்பிக்கப் பார்ப்பேன். அது சரிவரவில்லை என்றால் சாவைத் தவிர வேறு வழியில்லை," என்றது பூனை.

அச்சமயம் எங்கிருந்தோ வந்த வேட்டை நாய்கள் கூட்டம் இவர்களைத் துரத்த ஆரம்பித்தது.


பூனை தனக்கு தெரிந்த ஒரு தந்திரத்தைப் பயன்படுத்தி அருகில் இருந்த பெரிய மரம் ஒன்றின் மீது ஏறிக் கொண்டது.

நரியாருக்கு மரம் ஏறத் தெரியாது. எனவே எந்தத் தந்திரத்தை பயன்படுத்தி தப்பிக்கலாம் என்று யோசிப்பதற்குள் வேட்டை நாய்கள் நரியார்மீது பாய்ந்து குதறியது. பரிதாபமாக செத்தது நரியார்.

***அதற்குத் தான் பெரியவர்கள் 'ஒன்றே செய், அதை நன்றாகச் செய்' என்று சொல்வார். எல்லாம் தெரியும் என்று நினைத்து ஒன்றையும் உருப்படியாக செய்யாமல் இருப்பதைவிட ஒன்றை கற்றாலும் அதை நல்லபடியாக கற்க வேண்டும் என்பர்.***



**A,B,C,D, ஆகிய இந்த 4 வழிகளில் எந்த வழியாகக் கீழே சென்றால் அதிக நட்சத்திரங்களைத் தொட்டுச் செல்லலாம்? சென்றுதான் பாருங்களேன்.**




## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **15.07.2000.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 350**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 348

**பரிசுக்குரியவர்:**
என்.எம்.நிஸாம்,
மட்/அல் ஹிறா வித்தியாலயம், காத்தான்குடி-05.


**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எஸ்.சிவனேசன்,<br>நு/கிளனமேறா த.வி, தலவாக்கலை. | பே.தினேஸ்குமார்,<br>அக்/கோ/விநாயகர் மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று. |
| நா.பவித்திரா,<br>விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | எம்.டீ.எம்.யூனுஸ்,<br>மட்/ம.ம.வித்தியாலயம், காத்தான்குடி-03. |
| அ.ஷிறோமி,<br>கன்னியர் மடம் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் | சித்தாரா கலீல்,<br>அல்-அஸ்ஹர் ம.க.திஹாரிய. |
| ச.கிருத்திகா,<br>வ/இ/மகளீர் மகா வித்தியாலயம், வவுனியா. | பாத்திமா றுஸ்கா நளீர்,<br>மூதூர் மத்திய கல்லூரி, மூதூர். |
| பா.திலிப் பாரத்,<br>கொழும்பு இந்துக் கல்லூரி, கொழும்பு-04. | எஸ்.மதுரானந்தி,<br>க/மு.விஷ்ணு மகா வித்தியாலயம்,பெரியநீலாவணை. |

## சிலந்திகள் பற்றிய தகவல்கள்

➡ ஓர் ஏக்கர் பரப்பளவில் ஒரு சிலந்தி வலை பின்னுகிறது என்று வைத்துக் கொண்டால், அதன் இழைகள் மூலம் இந்தப் பூமியை ஒரு சுற்றுச்சுற்றி விடலாம்.






⬇ **சி**லவகையான பெண்-சிலந்திகள் இணை கூடிய பின்னர் ஆண் சிலந்திகளைக் கொன்று விடும். இதை முன்கூட்டியே அறியும் சில ஆண் சிலந்திகள், பெண் சிலந்திகளின் அருகே இன்னொரு வலை பின்னணிக் கொள்ளும். கடைசி நேரத்தில் தப்பி விடும்.

⬆ **சி**லந்திகள் தாங்கள் பிடித்த இரையைப் பந்தாகச் சுருட்டிக் கொண்டு பாதுகாப்பாக வைத்துக் கொள்ளும். தேவைப்படும் நேரத்தில் அதை உண்ணும். 5 ஆயிரம் மீட்டர் உயரத்திற்குக் கூட இவை இந்த இரை உருண்டையை உருட்டிக் கொண்டு சென்று விடும்.





## செய்து பாருங்கள்

**தேவையான பொருட்கள்:**

பெரிய அளவிலான குளிர்பான பிளாஸ்டிக் வெற்றுப் போத்தல் ஒன்று, பெரிய வளையல் ஒன்று, பிளாஸ்டிக் வயர் அல்லது கட்டுக் கம்பி.

**செய்முறை :**

1. பிளாஸ்டிக் போத்தலை படத்தில் உள்ளது போல் வெட்டிக்கொள்ளுங்கள். வெட்டும்போது மேற்புறம் வளைவாக வரக்கூடியவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

2. படத்தில் காணப்படுவது போன்று வளையலின் இருபுறமும் பிளாஸ்டிக் வயர் அல்லது கட்டுக்கம்பி கொண்டு கட்டி, அதன் நடுவில் வெட்டிய பிளாஸ்டிக் போத்தலை வையுங்கள்.

3. போத்தலின் உள்ளே மண் போட்டு சிறிய பூஞ்செடிகளை நாட்டவும். இப்போது இந்தப் பூந்தொட்டியைக் கட்டித் தொங்க விட்டால் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.



## விறு விறு தொடர்

தீபிகா திகைத்து, "ஐ ம் எக்ஸ்ட்ரீம்லி ஸாரி சார். என்னால உங்களுக்கு இவ்வளவு நஷ்டமா?" என்றாள்.

"ஆனா என்னமோ தெரியலை எனக்கு உங்க மேல கோபம் வரலை."

"ஏன்?"

"தெரியலை."

"ஐ ஃபீல் வெரி கில்ட்டி சார்!."

"பரவால்லை. சின்னதா ஒரு புன்னகை செய்யுங்க. எனக்கு அது போதும்!" என்று அவள் முகத்தை குறுகுறுவென்று ஆகாஷ் பார்க்க... தீபிகா அவனை அதிசயமாகப் பார்த்தாள்.

இது காதல் பிறந்த கதை!

காதல் வளர்ந்த கதையை விஸ்தாரமாகச் சொல்வதற்கு முன்னால் பரிசுப் பார்சலுடன் மண்டப ஹாலுக்குள் மாறுவேடத்தில் நுழையும் ரஞ்சித் என்ன செய்யப் போகிறான் என்று கவனிப்போம்.

ரஞ்சித் சந்தனம் தொட்டுக் கொள்ளவில்லை.



03

யாரோடும் புன்னகைக்கவில்லை. மணமக்கள் இருந்த மேடை நோக்கி வந்தான். ஆனால் மேடை ஏறவில்லை.

மேடைக்குப் பின்புறம நகர்ந்தான்.

தீபிகா வாங்கி வாங்கி வைத்த பரிசுப் பார்சல்களோடு, தான் கொண்டு வந்த பார்சலை ரகசியமாக வைத்தான் அவசரமாக வெளியே நடந்தான்.

ஹோட்டல் 'ஜெம்'மின் வர வேற்பு ஹாலில் ஓரமாய் இருந்த ஒரு ஸோபாவில் அமர்ந்து பதினைந்து நிமிடங்களில் பேட்டியை முடித்துக் கொள்ளச் சொல்லிப் பேச ஆரம பித்த அந்த மலையாள எழுத்தாளர் அப்ஸராவின் பதிலைத் தூண்டும் கேள்விகளால் ஈர்க்கப்பட்டு கிட்டத் தட்ட ஒரு மணி நேரம் தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டு, விடை பெறும்போது "என் எழுத்துக்களைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டு பேட்டி எடுத்தீர்கள். மகிழ்ச்சி!" என்று பாராட்டியது அப்ஸ ராவிக்கு பெருமையாக இருந்தது. (இதோ முற்றுப்புள்ளி!)



அப்ஸரா ஹோட்டலுக்கு வெளியே வந்து பார்க்கிங் பகுதியை நோக்கி நடந்தபோது, போர்ட்டிகோவில் வந்து நின்ற டாக்ஸியிலிருந்து ரஞ்சித்தின் சித்தப்பா இறங்குவதைப் பார்த்தாள்.

அவர் கையில் முதலில் எடுத்துச் சென்ற பரிசுப் பார்சல் இல்லாததைக் கவனித்தவள் 'ஏதோ ரிசப்ஷனுக்குப் போவதாகச் சொன்னாரே, அதற்குள்ளா சென்று வந்துவிட்டார்?' என்று ஆச்சரியப்பட்டாள்.

அவரை நோக்கி நடந்தாள்.

ரஞ்சித் நீட்டிய ஐநூறு ரூபாய் நோட்டுக்கு உதட்டைப் பிதுக்கினான் டாக்ஸி டிரைவர்,

"அம்பது ரூபா சில்லறையா கொடு சார்!" என்றான்.

ரஞ்சித் தன் மணிபர்சில் தேடிப் பாாத்து "இல்லையே!" என்றபோது-

"என்ன சார்? சில்லறை வேணுமா? எவ்வளவுக்கு?" என்று வந்து சேர்ந்த அப்ஸராவைப் பார்த்து மீண்டும் திடுக்கிட்டான் ரஞ்சித்.

இயல்புக்கு வந்து "ஐநூறு ரூபாய்க்கு சில்லறை இருக்குமா?" என்றான்.

"பார்க்கிறேன்!"

கைப்பையில் தேடி ஐந்து நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்துத் தந்தாள்.

"ரெண்டு அம்பது இருக்குமா?"

இருந்தது. கொடுத்தாள்.

வாங்கிக் கொண்ட டாக்ஸி டிரைவர், "அம்மா, என்னை ஞாபகம் இருக்கா?" என்று அப்ஸராவுக்கு வணக்கம் வைத்தான்.

நினைவில் தேடிப் பார்த்து "ஞாபகம் வரல்லையே?" என்றாள்.

"என்னம்மா மறந்துட்டே? அலோ இந்தியா பத்திரிகைலதானே நீ வேலை பார்க்கிறே? ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி ஒரு தாடி வெச்ச ஆளு என் டாக்ஸில ஒரு பெட்டியை வுட்டுட்டுப் போயிட்டான். கட்சீயா அவன் உங்க ஆபீசுக்கு வந்ததால அங்க தேடி வந்து அந்தாளை பார்த்து ஒப்படைச்சேன். அதுல பதினைஞ்சி லட்சம் பணம் இருந்துச்சின்னு சொல்லி அந்த ஆளு உடனே என்னைக் கட்டிப் புடிச்சி கைல ஆயிரம் ரூபாய் கொடுத்து? அப்போ நீதானேம்மா என்னை ஃபோட்டோ பிடிச்ச? விவரம் எல்லாம் கேட்டுக்கினு அடுத்த பொஸ்த்த வத்துல மேட்டரு போட்டுக்கினியே."

"ஆ... இப்ப ஞாபகம் வருது, உன் பேர் ஞானமணி தானே?"

"கரீக்ட்டாய் பிடிச்சியே! என்னைப் பத்தி ஏதோ பாராட்டி எழுதியிருந்தேன்னு புரிஞ் சுது. எக்ஜாக்டா இன்னா எழுதியிருந்தேன்னு புரியலை. நம்ம தோஸ்த்துங்க வெறும் அஞ் சாங் கிளாஸ் தாண்டலையா, எவனுக்கும் தெரியலை. வர்ட்டா?"

அவன் சிரித்து புறப்பட்டதும் ரஞ்சித்திடம் "என்ன சார் போனதும் தெரியலை, வந்ததும் தெரியலை, ரிசப்ஷன்ல சாப்புடலையா நீங்க?" என்றாள்.

"அதைப்பத்தி உனக்கென்னம்மா? சில்லறை கொடுத்ததுக்கு தேங்ஸ்!" என்று உள்ளே நடக்க எத்தனிக்க, "இருங்க ஸார்! உங்ககிட்ட பேசணும். இப்ப நீங்க தேங்ஸ் சொன்னீங்களே, இது மேனர்ஸ்! இந்த மேனர்ஸ் உங்க பையன் ரஞ்சித்கிட்ட இல்லை!" என்றாள்,

"என்ன செஞ்சான்?"

"நீச்சல் குளத்துல குளிச்சிட்டிருந்தார், டைவிங் போர்டுல இருந்து குதிக்கத் தயாரா இருந்த போஸ் நல்லாருந்திச்சி. பத்திரிகையில போடலாமேன்னு சட்டுன்னு ஃபோட்டோ எடுத்துட்டேன். அதுக்கு அவருக்கு கோபம் வந்துடுச்சி."

"யாருக்கும் வரும். பர்மிஷன் கேக்காம ஒருத்தரை ஃபோட்டோ எடுக்கலாமா?"

"தப்புத்தான். அந்த ஸெகண்ட் மிஸ் பண்ணிட்டா அப்புறம் அதே மாதிரி போஸ் அமையாதே! ஃபோட்டோ எடுத்துட்டு அப்புறம் சொல்லிக்கலாம்னுதான்... சரி, செஞ்சது தப்புதான்னு மன்னிப்பும் கேட்டுட்டேன். ஃபோட் டோவைப் பயன் படுத்தலை, நெகடிவை ஒப்படைச்சிடறேன்னு சொல்லிட்டேன். அதுக்கப்புறமும் கோபம் அடங்காம காட்டுமிராண்டித்தனமா என் கேமிரா வைப் பிடுங்கி நெகடிவை உருவி எக்ஸ்போஸ் பண்ணிட்டார் அவர்!"

"அவன் செஞ்சது சரிதான்!"

"வயசுல பெரியவராச்சேன்னு சொன்னா, நீங்களும் அவர் செஞ்சது சரின்னு சொல்றீங்களே... அவரோட சித்தப்பாதானே நீங்க? அதே குணம் தானே இருக்கும்! இதோபாருங்க சார், ரஞ்சித்தைப் பார்க்க முடியலை நீங்கபார்ப்பீங்க. சொல்லிடுங்க! நாளைக்கு ஒரு நாள் டைம் தர்றேன். அதுக்குள்ளே ரஞ்சித் என்கிட்ட மன்னிப்புக் கேக்கணும். ஃபோன்ல கேட்டால் போதும். இதோ இருக்கு என் கார்ட்! கொடுத்திடுங்க!" என்று நகர்ந்தாள்.

"இரும்மா! அவன் மன்னிப்பெல்லாம் கேக்க மாட்டான். என்ன செய்றதா உத்தேசம்? அதையும் சொல்லிட்டுபோ!"

"அவர் வீணடிச்ச ஃபிலிம் ரோல்ல இவரோட ஃபோட்டோ மட்டும் இல்லை சார்! வேற பேட்டிகளுக்காக எடுத்த வேற வி.ஐ.பி.களோட ஃபோட்டோவும் இருக்கு. அவங்களை எல்லாம் மறுபடி ஃபோட்டோ எடுக்க முடியாது. ஃபோட்டோ இல்லாம கட்டுரை எழுத முடியாது. அதனால இது எங்க பத்திரிகைக்கு இப்போ மானப் பிரச்சனை ஆயிடுச்சி. ரஞ்சித் ஃபோன் செஞ்சி என்கிட்ட மன்னிப்புக் கேக்கலைன்னா முதல் காரியமா நான் போலீஸ்ல புகார் கொடுப்பேன். அப்புறம் எங்க பத்திரிகையோட லாயர் 'மான நஷ்ட ஈடு வழக்கு ஏன் தொடரக்கூடாது'ன்னு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்புவாரு. இதெல்லாம் தேவைதானான்னு நல்லா யோசிச்சுச் சொல்லுங்க!" என்று விட்டு வேகமாக பார்க்கிங் பகுதிக்கு நடந்தாள் அப்ஸரா.

கையில் பிடித்திருந்த அவளின் விலாச அட்டையை சில விநாடிகள் முறைத்துப் பார்த்த ரஞ்சித் பற்களைக் கடித்த படி லிஃப்ட்டுக்குச் சென்றான்.

அந்த திருமண மண்டபத்தில் மறுநாள் காலை முகூர்த்தத்திற்கான மணவறையை பிரமாண்டமான டிசைனில் தயார் செய்து கொண்டிருந்தார்கள்.

இரவு பத்து மணிக்கு அத்தனை சுறுசுறுப்பாக இருந்தது மண்டபம். மாலை, ரிசப்ஷன் முடிந்ததில் குப்பையாகிப் போன பெரிய ஹாலை நான்கு பேர் நாற்காலிகளை நகர்த்திக் கூட்டிக் கொண்டிருக்க... ஒரு பக்கம் திருமணத்திற்கு வருபவர்களுக்கு விநியோகிக்கும் தாம்பூலப் பையில் தேங்காய், வெற்றிலை, பாக்கு, சாக்லேட், பக்தி நூல் என்று வட்டமாக அமர்ந்து அரட்டை அடித்தபடி போட்டு அடுக்கிக் கொண்டிருந்தார்கள்.

யாரோ உறவினர்கள் பெட்டிகளோடு வந்து இறங்கி பயணக் களைப்புடன் புன்னகைத்தார்கள். யாரோ உறவினர்கள் எங்கோ தங்கிக் கொள்வதாய் புறப்பட்டுப் போனார்கள்.

சமையல் பகுதியில் காய்கறிகள் நறுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஸ்வீட் தயாராகிக் கொண்டிருந்தது. தலைமை குக் வேட்டியைத் தூக்கிப் பிடித்து நடந்தவாறு நான்கு திசைகளிலும் உத்தரவுகள் போட்டுக் கொண்டிருந்தார்.

மண்டபத்தில் இருந்த குளிர் செய்யப்பட்ட உயர்தர மணமகன் அறையில் ஜிப்பாவும், லுங்கியும் அணிந்து கட்டிலில் சாய்ந்தமர்ந்திருந்த ஆகாஷ் ஒவ்வொரு விரலாய் நெட்டி எடுத்துக் கொண்டிருக்க.. அருகில் நடந்தபடி ஸெல்ஃபோனில் பேசிக் கொண்டிருந்தான் விஷால்.

"இல்லை மனோ நீ அனாவசியமாக கன்ஃப்யூஸ் ஆகாதே! ஃபிலிபைன்ஸ் லேர்ந்து வர்றது மூணு பேர்தான். அவங்களுக்கு ஏர்ப் போர்ட் பக்கத்திலேயே டிரிடெண்ட்ல சூட் புக் பண்ணிருக்கு. மணிலா லேர்ந்து வர்றபார்ட்டிக் குத்தான் தாஜ்ல ஒதுக்கிருக் கோம். ஜார்ஜ் எங்கே? அவன் கிட்ட க்ளீனா சார்ட் போட்டுக் கொடுத்துருக்கேன். எதுவா இருந்தாலும் அவனைக் கேட்டுக்கிட்டு செய்! ஒண்ணும் குழப்பம் இல்லையே?"

பேசிவிட்டு, "என்ன ஆகாஷ், தூக்கம் வரலையா?" என்று அருகில் அமர்ந் தான்.

"களைப்பா இருக்கு. ஆனா தூக்கம் வரல்லை. நீ கோய்ப்படேன்."

"படுக்கிறதா? நிறைய வேலை இருக்கு."

"எல்லாம் பார்த்துப்பாங்க. நீ கொஞ்ச நேரமாவது தூங்கலைன்னா காலை ஃப்ரெஷ்ஷா இருக்கமாட்டே விஷால்!"

"காலைல ஃப்ரஷ்ஷா இருக்க வேண்டியது நீயா, நானா?"

"நீதான் விஷால், எப்படின்னு சொல்லட்டுமா? கல்யாண வீட்டுக்குவர்ற சொந்தக் காரங்க பாதிப் பேர் அங்க இன்னொரு கல்யாணம் அமைக்கிறதுக்கு பிளான் போடு வாங்க. குறிப்பா பொண்ணு வெச்சிருக் கிறவங்க 'மாப்பிள்ளைக்கு தம்பி ஒருத்தர் கல்யாண வயசுல உண்டாமே, அவரு எங்கே இருக்காரு?'ன்னு விசாரிச்சி அவங் கள் உன்னைப் பார்ப்பாங்க. புரியுதா நீ ஏன் ஃப்ரெஷ்ஷா இருக்கணுமின்னு?"

(தொடர்ந்து வரும்)

மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்

## புகழ்பெற்ற வழக்குகள் 06

அமெரிக்க மக்களின் பேரன்புக்குப் பாத்திரமானவரும் துணிச்சல் மிக்கவரும் மிகச் சுறுசுறுப்பான இளம் பருவத்தினருமான அந்நாட்டின் ஜனாதிபதியாக விளங்கிய ஜோன் எ.ஃப் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டார். டெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள டல்லாஸ் நகர வீதியொன்றில் பவனி சென்று கொண்டிருக்கும் போது எங்கிருந்தோ பாய்ந்து வந்த துப்பாக்கிக் குண்டு அவருடைய தலையில் பட்டது. அருகிலிருந்த மனைவி ஜாக்குலின் மடியில் சாய்ந்தார்.

அவரைக் கொன்றவன் என்று ஆஸ்வால்ட் என்பவன் கைது செய்யப்பட்டான். ஆனால் அவனையும் மற்றொருவன் சுட்டுக் கொன்றான். இதனால் கென்னடி ஏன் கொலை செய்யப்பட்டார் என்பதற்கான காரணமும் தெரியவில்லை, இக் கொலைக்கு சூத்திரதாரி யார் என்பதும் இதுவரை வெளியாகவில்லை.

அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடி இறந்தது நவ.22, 63 அன்று. ஆனால், இன்றுவரை அவரது இறப்பு துப்பாக்கி குண்டினால் ஏற்பட்டது என்பதைத் தவிர, வேறெந்த உண்மையையும் நிச்சயமாகக் கூறமுடியாத நிலை. கொலை செய்தது யார் என்பது கூட உறுதிசெய்யப்படவில்லை. கொலை செய்ததாக போலீஸ் கைதுசெய்தவன் தன்னை ஆஸ்வால்ட் என்று கூறிக்கொண்டான், ஆனால் போலீசார் அவனை சரிவர விசாரிப்பதற்குள் அவனே படுகொலை செய்யப்பட்டு விட்டான்.

இறப்பதற்கு முன் தினம் தான் கென்னடி, தன் மனைவி ஜாக்குலினுடன் டல்லாஸ் நகருக்கு வந்திருந்தார். டல்லாஸ் நகரில் உள்ள நெடுஞ் சாலையில் உயர்ந்த கட்டிடமொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்தான் ஆஸ்வால்ட். குறிப்பிட்ட தினத்தில் ஒரு டெலஸ்கோப் துப்பாக்கியை வாங்கி, அதைப் பிரித்துப் பேப்பரில் சுற்றி தனது லாட்ஜூக்கு வந்தான்.

அந்த நீளமான உறை பற்றி சிலர் கேட்ட போது, 'திரைச்சீலை மாட்டுவதற்கான இரும்புக் கம்பிகள் என்று பதிலளித்தான்.

அடுத்தநாள் இரவு எட்டு மணிக்கு முன்பே தான் பணியாற்றிய கிடங்கில் ஆறாவது மாடிக்குச் சென்றான். அங்குள்ள ஒரு ஜன்னலின் மூலமாக, துப்பாக்கியில் பொருத்தப்பட்ட டெலஸ்கோப் மூலம் சாலையை, பார்க்கத் தொடங்கினான். தான் கொண்டுவந்த புத்தகங்களால் சாமர்த்தியமாக துப்பாக்கியை மறைத்துக் கொண்டான். அவனைப் பார்த்த யாருக்கும் சந்தேகம் எழவில்லை- அவன் அங்கேயே பணி புரிபவன் தானே. அடுத்த நாளும் அதையே செய்தான் ஆஸ்வால்ட்.

மதிய உணவு வேளையில் ஜனாதிபதி கார் அந்தப் பாதையில் வருவதாகச் செய்தி வர, கட்டிடத்தில் உள்ளவர்களெல்லாம் கீழிறங்கிச் சென்று விட்டனர்- தங்கள் அன்புத் தலைவரை நெருக்கத்தில் பார்க்க வேண்டுமென்பதற்காக. ஆஸ்வால்ட் தன்னைத்தயார் நிலையில் வைத்துக் கொண்டான். அவனது துப்பாக்கியிலிருந்து குறி தப்பாமல் குண்டுகள் வெளிப்பட்டன. கென்னடி மீது குண்டு பாய்ந்ததும், மனைவியின் மடியில் அலறி சாய்ந்தார். அதே காரில் வந்த ஆளுனர் கொனாயின் மீதும் ஒரு குண்டு சீறிப் பாய்ந்தது.

அப்போது அவனை யாரும் சந்தேகிக்கவில்லை என்றாலும், தன் லாட்ஜூக்கு திரும்பி வந்த பிறகு, அவனது நடவடிக்கை சந்தேகத்திற்கு இடமாக அமைந்திருப்பதை ஒரு போலீஸ்காரர் கண்டு பிடித்துக் கேள்விகள் கேட்க, அவரை சுட்டுக் கொன்று, திரையரங்கம் ஒன்றிற்குள் புகுந்து கொண்டான் ஆஸ்வால்ட். போலீசார் அவனை வளைத்துப் பிடித்தனர்.

பிறகு கிடைத்த சாட்சிகளின் படி (கென்னடியை சுட்டுவிட்டு அங்கேயே விட்டு வந்திருந்த துப்பாக்கியை ஆஸ்வால்ட்தான் வாங்கினான். என்பது உட்பட) கென்னடி மரணத்துடன் அவன் சம்பந்தப்பட்டவன் என்று கண்டுபிடித்தனர்.

'ஜனாதிபதி, போலீஸ்காரர் ஆகிய இருவர் மரணத்துக்கும் தான் காரணமல்ல...' என்று சாதித்தான் ஆஸ்வால்ட். அடுத்த நாள் அவனைப் பார்க்க அவனது மனைவி, தாய் வந்திருந்தனர்.

அந்த ஞாயிற்றுக்கிழமை (கென்னடி இறந்தது வெள்ளிக்கிழமை) ஆஸ்வால்டைப் போலீஸ் தலைமையகத்திலிருந்து சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றனர். அவன் கைகளில் விலங்கு மாட்டப்பட்டிருந்தது. சுற்றிலும் பாதுகாப்புக்காகப் பல ஆசாமிகள். பல தொலைக்காட்சிக் கேமிராக்களின் வெளிச்சம் அவன் மீது. ஒரு நிருபர் படையே அவனை நெருங்கிக் கேள்விக் கணைகளைத் தொடுத்தது. அந்தக்கூட்டத்திலிருந்து வெளிவந்த ஒருவன் தனது துப்பாக்கியை எடுத்துச் சடசடவென ஆஸ்வால்டின் வயிற்றுப் பகுதியில் சுட்டான். உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டும் நினைவு திரும்பாமலேயே ஆஸ்வால்ட் இறந்தான்.

அவனைக் கொலை செய்தவனை போலீசார் உடனடியாக மடக்கிப் பிடித்தனர். அவன் பெயர் ஜாக்ரூபி என்பதும், அவன் ஒரு முன்னாள் தாதா என்பதும் சிக்காகோவில் வசித்தவன் என்பதும் தெரியவந்தன.

## கண்டுபிடிக்கப்படாத கொலை மர்மம்!



ராம் ஷேகர்

புதிய ஜனாதிபதி லிண்டன் ஜான்சன், கென்னடி படுகொலை குறித்து விசாரிக்க வாரன் கமிஷனை நியமித்தார். ரூபியை விசாரித்தபோது 'ஆஸ்வால்ட் வழக்கில் சாட்சியாகத் திருமதி கென்னடி கூண்டில் ஏற வேண்டியிருக்கும். அவருக்கு அந்த சங்கட நிலை ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் நான் ஆஸ்வால்டைக் கொன்றேன்...' என்றான்.

அவன் ஒரு முன்னாள் கிரிமினல் என்ற பின்னணியுடன் பார்க்கும் போது, அவனது காரணத்தைப் பலராலும்ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனினும், அதற்கு மேல் எதையும் அவனது வாயிலிருந்து வரவழைக்க முடியவில்லை.

ஆக, ஆஸ்வால்ட் எதற்காக கென்னடியைக் கொல்ல வேண்டும் என்பதை விசாரணைக்குழுவால் அறியமுடியவில்லை. என்றாலும், நான்குவிதக் காரணங்களை யூகிக்கமுடிந்தது.

ஆக, கென்னடியின் கொலை பற்றி எந்த அடிப்படை உண்மையும் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

(வழக்குகள் தொடரும்)

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 10

எந்தவொரு முதலாளியும் தனக்குக் கீழ் பணிபுரிவதற்காக ஒருவரைத் தேர்ந்தெடுக்கும்போது, அந்த நபருடைய திறமைகள், ஆற்றல்கள் ஆகியவற்றை அலசி ஆராய்வார். பின்னர் அந்த நபருடைய ஒழுக்கம், பழக்கவழக்கங்கள் போன்றவற்றையும் ஆராய்ந்தறிவார். குறிப்பிட்ட நபருக்கு தான் வழங்கப் போகும் பணியைத் திறமையுடன் நிறைவேற்றக்கூடியவரா, மற்றும் தனக்குக் கீழ்படிந்து நடக்கக் கூடியவரா என்பன போன்ற சகல துறைகளையும் தெளிவாக அறிந்த பின்னர்தான்-தனக்குத் திருப்தி ஏற்பட்டால் மட்டும் அவரைப் பணியில் சேர்த்துக் கொள்வார்.

தமிழ்நாட்டின் தென் பிராந்தியங்களான மதுரை, இராமநாதபுரம், காரைக்குடி போன்ற இடங்களில் தங்கள் பூர்வீக வாசஸ்தலங்களாகக் கொண்ட நாட்டுக்கோட்டை நகரத்தார் என்ற செட்டியார்கள், தங்கள் பணிக்காகச் சேர்த்துக்

## கிழக்கு நோக்கிய பயணம்

கொள்ளும் ஒவ்வொருவரையும் புடம் போட்டே சேர்த்துக் கொள்வார்கள். அதே பண்பை ஒட்டியே, தனது தென் கிழக்காசியச் சுற்றுப் பயணத்துக்குத் தனக்கு உறுதுணையாக என்னைச் சேர்த்துக் கொள்வதற்கு முன்னர், என்னை அறியாமலே எனக்குப் பல பரிசோதனைகளை செட்டியார் அவர்கள் வைத்திருந்தார்கள்.

இதனைத் தொடர்ந்தே என்னை கடவுச் சீட்டுக்குரிய விண்ணப்பத்தை குடிவரவு குடி அகல்வுத் திணைக்களத்தில் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார் திரு.வாஸ் அவர்கள். விண்ணப்பப்படிவத்தை ஒப்படைத்த பின்னர் நேரடியாக பாராளுமன்றம் சென்றேன். கல்குடா பிரதிநிதியாகவிருந்த உதவி அமைச்சர் திரு.வி.நல்லையா அவர்களைக் கண்டேன். வீரகேசரி சுப்பிரமணியம் செட்டியார் அவர்களின் அந்தரங்கச் செயலாளராக தெ.கி.ஆசிய நாடுகளுக்குச் செல்வதற்கு வாய்ப்புக் கிடைத்திருப்பதைக் கூறி, கடவுச் சீட்டினை துரிதமாகப் பெறுவதற்கு உதவுமாறும் அவரிடம் கேட்டேன்.

என்னை ஓர் அறைக்கு அழைத்துச் சென்று, அமர்த்திவிட்டு தொலைபேசியில் தொடர்பு கொண்டார். எனது பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டதையும் அவதானித்தேன். தன்னுடன் சிற்றுண்டிச் சாலைக்கு அழைத்துச் சென்றார்.

நான் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் என்பதும் தேர்தல் காலங்களில் அவருக்கு மாறான பிரசாரங்களில் ஈடுபட்டவன் என்பதும் அவருக்குத் தெரியாததல்ல.

### நல்லையாவின் யோசனை

"தம்பி, தமிழர்களிடத்தில் ஒற்றுமை ஏற்படாதபட்சத்தில் நம்மை நாயிலும் கேவலமாகத்தான் நடத்துவார்கள். உங்கள் செல்வநாயகத்திடம் சொல்லும், எல்லாத்தலைவர்களையும் ஒன்றாகச் சேர்க்கும்படி!" என்று கூறினார். தொடர்ந்து, "என்னைப் பற்றியும் நீ சந்தேகிக்கிறாய் என்பது தெரியும். நான் குட்டையில் ஊறிப்போன மட்டை. இந்தச் சேற்றிலிருந்து என்னால் வெளியே வர முடியாது. இனி இறுதிவரை இந்தச் சட்டையைத்தான் நான் போட வேண்டி வரும். ஆகவே, தமிழ் தமிழ் என்று வாய் கிழியக் கத்திக்கொண்டு திரியும் எல்லாரையும் ஒன்றிணைக்க செல்வநாயகம் முயற்சிக்க வேண்டும். அவர் நினைத்தால் இதனைச் செய்ய அவரால் முடியும்!" என்றார்.

இதன் பின்னர், "இமிகிரேஷனில் கணேசராஜா என்றொரு அதிகாரி இருக்கிறார். அவரிடம் போய் நான் அனுப்பியதாகச் சொல்லும்!" என்ற கூறி வழி அனுப்பிவைத்தார்.

இன்றுபோல் அன்று அரச அலுவலகங்களில் கெடுபிடிகள் எதுவும் கிடையாது. அங்கு சென்று திரு.கணேசராஜா அவர்க்ளைக் கண்டேன். என்னை அவரருகே அமரச் செய்து விட்டு உள்ளே சென்றார். பத்தாவது நிமிடத்தில் எனக்குரிய கடவுச் சீட்டு என் கை சேர்ந்தது.

நேராக வீரகேசரி சென்று திரு.வாஸ் அவர்களிடம் கடவுச் சீட்டைக் கொடுத்தேன். அவரால் நம்பமுடியவில்லை. "இவ்வளவு சீக்கிரம் எப்படிக் கிடைத்தது?" என்று கேட்டார். திரு.நல்லையா அவர்களுடைய சிபார்சின் மூலம் தான் இது சாத்தியமானது என்றேன். வாஸ் அவர்களும் உடன் செட்டியார் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு "பத்மநாதன் பாஸ்போட் எடுத்து விட்டார்!" என்று கூறினார். செட்டியார் அவர்களும் தனது மகிழ்ச்சியை தொலைபேசியில் தெரிவித்திருந்திருப்பார் என்பதை அவருடைய முகத்தில் தோன்றிய பாவங்கள் எடுத்துக்காட்டின.

இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள ஆவினிப்பட்டி என்ற ஊர்தான், வீரகேசரியைத் தோற்றுவித்த திரு.பி.பிஆர்.சுப்பிரமணியம் செட்டியார் அவர்களுடைய சொந்த ஊர். இளைஞனாக இருக்கும் போதே கொழும்பு செட்டியார் தெருவிலுள்ள வேறொரு செட்டியாரின் வட்டிக்கடையில் பணிபுரிய வந்து சேர்ந்தார். பல இன்னல்களையும் அனுபவித்து, தானே முதலைச் சேர்த்து, பின்னர் தனியானதொரு வட்டிக்கடையை வைத்தார். ஊரிலுள்ள தனது சொத்துக்களை அடமானம் வைத்தும், கொழும்பில் தான் ஈட்டிய ஒரளவு பணத்தையும் சேர்த்து, வேறுபல செட்டியார்களிடமும் கடன் பட்டு, 1929ம் ஆண்டு வீரகேசரி தினசரிப் பத்தரிகையைத் தோற்றுவித்தார்.

### வீரகேசரி உதயம்

வீரகேசரி ஆரம்பிக்கப்பட்ட அதே 1929ம் ஆண்டில் அவருடைய புதல்வன் பிறந்தார். அவருக்கும் 'வீரகேசரி' என்றே பெயர் சூட்டினார்.

அச்சுக்கலை புதிய தொழில் நுட்ப முறைகளைக் கைக்கொண்டு அபரிமிதமாக வளர்ந்துவிட்ட இன்றைய காலகட்டத்தில் ஒரு மாத சஞ்சிகையையோ வார ஏட்டையோ வெளியிடுவதில் உள்ள சிரமங்களை நாம் நன்கு அறிவோம். ஆனால் இற்றைக்கு 70 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தமிழ் தினசரியை இந்த நாட்டில் தொடங்குவதற்கு செட்டியார் அவர்களுக்கு உண்டான பேரார்வத்தை எவரால்தான் மெச்சமுடியாதிருக்கும்!

இப்பத்திரிகையை ஸ்திரத்தன்மைக்குக் கொண்டு வருவ்தற்கு அவர் பட்டபாடுகளை விவரிக்கப் புகுந்தால் இத் தொடரின் உள் நோக்கம் வேறு திசைக்குத்திரும்பி விடும். ஆகவே வீரகேசரி கதையை வேறு பொருத்தமான கட்டத்தில் சொல்லலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வீரகேசரி தொடங்கி கால் நூற்றாண்டு நிறைவடைந்தமையினால், பத்திரிகை அச்சிடுவதை அக்காலத்துக்கேற்றபடி நவீனமயப்படுத்த செட்டியார் விரும்பினார். அப்போது பத்திரிகையின் பொது நிர்வாகியாகவிருந்த திரு.ஈஸ்வர ஐயர் அவர்களை இங்கிலாந்துக்கு அனுப்பிவைத்தார். புத்தம் புதிய ரொட்டரி இயந்திரத்தை கொள் முதல் செய்ய ஏற்பாடு செய்தார். அந்தச் சாதனமும் கப்பலில் வந்து கொண்டிருந்தது. இதற்கிடையில் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கான பயணத்திட்டம் தயாரானது.

### வண தனிநாயக அடிகளார்

முதலில் தனிநாயகம் அடிகளாரை மருதானை தங்குமிடத்துக்கு வரவழைத்தார். அவரும் பெருந்தன்மையுடன் வந்திருந்து, எங்கெங்கே என்னென்ன இடங்களுக்குச் செல்லவேண்டும் என்ற பட்டியலையும் ஏனைய விபரங்களையும் கூறினார்.

கம்போடியாவில் அங்கோர்வாட்டும் இந்தொநேஷியா-ஜகார்த்தாவில் புறொம்பனானும் அவசியம் பார்க்க வேண்டியவை என்று அடிகளார் கூறினார்கள். அங்கோர்வாட்டும் புறொம்பனானும் மிகப்பழங்காலத்து சைவக் கோவில்கள் என்றும் அவை சிதைவடைந்து வருவதாகவும் கூறினார். மிகப்புராதன காலத்தில் இந்துக்கள் எப்படி வாழ்ந்தார் களோ அதே பாணியில் இன்றும் வாழ்க்கை நடத்தும் இந்தொனேஷியாவின் கிழக்குக் கோடியிலுள்ள பாலித் தீவும் கட்டாயம் பார்க்கப்படவேண்டிய இடங்கள் என்றும் சொன்னார்.

### பயணம் புறப்பட்டோம்

1955ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 15ம் திகதியன்று இரவு 10.00 மணியளவில் எம்.வி.ஆசியா என்ற பெயருடைய உல்லாசப் பயணக் கப்பலில் செட்டியார் அவர்களும் நானும் ஏறினோம். முழுமையாக குளிரூட்டப்பட்ட இக்கப்பல் அன்று நள்ளிரவு சிங்கப்பூரை நோக்கிப்புறப்பட்டது.

இரண்டரை நாட்கள் பயணம் செய்த இக்கப்பல் 17ம் திகதி பகல் 11.00 மணியளவில் சிங்கப்பூர் துறைமுகத்தைச் சென்றடைந்தது. சிங்கப்பூரில் வசிக்கும் பல பிரமுகர்களும் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினரும் திரண்டு வந்து நின்று எங்களை வரவேற்று உபசரித்தனர்.

சிங்கப்பூரில் 3 மாதங்கள் தங்கியிருந்து மலேசியா (அன்று மலாயா)வில் உள்ள சகல மாநிலங்களுக்கும் பயணம் மேற்கொண்டோம். எல்லா நகரங்களிலும் செட்டிமார் சமூகத்தினர் வாழ்ந்து வருவதனால், ஒவ்வொரு நகரிலும் வரவேற்பு உபசாரங்களும் விருந்து வைபவங்களும் நடைபெற்றன.

சிங்கப்பூரிலிருந்து வியட்நாம் தலைநகரான சைகோன் நகருக்கு விமானத்தில்



சென்றோம். சைகோனில் செட்டியார் அவர்களின் உறவினர் ஒருவர் எங்கள் பயணத்துக்கான தனது 'பிளைமொத்' காரைத்தந்தார். கம்போடியா, லாவோஸ் போன்ற நாடுகளுக்கும் மோட்டார் காரிலேயே பயணம் செய்தோம்.

அடுத்ததாக பிலிப்பைன்ஸ் நாடுகளின் தலைநகரான மாநிலா சென்றோம். ஒரு வாரம் பிலிப்பைன்ஸில் பல் இடங்களைப் பார்த்தபின் ஜப்பான் புறப்பட்டோம். ஜப்பானுக்கு நாங்கள் போய் இறங்கியபோது சரியான பனிக்காலம். கடும் குளிர்.

அணுகுண்டால் சீரழிந்து பின்னர் அந்நாட்டு மக்களின் விடாமுயற்சியால் சீரமைக்கப்பட்ட ஹிரோஷிமா நகரையும் சென்று பார்வையிடும் வாய்ப்புக்கிட்டியது.

டோக்கியோ நகரிலிருந்து ஹொங்கொங், பின்னர் மக்கள் சீனக்குடியரசின் கான்ரன் நகர்வரை சென்றோம். எங்களால் தாங்கமுடியாத கடுங்குளிர் காரணமாக மேற்கொண்டு வடக்கே செல்லமுடியாமற் போய்விட்டது. ஹொங்கொங் திரும்பி அங்கிருந்து தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக் சென்றடைந்தோம். இன்று மிக உன்னதமான உல்லாசப்பயணத் தலங்களில் ஒன்றாக விளங்கும் புக்கெற் தீவுக்கும் விமானத்தில் சொன்றோம். அங்கும்

**இரா.பத்மநாதன்**

செட்டியார் அவர்களின் உறவினர்கள் இருந்தார்கள்.

பாங்கொக் திரும்பிய நாங்கள், அங்கிருந்து பர்மா நாட்டின் தலைநகரான ரங்கூன் சென்றோம். பர்மாவில் பல நகரங்களில் செட்டியார் சமூகத்தினர் வாழ்ந்து வந்தார்கள். நாட்டில் கிளர்ச்சியாளர்களின் வன்முறைகள் மலிந்து காணப்பட்டமையினால், 75 மைல் தூரத்திலுள்ள மாண்டலே நகருக்கும் விமானத்தில் தான் செல்ல வேண்டியதாயிற்று.

ரங்கூனிலிருந்து சிங்கப்பூர் திரும்பினோம். அங்கிருந்து இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தா சென்று, அணிசாரா நாடுகளின் அங்குரார்ப்பணம் நடைபெற்ற பாண்டுங், ஜகார்த்தா, பாலித்தீவுகள் ஆகிய இடங்களுக்கும் சென்று மீண்டும் சிங்கை திரும்பினோம்.

ஏறத்தாழ ஏழு மாதங்கள் நீடித்த எங்கள் சுற்றுப்பயணத்தின் போது பல சுவையான சம்பவங்கள் இடம் பெற்றன. எங்கள் பயண அனுபவங்களை வீரகேசரி வார ஏட்டில் தொடர்ந்து 58 வாரங்கள் எழுதிவந்தோம்.

இந்தக் கட்டுரைத் தொடரில் எங்கள் பயண அனுபவங்களைக் கூறாமல் மிகச்சுருக்கமாகக் கூறினேன். அப்பயண அனுபவங்களைக் கூறப்புகுந்தால், கட்டுரை நிச்சயம் திசை திரும்பி, இத்தொடரை எழுதத் தொடங்குவதற்குத் தூண்டிய குறிக்கோள் தடம் மாறிவிடும். ஆகவே பயணத்தைச் சுருக்கித்தந்தேன்.

### இந்தியா பயணம்

சிங்கப்பூரில் செட்டியாரை விட்டு விட்டு, 'ரஜூலா' என்ற பயணிகள் கப்பலில் நான் மட்டும் இந்தியாவின் நாகப்பட்டினம் துறைமுகத்தை வந்தடைந்தேன், செட்டியார் அவர்களின் சிங்கை முகவராக இருந்தவரும் என்னுடன் பயணமானார். கடல்வழிக்கப்பல் பயணம் ஆறு நாட்கள் பிடித்தது.

சிங்கப்பூரில் 'தமிழ்நேசன்' என்ற தமிழ்த்தினசரியை ஆரம்பித்து நடத்தியவர் திரு.கோ.சாரங்கபாணி அவர்கள். அத்தினசரியின் ஆசிரியராகவிருந்த திரு முருகு சுப்பிரமணியம் கவிஞர் கண்ணதாசன் அவர்களின் நெருங்கிய உறவினர். கவிஞருக்கான அறிமுகக் கடிதம் ஒன்றையும் தந்திருந்தார். கவிஞரை நான் சென்னையில் போய்ப் பார்க்கும்போது, அவர் வெளியூர் செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தார்.

### புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

அப்போது கலைஞர் கருணாநிதி அவர்களின் 'முரசொலி' அச்சகத்தின் நிர்வாகியாகவிருந்தவரும் முருகுசுப்ரமணியம் அவர்களின் மைத்துனருமான திரு.அரு.பெரியண்ணன் அவர்களிடம் என்னை கவிஞர் ஒப்படைத்தார். பெரியண்ணன் அவர்கள் அன்றைய தினமே என்னை சென்னை எழும்பூர் விக்டோரியா ஹொட்டலில் தங்கியிருந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களிடம் அழத்துச் சென்றார். பல மணிநேரமாக புரட்சிக் கவிஞருடன் உரையாடி விட்டுத் திரும்பினேன். அடுத்த நாட்காலை கவிஞர் அவர்களுடன் பரணி ஸ்ரூடியோ சென்றேன். நடிகை பானுமதிக்குச் சொந்தமான அந்தப் படப்பிடிப்பகத்தை, கவிஞர் கண்ணதாசன் அவர்களின் சகோதர் ஏ.எல்.சீனிவாசன் அவர்கள் குத்தகைக்கு எடுத்திருந்தார்.

அப்போது எ.எல்.எஸ். தயாரிப்பில் உருவாகிக்கொண்டிருந்த 'அம்பிகாபதி' திரைப்படத்தின் கதை, வசனம் பாடல்களை அமைப்பதற்காகவே புரட்சிக் கவிஞர் அப்போது சென்னையில் தங்கியிருந்தார்.

பரணியில் சீனிவாசன் அவர்களுக்கும் புரட்சிக்கவிஞர் அவர்களுக்குமிடையில் பலத்த வாக்குவாதம் நடந்தது. இந்த வேளையில் புரட்சிக் கவிஞரை மிக அவசரமாகப் பார்க்க வேண்டும் என்று ஒருவர் அங்கு வந்து சேர்ந்தார். கவிஞரை ஒரு புறமாக அழைத்துச் சென்று ஏதோ கூறினார். எதற்கும் கலங்காத புரட்சிக்கவிஞரின் முகம் வாட்டமுற்றது கண்களும் கலங்கின.

(இன்னும் வரும்)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 64**

# அரங்கம் அந்தரங்கம்

காலையில் நான் கண் விழித்த போது ஒரு மந்திர தந்திரக் கனவு கண்டது போலவே எனக்குத் தோன்றிற்று.

ரிட்ஸ் ஹோட்டலுக்குக் கிளம்பினேன்.

என்னை உசேன் வீட்டுக்குக் கூட்டிச் சென்ற நண்பர்களெல்லாம் எந்த நேரத்தில் எந்தக் கோலத்தில் சென்றார்களோ தெரியவில்லை.

என்னோடு தானும் வருவதாகக் கற்பகம் கூறினாள்.

அவளுக்கு ஒரு சந்தேகம், எங்கே யாரிடமும் இதை நான் கூறிவிடுவேனோ என்று.

"நீ எதற்கு? எனக்குக் குளிப்பாட்டி விடப் போகிறாயா?" என்றேன்.

"ஓ! எஸ்!" என்றாள்.

அவளுக்கு, இப்போது எல்லாம் துறந்த நிலை.

"சரி, வா!" என்றேன்.

அப்போது அவள் ஒரு சிறு சூட்கேசைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

உசேனுக்கு எத்தனை கார்கள் உண்டோ எனக்குத் தெரியாது.

நாங்கள் ஏறிக்கொண்டது ஒரு இம்பாலா.

அம்பாள் கதவு திறந்துவிட, அடியேன் உள்ளே ஏறிக் கொண்டேன்.

ரிட்ஸ்க்குப் போனதும் அவள் தான் சொன்னபடி செய்ய ஆரம்பித்தாள். பாத்ரூமுக்குள்ளேயே வந்து விட்டாள்.

"இந்தா இன்னொருவர் குளிப்பாட்டி நான் குளித்தால் எனக்கு குளிக்கவே தோன்றாது. கொஞ்சம் வெளியே இரு!" என்றேன்.

நான் குளித்துவிட்டு வெளியே வந்த போது கற்பகம் கட்டிலில் படுத்து நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

இரவு நேரத்து ராணிகள், பகலில் தானே தூங்குவார்கள்!

என் காலடி ஓசைக் கேட்டு அவள் விழித்துக் கொண்டாள்.

"என்ன, ராத்திரிச் சேவைகள் அதிகமோ...! என்றேன்.

"உடம்பெல்லாம் ஒரே அசதி!" என்றாள்.

"ஏன் சந்திரசூரியனுக்குத்தான் சந்திர புஷ்கரணி போயிருந்தாளே...!" என்றேன்.

"அசதி என்றால் அதேதானா? வேறு வேலைகள் அதிகம்!" என்றாள்.

"சரி, இங்கேயே தூங்கு!" என்றேன்.

ரிட்ஸ் ஹோட்டலில் இரண்டு இட்லி, இரண்டரை ரூபாய்.

ஆறு இட்டிலிகளைச் சாப்பிட்டுவிட்டு அவள் விழுந்து படுத்துத் தூங்க ஆரம்பித்தாள்.

எனக்கும் தூக்கம் வருகிறது மாதிரி இருந்தது.

கண்கள் செருகப் போகும் நேரம், கதவைத் திறந்து கொண்டு சந்திரபுஷ்கரணி உள்ளே நுழைந்தாள். அவள் கன்னமெல்லாம் ஒரே காயம். அழுது கொண்டிருந்தாள்.

"என்னம்மா...?" என்று கேட்டேன் நான்.

"போதும் நான் வாழ்ந்த வாழ்க்கை..." என்று புலம்பினாள்.

சத்தம் கேட்டுக் கற்பகம் விழித்தாள்.

"இதைவிட என்னைக் கொலை செய்திருக்கலாம் அக்கா!" என்றாள் சந்திரபுஷ்கரணி.

இரவில் என்ன நடந்திருக்கும் என்பதை என்னால் யூகிக்க முடிந்தது. காம விளையாட்டின் நெடிய தோற்றம் என் கண்முன்னால் வந்து நின்றது.

தனியாக அவளை அழைத்துக் கொண்டு போய் உடம்பைப் பார்த்தாள் கற்பகம்.

"சீ! இவனும் ஒரு மனுஷனா...?" என்ற வார்த்தை தான் என் காதுக்குக் கேட்டது.

கற்பகம், சந்திரசூரியனுக்கு டெலிபோன் செய்தாள்.

எதிர்த் திசையில் இருந்து வந்த பதில், "உன்னைத் தெரியுமடி எனக்கு!" என்பது தான்.

அதற்குமேல் கற்பகம் என்ன பேச முடியும்?

அன்று மதியமே சந்திரசூரியன் சென்னைக்குத் திரும்புவதாகத் தகவல் கிடைத்தது.

> **இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**
>
> **அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**
>
> **இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம்-ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**
>
> **நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**
>
> **இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப்பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**
>
> ~கண்ணதாசன்~

மறுநாளைக்கு மறுநாள், கற்பகம், நாராயணசாமி, குமாரசாமி, லலிதா ஆகியோரும் கிளம்பினோம்.

அதுவரையில் தன் கையில் வைத்திருந்த சூட்கேசை என்னிடம் கொடுத்தாள் கற்பகம்.

அதில் இரண்டு லட்சம் ரூபாய்கள் இருந்தன.

சந்திரபுஷ்கரணியை விமானப் பணிப்பெண் வேலைக்கு முழுக்குப் போடவைத்து, அவளையும் அழைத்துக கொண்டாள் கற்பகம்.

விமான நிலையத்திலிருந்து கமலையும், யசோதாவையும் சந்தித்தோம். அவர்கள் மிகவும் ஆணவத்தோடு என் அருகில் வந்து. "மன்னிக்க வேண்டும் கவிஞர். முந்தாநாள் சந்திரசூரியனைப் பார்த்தேன். மீண்டும் என்னை வேலைக்கு நியமித்து விட்டார். சென்னையில் சந்திப்போம்" என்றார்.



எனக்கு என்னென்னவோ சிந்தனைகள் ஓடின.

சுட்டிக் காட்டுகிற கைகளெல்லாம் சுத்தமான கைகளல்ல. காட்டப்படுகிற நபர்கள் எல்லாரும் கயவருமல்ல. இருக்கும் இடம் பெரிய இடமாக அமைந்து விட்டால் திருடன், நீதிபதி. தப்பான சூழ்நிலையில் மாட்டிக்கொண்டால், தர்மாவானும் திருடனே!

அற்புதமான ஆற்றுத் தண்ணீர் பயனில்லாமல் கடலிலே கலந்து விடுகிறது.

அசிங்கம் நிறைந்த சேற்றுத் தண்ணீர் குடிநீராகி விடுகிறது.

**கவியரசு கண்ணதாசன்**

காலம், இடம், வசதி வாய்ப்புகளைப் பொறுத்துக் காய்கள் மாறி விழுந்து வடுகின்றன.

தேடப்படமால் கிடந்தால் தங்கத்துக்கு விலை எது?

(அந்தரங்கம் வரும்)

# அன்புள்ள காதலனே....

**திருமலை வீ.என்.சந்திரகாந்தி**

'நான் பத்திரிகை நிருபர் இல்லையப்பா. நான் ஒரு சிறுகதை ஆசிரியர்.'

விடியற்காலையிலேயே வந்து 'மூட்'ஐ குழப் பிவிட்டு போய் விடுவான்கள். அதற்குப் பிறகு எதை எழுத வெளிக்கிட்டாலும் அது உருப்பட்ட மாதிரியாய் வராது.

தலைவாயிற் கொட்டில் கொஞ்சம் பதிந்து தான் போய்விட்டது. ஆனால் ஓலையால் வேய்ந்திருப்பதால் குளிர்மைக்கு குறைவில்லை. புத்தகங்கள் அடுக்கி வைத்திருக்கிற இந்த றாக்கையை தூக்கி எறிய வேணும். ஒரு புத்தகத்தை கிண்டி கிளறி எடுக்கிற



துக்கு முன்னர் ஒற்றைக் காலில் நிற்கிறமாதிரி தடுமாறிக் கொண்டு ஆடுது. போர்த்துக்கேயன் இந்த நாட்டுக்கு வந்த போது கொணர்ந்த றாக்கையை இடப் பஞ்சம் காரணமாக என்னுடைய வீட்டில் போட்டு விட்டு போயிருப்பான் போலை!

"ஓம், ஓம் வருங்கோ..." யாரோ வாசல் படலையில் நின்று கூப்பிடுதுகள்..... பெண் குரலாய்க் கிடக்கு.... போய் பார்ப்பம்.

"ரீச்சரா?... ஏன் வாசலில் நின்று தடுமாறுகிறீர்கள். இஞ்சை நாய் கிய் என்று எதுவுமே இல்லை. நேரே வரவேண்டியது தானே?"

நானே பார்சல் சாப்பாட்டிலை உயிரைப் பிடிக்கிறன். இந்த வள்ளலுக்குள் நாய் என்னை அண்டிநிற்குமா? என்று மனதிற்குள் நினைத்து சிரித்த பின்னர் அங்கேயே தகனம் செய்து விட்டேன்.

"ஐயா வணக்கம்......" என்ற முகவுரையுடன் ஆரம்பித்தாள்.

"வணக்கம், வணக்கம். என்ன விசயம் சொல்லுங்கோ...."

"ஐயாவிடம் நான் பெரிய உதவியொன்றை எதிர்பார்த்துத்தான் வந்தனான். சுருக்கமாகச் சொல்லுறன். ஐயாவினுடைய கதைகள் என்றால் என்னுடைய ஒரே மகளுக்கு உயிர். ஐயாவினுடைய கதைகளிலை குறிப்பிடப்படுகிற புத்திமதிகளை அவள் அச்சொட்டாகப் பின்பற்றுவாள்.... இப்போ எனது மகளுக்கும் எனக்குமிடையில் ஒரு தகராறு.... இதை நீங்கள் மனம் வைத்தால் இலகுவாக தீர்த்து விடலாம்."

என்னுடைய கதைகளை பத்திரிகைகளில் கண்டபடி கிழிச்சு எழுதுறாங்கள். விமர்சனம் என்று நானும் பொறுத்துக் கொள்ளுறன். நடைமுறையிலை எனது கதைகளுக்கு எப்படி மதிப்பு இருக்குது என்பது இவர்களுக்கு எங்கே புரியப் போகுது!

"விளங்குது விளங்குது.... உங்களுடைய மகளுக்கு புத்தி சொல்லி நான் கதை எழுத வேணும்... அது பத்திரிகையிலை பிரசுரமாக வேணும்... சரிதானே!"

"ஓம் ஐயா ஆனா கதைக்கான கருவை நானே சொல்லுறன். நீங்கள் அதற்கு வடிவம் கொடுக்க வேணும்.... ஒரு பாசமிக்க தாய்... ஒரே ஒரு மகள். மகள் தாயின் விருப்பத்திற்கெதிராக காதலிக்கிறாள்.

தாய் பலவிதமாக புத்தி கூறுகின்றாள்... பல தந்திரோபாய நடவடிக்கைகளையும் எடுக்கிறாள். எதற்குமே மகள் மசியவில்லை. இந்த நிலையில் தாய் தன்னைப் பணயம் வைக்கிறாள்....

'என்னுடைய சொற்படி நீ நடக்காவிட்டால் ... உனது காதலைத் துறக்காவிட்டால் நான் தற்கொலை செய்துவிடுவேன்' என்று எச்சரிக்கை செய்கின்றாள்.

இந்த நிலையில் மகள் எடுக்கப் போகும் முடிவு என்ன என்று கேட்டு கதையை 'சஸ்பென்சிலை' முடித்து விடுங்கோ ஐயா"

பெரிய பெரிய எழுத்தாளரே சிறுகதை எழுதுவது எப்படி என்று மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்க இயலாது என்று கையை பிசைந்து நிற்கிறபோது... இந்த 'ஐந்தாம் கிளாஸ் ரீச்சர்' கரு என்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டு எனக்கே விபரித்தது ஆச்சரியமாகப் போய்விட அதை கதையாக மெருகூட்டி எழுதி பிரசுரத்திற்காக தபால் செய்தும் விட்டேன்.

எதிர்பார்த்தது போலவே இரண்டு கிழமைகளில் பத்திரிகையில் கதை பிரசுரமானது.

தாயிடம் மகள் மன்னிப்புக் கோரி தனது காதலை தியாகம் செய்வது போல காட்டி முடிவை பூர்த்தி செய்திருந்தது திருப்திகரமாக இருந்தது.

இந்த எனது கதையை வாசித்து விட்டு மகள் மனம் திருந்தி நடப்பதாகவும்.... தாய் எனது பாதங்களில் விழுந்து வணங்கி பெருமிதப்படுவது போலவும் மனதில் எண்ணங்கள் உதித்தன.

ஓர் எழுத்தாளனுக்கு இதைத் தவிர வேறு என்ன விருது ஐயா வேண்டிக் கிடக்குது....

அன்று மாலையிலேயே 'ரீச்சர்' என்னை தனது இல்லத்திற்கு அழைப்பதாக செய்தி வந்தது.

பெருமிதத்துடன் துவிச்சக்கர வண்டியில் புறப்பட்ட நான் 'சென்றி பொயின் ரில்' நின்ற 'பொலிஸ்'க்குத் தலையை தாழ்த்தி... 'பெற்றோல் செட்' ஐயும் கடந்து... ஏற்றம் காரணமாக பிரதான ஒழுங்கையில் வண்டியை உருட்டி... குறுக்கு ஒழுங்கைக்கு திரும்பி நிமிரவும் கறுத்த கொடிகள் கண்ணில் பட்டன.

நெஞ்சு திக்கென்றது.

'அம்மா ஏன் தற்கொலை செய்வான்? நானே உயிரை மாய்த்து விடுவம்' என்று அந்தப் பிள்ளை முடிவெடுத்து தாறுமாறாக ஏதும் செய்து போட்டுதோ...?

இப்போ பாதை ஏற்றமாக இல்லாவிட்டாலும் கூட நான் வண்டியை உருட்டியபடியே தயங்கி தயங்கி நடந்தேன்....

'ரீச்சர்' வீட்டு படலைக்கு வந்த போது தான் மரணச் சடங்கு அடுத்தடுத்த வீட்டில் என்பது உறுதியாயிற்று.

ஒரு சில கணங்களில் நானே என்னுடைய கதையை சாமான்யமாக கணித்து விட்டது கவலையைத் தந்தது.

'ரீசசரின்' அழைப்பிலும் உபசாரத்திலும் நம்பிக்கையடைந்த நான் அந்த சாய்மனைக் கதிரையில் வசதியாக அமர்ந்து கொண்டு வீட்டை ஒரு நோட்டம் விட்டேன்.

"ஐயா... நாங்கள் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் என்பது சரியாகத் தான் போய்விட்டது...."

கண் கலங்கி அழுதாள்.

'பிளவுசின்' மேல் விளிம்பில் கைவைத்து உருவி எடுத்த கடிதமொன்றை என்னிடம் நீட்டவும்... நான் பெற்றுக் கொண்டு படித்தேன்.

*'அன்புள்ள அம்மா... நான் எனது காதலை தியாகம் செய்யாது போனால் நீங்கள் தற்கொலை செய்து விடப் போவதாக எச்சரித்தது என்னை கடந்த சில நாட்களாக குழப்பி விட்டிருந்தது. ஆனால் இன்று எனது அபிமான எழுத்தாளர் தனது கதையொன்றில் ஒரு பெண் தனது தாயின் மேல் வைத்த பாசம் காரணமாக தனது காதலை துறப்பதாக எழுதியிருந்தார். அந்த ஏழைப் பெண்ணின் மனம் எவ்வளவு துயருற்றிருக்கும் என்பதை நான் எனது நிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தேன்...*

*காதலனுக்காக உயிர்த்தியாகம் செய்த காதலி பற்றியும் காதலிக்காக உயிரை அர்ப்பணம் செய்த காதலன் பற்றியும் வரலாறுகள் உண்டு. ஆனால் மகளுக்காக உயிரை மாய்த்துக் கொண்ட தாய் பற்றிய வரலாறு எதும் உண்டா?*

*என்னை மன்னிப்பீர்களா?*

*நான் எனது எதிர்கால கணவனுடனேயே புறப்பட்டு விட்டேன்.*

*என்றும் உங்கள் அன்பு மகள்.*

எனக்கு தலையே சுற்றியது. ஏதோ ஒரு உறுத்தல்.... நானும் புறப்பட்டேன்.... யதார்த்தத்தைத் தேடி....!

---

தூரத்தில் 'சலியில்' வந்துகொண்டிருக்கும் போதே அவன் தாராளமாக கண்டுகொண்டான். அவனைத்தவிர அப்போது அந்த ஒதுக்குப்புற வீதியில் யாருமில்லை. அவனுக்குள் பய உணர்வுகள். நமக்கு ஏன் வீண் வம்பு என்ற எண்ணம் மேலிட்டாலும், எப்படி உதவி புரிவதென்ற எண்ணமும் இருந்தது. பச்சை நிறமான ஆட்டோ.

ஆட்டோ வேகமாக ஓரளவு அருகில் வந்ததும் அவன் இன்னும் கண்டுகொண்டான். சாரதி உட்பட ஆட்டோவுக்குள் மூவர். பலவந்தமாக இழுத்து ஏற்றப்பட்டவர் தன்னை விடுவித்துக்கொள்வதற்காக தீவிரமாகப் போராடிக்கொண்டிருப்பதையும், கடத்துபவர்கள் சத்தம் வெளியே வராமல் முன்னெச்சரிக்கையாக நடந்துகொண்டிருப்பதையும். அவனைக் கடந்து சென்றது ஆட்டோ.

"ஐயோ இவளையா....?"

உடன் பரபரப்பாக மோட்டார் சைக்கிளைத்திருப்பி ஆட்டோவுக்குப் பின்னே அவர்கள் அறியாதவகையில் பின் தொடர்ந்தான். பின்னாடி தெரியக்கூடிய ஆட்டோவின் இடைவெளியினால் அவள் கைகாட்டி அவன் உதவியினை வேண்டிக்கொண்டிருந்தாள். அவனை விட்டு ஆட்டோவின் இடைவெளி தூரமாகிக்கொண்டிருந்தது.

மீண்டும் மீண்டும் ஆட்டோவின் இலக்கத்தை நினைவு படுத்திக்கொண்டவ

# வில்லங்கமானதொரு உறவு

**இளையவன் திருகோணமலை**

னாக பின் தொடர்ந்தவன் பிரதான வீதியில் தொலைவில், திடீரென ஆட்டோ திரும்பிய இடத்தை அடையாளப்படுத்திக்கொண்டு நிதானமானான்.

அது ஒரு காட்டுவழிப்பாதை போல தென்பட்டது. தார்வீதியெங்கும் உடைப்பெடுத்து ஆங்காங்கே வீதியின் இரு பக்கங்களிலும் சிறிய பற்றைக் காடுகள். தொடர்ந்து உடைந்த வீடுகளும், குறுக்கான சிறு கிறவல் பாதைகளும்.

ஊரின் சந்திக்கு வந்தான். எங்கும் சனநடமாட்டம் இல்லை. சுற்றுவட்டாரத்தை நோட்டமிட்டான். பய உணர்வு அதிகப்படுத்திக் கொண்டிருந்தது. எப்படியும் அவளைக் காப்பாற்றியாகவேண்டும் என்ற உணர்வு அதிகமாகிக் கொண்டிருந்தது. எப்பவோ சனங்கள் கை விட்டுப்போயிருந்த அந்த இடம் பார்வைக்கு பயங்கரமாக. பாழடைந்த வீட்டின் முன்னே மண்டிக்கிடந்த சிறிய பற்றைக்காடுகளின் மறைவுக்குள் அந்த ஆட்டோவைக்கண்டு கொண்டான். இடத்தைத் திருப்தியாக அடையாளப்படுத்திக் கொண்டு காரியத்தில் தீவிரமானான்.

அவன் சொல்லச்சொல்ல அவளின் பெற்றவர்கள் பதறிப்போய்க்கொண்டிருந்தார்கள். தன் மகளுக்கு இப்படியாகுமென்று அவர்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. சூழ்நிலையை உணர்ந்துகொள்ளக்கூடிய பக்குவம் தாயிக்கு இல்லாமையினால் சத்தமாக அழ, பதறிப்போனவர் தன் மனைவியை அடக்கிக் கொண்டார். விசயம் உடன் வெளியே தெரிந்தால் சிக்கல் நிலைமைகள் தோன்றி மகளின் வாழ்வு பாழாய்ப்போய்விடும் என்ற அவனின் வார்த்தைகள் அவர்களுக்கு வேதமாக. அப்போதைக்கு அவனே அவர்களுக்குப் பெரியவராய் உயர்ந்து, அவர்கள் வணங்கும் தெய்வம் அனுப்பிவைத்த ஆத்மாவாக.

"இப்போ நாம போலிஸுக்குப் போனால் அவர்கள் விபரமாக விசாரித்து மீட்டுத் தருவதற்குள் காலம் பிந்திவிடும்."

"உண்மைதான் தம்பி. என்ன செய்யலாம்....?"

பெற்றவர்களுக்கு அவசரமும் ஆவேசமும். அவனுக்குள்ளும் பெரியளவனான பதற்றம்தான் வெளிக்காண்பித்துக் கொள்ளவில்லை.

"நல்லாவே கவனிச்சேன். மூணுபேர்தான். ஆட்டோக்காரர் தொடர்பிருக்காது. நாம ரெண்டுபேராகப் போனால் அவர்கள் இருவரையும் விரட்டி...."

சொல்லிமுடிப்பதற்குள்ளாகவே அவளின் உறவுக்காரர்கள் நால்வர் தயாராகிக்கொள்ள ஐவரும் ஓர் ஆட்டோவுக்குள் நசுக்குண்டு அந்த இடத்தைநோக்கி விரைந்தனர். மிகுந்த சிரமத்துடன் அவளின் கைகால்கள் பெரிய கற்களுடன் இணைத்துக் கட்டி முடித்த திருப்தியில் அவர்கள் எழும்பவும், இவர்கள் புயலாகப் பாய்வதற்கும் நேரம் சரியாகவேயிருந்தது. எதிர்பாராத தாக்கத்தினால் செய்வதறியாது தடுமாறிப் போனவர்கள் ஒருவாறு சமாளித்துக் கொண்டு முன்னே வந்தவரை வேகமாகத் தள்ளிவிட மற்றையவர்களின் வேகமும் சட்டென தடைப்பட அந்த நேர இடைவெளிக்குள் இருவரும் பாய்ந்து காட்டு வழிப்பக்கமாக வேகமாக ஓடி மறைந்தனர். முதலில் கைக்கட்டினை அவிழ்த்துவிட்டதும் அவள் அவனைக் கையெடுத்துக் கும்பிட்டாள்.

இப்போ, அடிக்கடி அவள் வீட்டுக்கு அவன் சென்று வருவது வழக்கமாகிவிட்டது. ஒரு நேரத்தில் வீதியில் கதைத்துக்கொள்வதற்காக அவன் அருகே சென்றாலும், அவள்



அதைப்பொருட்படுத்துவதேயில்லை. அருவறுப்பானதொரு பொருளைப்பார்ப்பதைப் போன்றே அவனை நோக்கி அவன் உள்ளத்தை உடைத்துக் கொண்டிருந்தாள். பிறர் கண்பட்டுவிடக்கூடியளவு அவர்களின் நெருக்கம் இப்போது.

"உங்களிடம் கதைப்பதற்கு எவ்வளவு முயற்சித்திருப்பேன்." மெல்லியதாக சிரித்துக் கொள்வாள். அதில் அதிகளவாக வெட்கம் கலந்திருப்பதை அவன் தாராளமாகவே கண்டுகொண்டான். அந்த விபத்து அவர்களைப் பிணைத்துவிட்டது. அவளுக்கு அவமானச் சின்னமானது அவனுக்கு நினைவுச்சின்னமாக. அலைபாய்ந்து விட்டது.

அவர்கள் காதலிக்கிறார்கள் என்பதை நன்கு தெரிந்துகொண்டாலும் பெற்றவர்கள் எதிர்க்கவில்லை. பக்குவமாக நடந்து அவன் பலரின் உள்ளத்தில் இடம்பிடித்துக் கொண்டான். சற்று துணிச்சலாக அவர்கள் வீதியிலும் உலா வந்தனர்.

'இவனுக்கு எப்படி.....?'

அவளை, அவனை அறிந்திராதவர்கள் வியப்பின் எல்லைக்கே சென்றுகொண்டிருந்தனர். அந்த நட்பு நிச்சயதார்த்தத்தில் வெற்றிக்கொடி நாட்டியது.

ஒரு நாள்-

அவனுக்காக அவள் காத்திருந்த வேளை, அவன் தூரே வந்துகொண்டிருந்த போது ஒருவன் குறுக்கிட்டு, எதையோ சுவாரசியமாகப் பேச இவன் கேட்டுக்கொண்டிருந்தான். அந்தப்பேச்சு, அவன் சிரிப்பு எல்லாமே அவளுக்கு எரிச்சலை அதிகப்படுத்தியது. வந்த ஆவேசத்தில் அவர்களை நோக்கி வேகமாக வருவதைக்கண்டதும் வந்தவன் மெல்ல நழுவிக்கொண்டான்.

"இப்போ கதைச்சுக் கொண்டிருந்தது....?" விழியால் சுட்டாள்.

"என்ட ப்றெண்ட்.!" சாதாரணமாகவே அவன். அவளுக்குள் பளிச்சென்று ஒரு மாற்றம். ஜீரணித்துக்கொள்ள முடியாத புது தடுமாற்றம். 'அது அவனேதான்' முடிவில் உறுதியானாள்.

"என்னைக் கடத்திக் கட்டிப் போட்டவன்....." அவள் எதிர்பார்த்த அதிர்ச்சிக்குப் பதிலாக அவனிடமிருந்து வந்த மெல்லிய புன்னகை எரிச்சலாக.

"அது என்ட பழைய கூட்டாளி. மூன்று வருசத்திற்குப் பிறகு போன கிழமைதான் சவூதியில் இருந்து வந்திருக்கின்றார்."

"உண்மையாகவா....? இவர் அவனைப் போலவேதான்....!" அவசரப்பட்டுக் கொண்டமையினால் வெட்கப்பட்டுக்கொண்டாள்.

அவன் இறுக்கமானதொரு முடிவுக்கு வந்தான்.

தன்னைக் கடத்தியவர்களின் முகங்களை இன்னும் அவள் மறக்கவில்லை. திருமணம் முடிவதற்குள் அவர்கள் இவள் கண்ணில் படாமல் பார்த்துக்கொள்ளல் வேண்டும்.

அதற்கான திட்டங்களில் தீவிரமாகிக் கொண்டான்.

---

ஜேர்மன் நாட்டின் பிரதான நகரில் உயர்ந்து நின்ற கட்டடத்தில் மருத்துவமனை குடியிருந்தது. அதன் வரவேற்பறையில் மருத்துவரைச் சந்திப்பதற்காக சரண் காத்திருந்தான்.

அவன் மனதை அம்மாவிடமிருந்து இன்று வந்த கடிதம் குடைந்து கொண்டிருந்தது. இதுவரை அம்மாவிடமிருந்து வந்த கடிதமெதுவும் கொடுத்திராத தாக்கமொன்றை இன்றைய கடிதம் கொடுத்திருந்தது.

சரண் ஜேர்மன் வந்து எட்டு வருடங்கள் சுழன்று விட்டிருந்தன. இத்தனை நாள் நகர்வில் இருள் படிந்து போன அவனது சிந்தனைக்கு அம்மாவின் கடிதம் ஒளியை உண்டாக்கி, அவனைச் சிந்திக்கத்தூண்டியது.

ஜேர்மன் மண்ணில் 'அகதி' முத்திரை குத்தப்பட்டு உழைப்புக்காக வாழ்பவர்களில் சரணும் ஒருவன்.

அந்நிய மண்ணில் நம்மவர் படும் இன்னல்களைப் பற்றிய சிந்தனையில்லாமல், அவர்களைப் பணம் அச்சிடும் இயந்திரங்களாகக் கருதி, மாறி மாறி உறவினர்கள் பணம் அனுப்பக்கேட்பது வழமையான ஒரு நிகழ்வாகிவிட்டது. அவர்களும் கடும் உழைப்பின் மூலம் சேகரிப்பவற்றை இலங்கைக்கு அனுப்ப, இங்குள்ளவர்கள் ஆடம்பரச் செலவுகளில் வீணே கரைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒரு வகையினரும் வாழ்ந்து கொண்டிருக்க-இன்னொரு பகுதியினர் வேறொரு வட்டத்திற்குள் வாழ்கின்றனர்.

குடும்ப எதிர்காலம் சிறக்க பிள்ளைகள் உழைத்துப்பணம் அனுப்புவார்கள் என்ற நினைப்பில் சொத்துக்களை விற்றும் கடனைப் பெற்றும் பிள்ளைகளை அந்நிய மண்ணுக்கு அனுப்பிவிட்டுக் காத்திருக்க பிள்ளைகள் அதை மறந்து, கடும் உழைப்பின்மூலம் சேகரிப்பவற்றை ஊதாரித்தனமான செலவுகளில் கரைத்துக் கொண்டிருக்க, பெற்றோர் பட்டகடனை அடைக்க வழி புரியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

சரண் தன்னுடைய நடவடிக்கைகளால் தனது குடும்பத்தை இந்த வட்டத்திற்குள்ளேயே நிறுத்தியிருந்தான்.

அவன்வேலை புரியும் நிறுவனத்தில் அவன் மட்டுமே இலங்கையைச் சேர்ந்தவன். ஏனையோர் அந்நாட்டவரே! அதிலும் பெரும்பாலானவர்கள் பெண்களாகவே இருந்ததுடன் அவர்களுடனேயே அவனது நட்பும் பிணைந்திருந்தது.

வேலை செய்யும் நேரங்களில் மட்டுமல்லாது விடுமுறைகாலங்களிலும் அவர்களுடனேயே சுற்றுலா, களியாட்ட நிகழ்ச்சிகள், இரவு நேர கேளிக்கைகள் என கலந்து கொள்ள, அவனது உழைப்பின் பெரும்பகுதியும் கரையத் தொடங்கையில் சேமிப்புக்குச் சாத்தியமற்றுப் போனது.

வீட்டிற்கு காசு அனுப்புவதற்கு வழிபுரியாமல் வீட்டுக்காரருடன் தொடர்புகளை குறைத்துக் கொண்டு, கையில் தேறும் சிறு

# எதிர்காலம்



தொகைகளை வருடத்திற்கு ஒன்றோ, இரண்டு தடவைகள் அனுப்புவதுடன் இருந்துவிடுவான்.

கடன் பெற்று பெற்றோர் அங்கு அனுப்பியது அவனுக்கு நினைவில் இல்லாமல்போய் விடவில்லை. அவனது ஊதாரித்தனமான செலவுகளுக்கே அவனது சம்பாத்தியம் போதுமானதாக இருந்து விடுகின்றது.

கடன் வட்டிகளைத் தீர்ப்பதற்கே இவன் அனுப்புகின்ற சிறுதொகைகள் போதுமானதாக அமைந்துவிடுவதனால் கடனின் ஒரு பகுதி நிலுவையாகவே இருந்துவந்தது.

கடன் நீண்டகாலமாக அடைக்கப்படாதிருக்க, கடன் கொடுத்தவர்கள் வீட்டிற்கு நெருக்குதல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அம்மா கடிதத்திற்கு மேல் கடிதம் எழுதினாலும் அவனால் அவன் பழக்கங்களிலிருந்து மீள முடியவில்லை.

சரண் குடும்பத்தின் முதல் வாரிசு. இவனுக்குக் கீழ் கல்யாண வயதை நெருங்கி விட்ட சகோதரிகளும் இருந்தார்கள்.

உயர்தரம் கற்றுக் கொண்டிருந்தவனை பெண்பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக அமையவேண்டும் என்பதற்காக சரணை ஜேர்மன் அனுப்பிவைத்தார்கள். ஆனால் இன்று அவர்களது எதிர்காலம் கேள்விக் குறியை முன்னிறுத்தி நின்றது.

இலங்கையில் இருந்த சரணிடம் சேர்ந்திருந்த பண்புகள் இன்று அவனை விட்டு விலகியே இருந்தன. இங்கு பெற்றோர்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டு, ஊருக்கு நல்ல பிள்ளையாக வாழ்ந்தான். ஆனால் இன்று அவன் அவனாக இல்லை.

அவனும் தன்நிலை புரிந்து நட்பெனும் பெயரிலுள்ள தகாத தொடர்புகளைக் கத்தரித்துவிட்டு உழைத்து வருபவற்றை வீட்டுக்கு அனுப்ப நினைப்பான். ஆனால் ருசி கண்ட பூனையாக அவன் மாறியதால் மாறவும், மாற்றவும் முடியாமல் இருந்து வந்தான்.

ஆனால், இன்றுமுதல் மாற்றிவிட வேண்டும் என்ற உறுதியான முடிவுக்கு வந்துவிட்டிருந்தான். அம்மா எழுதிய கடிதங்களில் இந்தக் கடிதமே அவன் மனமாற்றத்திற்கு அடிகோலியது.

*'அன்பு மகன் சரண்!*

*இது நான் உனக்கு எழுதும் கடைசிக் கடிதமா? இல்லையா? என்பது நீயே தீர்மானிக்க வேண்டும். உன்னை ஜேர்மன் அனுப்பிய எங்களது எதிர்பார்ப்பு என்ன என்பதனைத் திரும்பவும் திரும்பவும் உனக்கு ஞாபகமூட்ட வேண்டிய தேவையில்லை.*

*எங்கள் வாழ்வுக்குப் பணம் அனுப்ப வேண்டும் என எதிர்பார்த்து ஏமாந்தது போதும். உன்னை வெளிநாடு அனுப்பப் பெற்றகடன் அடைக்கப்படாமல் உள்ளது. அதை அடைக்கமட்டுமாவது காசை அனுப்பு. அந்தக் கடன்களையும் வட்டியையும் அடைப்பதற்கு உழைக்கக் கூடிய வலு உன் அப்பாவின் உடலிலும் இல்லை, மனதிலும் இல்லை.*

*கடன்காரர்கள் முன் தலைகுனிந்து அவமானப்பட்டு வாழ்வதைவிட சாவதே மேல்! மானங்கெட்டு வாழ்கின்ற வாழ்வு எமக்குத் தேவையில்லை.*

*உடன்பதில் அனுப்பு தாமதிக்கும் காலம் நீ எங்களை இழப்பதற்கே வழிகோலும்!*

*-உன் அம்மா."*

அம்மாவின் கடிதம் அவனைச் சிந்திக்க மட்டுமல்ல, செயற்படவும் வைத்துவிட்டது. மருத்துவமனைக்கு வரும்போதே கடிதமும் கையிலிருந்த காசையும் அம்மாவுக்கு அனுப்பிவிட்டுத்தான் அமைதியடைந்த மனத்துடன் வந்திருந்தான்.

சரண் எடுத்த முடிவில் மாற்றம் ஏற்படுத்த பழைய பழக்கவழக்கங்களால் இனி இயலப்போவதில்லை என்பது அவன் உறுதியில் தெரிந்தது.

மருத்துவரைச் சந்திப்பதற்கான தனது நேரம் வந்த போது உள்ளே போனான். அவன் வேலைபார்க்கும் நிறுவனத்தில் எல்லோரும் வருடாவருடம் மருத்துவப்பரிசோதனை அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

சரணும் அதற்குரிய பரிசோதனைகளில்

**மு.கலை-திருகோணமலை.**

ஈடுபட்ட பின் மருத்துவ அறிக்கையைப் பெறவே காத்திருந்தான்.

மருத்துவர் அவனது மருத்துவ பரிசோதனை அறிக்கையினை மேசை மீது எடுத்து வைத்தார்.

வழக்கம்போல நன்றி தெரிவித்துவிட்டு மருத்துவ அறிக்கையினை எடுத்துக் கொண்டு எழுந்த சரணை மருத்துவர் இருக்கையில் மீண்டும் அமர்த்தினார்.

ஆச்சரியக்குறியுடன் மருத்துவரைப் பார்த்தவாறே இருக்கையில் சரண் அமர்ந்த போது,

"உங்கள் இரத்தத்தில் எச்.ஐ.வி.வைரஸ் கலந்திருக்கு. நீங்க ஒரு எயிட்ஸ் நோயாளியாகிட்டீங்க...."

மருத்துவரின் வார்த்தைகள் அணுகுண்டாய் வெடித்தன.

இறந்த காலத்தின் மீதே எதிர்காலம் தங்கியிருக்கிறது என்ற உண்மை உறைத்தது. ஆனால் பயன் என்ன...?

# குணப்படுத்த முடியாத நோய்!



தனிமையில் இருந்த வித்யாவுக்கு, மனதினுள்ளே உலைக் குமிழிகள் போல கோபம் நுரைத்துப் பொங்கிச் சத்தமிடுவதை உணர முடிந்தது. இந்த உலகத்தின் மீதே வெறுப்பு வந்தது. 'சே' என்ன ஜனங்கள்! பணத்தையும், அதனால் ஏற்படுத்திக் கொள்கிற வரட்டுக் கௌரவங்களையும் தவிர, வாழ்வின் வேறெந்த உணர்வுகளையுமே புரிந்து கொள்ளாத பிடிவாத ஜென்மங்கள்!'

இருப்புக் கொள்ளாமல் எழுந்து நடந்தாள். கொந்தளிக்கும் உணர்வுகளையும், கோபத்தையும் சுயபரிதாபம் மேலிட்டுப் பொங்கிய விம்மலையும் அடக்கிக் கொள்ள மாட்டாமல் குறுக்கும் நெடுக்குமாக வேக நடைநடந்து தன்னைச்

## இலக்கிய நயம்

சமனப்படுத்த முயன்றாள். முச்சிரைத்தது. தொடர்ந்து நடக்கமுடியாமல் சோர்வுற்று கீழே அமர்ந்தாள்.

அறைக்கு வெளியே செல்ல மனமில்லை. அம்மா, அப்பா, அக்கா, தம்பி, தங்கை உறவுகள் என்று யார் முகத்தையும் பார்க்கப் பிடிக்கவில்லை. வேதனையைப் பகிர்ந்து கொள்ள முடியவில்லை.... பிறகென்ன உறவுகள்?

"வித்யா.... ஏய் வித்யா...... எங்கிருக்கிறாய்?" தேடும் குரல் மாயாவினுடையது என்பதைப் புரிந்து கொண்டாள் வித்யா. "அறைக்குள் இருக்கிறாள் போய்ப் பார் பிள்ளை...." என்று அம்மா சொல்லிவிடுவதும் கேட்டது. மாயா தன் அறையை நோக்கி வருகிறாள் என்பது புரிந்தது. அவசரமாக கண்களைத் துடைத்து முகத்தைச் சீர்படுத்திக் கொண்டாள்.

"என் அருமை வித்யா! இங்கே தான் இருக்கிறாயா? என்ன இது? அழுதாயா? என்ன நடந்தது? அம்மா திட்டினார்களா?"

"வா மாயா, ஒன்றுமில்லை. இப்படி இரு..." அருகில் போய் அமர்ந்த மாயா, வித்யாவின் நாடியில் கை கொடுத்து முகத்தை நிமிர்த்தியபடியே, "என்ன ஒன்றுமில்லை? அதைச் சொல்லு!" என்றாள்.

தோழியின் வாஞ்சைக்கு நெகிழ்ந்துபோன வித்யா குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

அவள் அழுது ஓயட்டும் என்று காத்திருந்தாள் மாயா.

அழுகையை நிறுத்திவிட்டு, "எல்லோருக்கும் நான் விரோதியாகத் தெரிகிறேன், மாயா!" என்று மெல்லிய விசும்பலோடு சொல்வதைத் தொடர்ந்தாள். "என்னைத் தங்கள் பெண்ணாகவே நினைக்காமல் தாம் தூம் என்று குதிக்கிறார்கள். திடீரென்று நான் இவர்களுக்கெல்லாம் வேண்டாத பெண்ணாகி விட்டேன்...." விசும்பல் அழுகையாக வெடிப்பதை அவளால் நிறுத்த முடியவில்லை.

"என்ன நடந்தது?" மென்மையாக அவள் தலையைத் தடவியபடியே குரலில் பரிவுகாட்டினாள் மாயா.

"நான் பவித்திரனை பார்க்கக் கூடாது பேசக் கூடாதாம்.... ஆளாளுக்குப் புத்திமதிகள் சொல்லிப் புரட்டியெடுக்கிறார்கள்...."

"யாரடி அந்த பவித்திரன்?"

"என்னுடன் கூட வேலை செய்கிறார். என் மீது உயிரையே வைத்திருக்கிறார்...."

"என்னடி இது? உன் அப்பா இந்த ஊரிலேயே பெரிய மனிதர். பெரிய குடும்பங்களிலெல்லாம் உனக்கு மாப்பிள்ளை தேடிக் கொண்டிருக்கிறார்..... நீயோ ஊர் பேர் தெரியாதவன் உன் மீது உயிரையே வைத்திருக்கிறான் என்கிறாயே....?"

வித்யா மௌனமாகியிருந்தாள்.

"என்னடி, பேசாமலிருக்கிறாய்?"

"உனக்கும் புரியவில்லை... நான் என்ன செய்வேன்? நானும் எல்லா பெரிய குடும்பத்து ஆண்களையும் தான் கண்டிருக்கிறேன். இவரைப் பார்த்த பிறகுதானே எனக்கு வேறு நினைவுகள் அழிந்து இவர் நினைவு ஒன்றே எனக்குள் நிரம்பியிருப்பதாகத் தோன்றுகிறது. இவர் நினைவு என்னிடமிருந்து பிடுங்கப்பட்டு விட்டால் நானே அழிந்து இல்லாமலாகி விடுவேன் என்று திண்ணமாகத் தெரியும்போது நான் என்னடி செய்ய முடியும்? சொல்லு....!"

"சரி, உன் பெற்றோர் மனம் மாறும் வரைக்குமாவது பொறுத்திரேன். அவசரப்பட்டு அவரைப் பார்ப்பேன் கதைப்பேன் என்று அடம் பிடித்தால் எல்லாம் சிக்கலாகி விடாதா?"

"பெற்ற பெண்ணைவிட அந்தஸ்து, கௌரவம் என்பவை தான் முக்கியம் என்று கருதும் இவர்களுக்கு என் நிலையைப் புரிந்துவிட முடியும் என்று என்னால் நம்பமுடியவில்லை. உனக்கே புரிந்துகொள்ள முடியவில்லையே மாயா! அவனை நோக்கி ஓடும் என் மனதை என்னால் அடக்கி

## தருவது முழடில்யன்

வைத்திருக்க முடியவில்லை. அவன் மீதான என் காதல், உள்ளத்தையும் உடம்பையும் தன்வசமாக்கிக் கொண்டு நிமிஷம் தோறும் வளர்ந்து வருகிறது. நீங்கள் எல்லோரும் உங்கள் அறிவுரைகளை நிறுத்தி என் உடலையும் உள்ளத்தையும் உருக்கியபடி வளரும் இந்த நோயைத் தடுக்க ஏதும் செய்ய முடியுமாயின் செய்யுங்கள். சும்மா சும்மா 'அவன் நினைவைவிடு.... உன் காதல் தப்பு....' என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம்...!"

"எங்களுக்குத் தெரியாத மருத்துவத்திற் குணப் படாத உன் நோயைத் தணிக்க நாங்கள் என்ன செய்ய முடியும் வித்யா?"

"புரிகிறதல்லவா? என் அவலம் இதுதான். நல்ல உச்சி வெயிலில் ஒரு மலைப் பாறைமீது ஒரு வெண்ணைக்கட்டி இருக்கிறது. அது உருகி ஓடி விடாதபடி காவல் காக்கிறான் ஓர் ஊமை. அவனுக்கு கைகளும் இல்லை. கண்ணாலேயே காவல் காக்கிறான். 'வெண்ணை உருகி வீணாகிறது; யாராவது ஓடிவாருங்கள்' என்று அவனால் சத்தமிடவும் முடியாது. தானே ஓடிச் சென்று அதை நிழலிலே எடுத்து வைக்க அவனுக்குக் கைகளும் இல்லை.

இந்த ஊமை முடவனைப் போலத்தான் நானும் என் உடலை உருக்கும் காதல் நோயை எனக்குள்ளேயே அடக்கிப் பாதுகாத்துக் கொள்ளவும் முடியவில்லை. அதைப்பற்றிப் பிறரிடம் கூறி ஆறுதல் அடையும் ஆற்றலும் இல்லை. என்னிடம் வளரும் இந்தக் காதல் நோயை எப்படித் தடுக்க முடியும்? அந்த நோயை என் உள்ளமெல்லாம் உருகிப் பரவுகின்றது.

**இடிக்கும் கேளிர்! நும்குறையாக**
**நிறுக்கல் ஆற்றினோ நன்று; மன்தில்லை**
**ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்**
**கையில் ஊமன் கண்ணின் காக்கும்**
**வெண்ணெய் உணங்கல் போலப்**
**பரந்தன்று இந்நோய்; நோன்று கொளற்-**
**கரிதே.**

**(குறுந்தொகை 58)**

## சிந்தியா பதில்கள்

**★ பள்ளிக்கூடப் படிப்பில் என்ன நன்மை சிந்தியா?**

வி.திலகராணி, நுவெரலியா.

பதில் தருமுன்னர், உங்களுக்கு எப்போது இந்தச் சந்தேகம் வருகிறது என்று தெரிய வேண்டும். பள்ளிப் படிப்பை முடித்து வீட்டில் இருக்கும்போதா-அல்லது படிப்புக்குச் சம்பந்தமே இல்லாத வேலையிலிருக்கும் போது இந்தச் சந்தேகம் வருவது நியாயம் தான். ஆனாலும்... படிப்பை விடுங்கள், சிட்டுக்குருவிகளாகப் பாடி ஆடித் திரிந்த அந்தக் காலம்... கிடைத்த தோழமை... வாழ்நாள் முழுவதும் மனதின் அடியில் மகிழ்ச்சிப் பெருக்காக.. எப்போது சுரண்டினாலும் இன்பம் பீறிடுமல்லவா!

பொதுவாக படிப்பில் என்ன நன்மை என்று பார்த்தால், 'கல்விக்கு நன்றி' என்ற தலைப்பில் புதுக்கவிஞர் ஒருவர் சொல்லியிருப்பதைத் தருகிறேன்:

"அவனைப் பள்ளியில் சேர்க்கு மட்டும்
ஓயாமல் கேள்வி கேட்பான்
பதில் தர நான் தவிப்பேன்
அவனைப் பள்ளியில் சேர்த்த பின்னால்
ஓய்ந்தால் கேள்வி கேட்கிறேன்
பதில் தர அவன் தவிக்கிறான்."

**★ சிந்தியா! அளவுக்கு அதிகமாக ஆசைப் படும் பெண்களைப் பற்றி...?**

என்.எம்.நிஸாம், காத்தான்குடி-01.

அளவுக்கு அதிகமாக ஆசைப்படும் ஆண்களைப் போன்றவர்கள்.

**★ நடிகை கௌசல்யா இந்தி கிரிக்கெட் வீரர் சடகோபன் ரமேஷுடன் கிசுகிசுக்கப்படுகிறாரே... நிஜமா?**

அப்பாபிள்ளை சுமதி, கொழும்பு.

அது குமுதத்தின் ஏப்ரல் ஃபூல் விளையாட்டு. உண்மையில்லை!

**★ காதல் என்பது தெய்வீகமானது. ஆனால், திரைப்படங்களில் அதைப் பண்ணும் விதம் தான் அசிங்கமாக உள்ளது. திறந்தவெளி அரங்கில் மானம் காற்றில் பறக்கின்றதே... உங்கள் அபிப்பிராயம் என்ன?**

மா.பூலோகசிங்கம், நெளுக்குளம்.

பெரும் பகுதித் தமிழ்த் திரைப்படங்களின் ஆதார குணம் நம்மால் பண்ண முடியாதவைகளைக் காட்டிப் பணத்தை வசூல் செய்து கொள்வதே. தெய்வீகமாய்க் காதல் பண்ண நம்மாலும் முடியும். தொப்புளில் பம்பரம் விடுவது, முந்தானையை மறந்து தெருவில் இழுத்துக் கொண்டோடுவது, காதலியின் றெக்கோர்ட் டான்ஸ் பார்ப்பது எல்லாம் நம்மால் முடியாதவை. எனவே, வாய் பிளந்து இரசிக்க வசூல் பிய்த்துக்கொண்டு போகிறது!

**★ காதலிப்பது, காதலிக்கப்படுவது எதில் இனிமை அதிகம்?**

எம்.சிவபாலன், இரத்தினபுரி.

காதலிப்பது இனிக்கும் அவஸ்தை. காதலிக்கப்படுவதோ இனிக்கும் சுளுமை.

**★ தமிழக முதல்வர் கருணாநிதி ஏன் நிலை தடுமாறுகின்றார்?**

ஆர்.நித்தியானந்தன், நாவலப்பிட்டி.

"ஒருவர் அரசியல்வாதியாக என்ன தகுதிவேண்டும்?" என்று வின்ஸ்டன் சேர்ச்சிலிடம் கேட்கப்பட்டதற்கு அவர் சொன்ன பதில்: "வருங்காலத்தில் என்னென்ன நடக்கும் என்பதை முன்கூட்டியே சொல்லத் தெரிய வேண்டும். பிறகு, அது ஏன் நடக்கவில்லை என்பதற்கான விளக்கம் சொல்லவும் தெரிந்திருக்க வேண்டும்.

கருணாநிதி அவர்கள் முழுமையான அரசியல்வாதி. பிற்காலத்தில் நடக்கக்கூடிய எல்லாச் சாத்தியங்களுக்கும் ஏற்றபடி கருத்துக்களைச் சொல்லி வைக்கிறார். பிறகு எது நடந்தாலும், "இதைத்தான் தலைவர் முன்பே தெளிவாகச் சொல்லியிருந்தாரே!" என்று தொண்டர்கள் புல்லரித்துப் போவார்கள்.

**★ சிந்தியா புகழ்ச்சியில் சங்கடப்பட்டதுண்டா?**

என்.திவ்யா, மட்டக்களப்பு.

நம் மரியாதைக்குரியவர்கள் நம்மைப் புகழ்ந்தால், அதில் ஒரு 'கிக்' இருக்கும்-நம் ஜெயசூரியாவின் விளாசலை றொனி கிறேய்க்கும் ரவிசாஸ்திரியும் வர்ணித்துக் கொண்டிருப்பது போல. அதையே நம் ரஞ்சித் பெர்னாண்டோ புகழ்ந்துகொண்டிருந்தால் 'கிக்' இருக்காது. சங்கடம்தான்.

**★ காதலுக்கும் நட்புக்கும் உள்ள ஒற்றுமை என்ன?**

ஆர்.கோணேஸ்வரன், நுவரெலியா.

இரண்டுமே சாஸ்வதமானவை. அவை நீடித்திருக்கும் காலம் வரைக்கும்.



**★ சிரிக்க, சிந்திக்க ஒரு மருத்துவ ஜோக் ப்ளீஸ்?**

எஸ்.எம்.ஏ.மனோ, ஹற்றன்.

சிரிப்பு வராவிட்டாலும் மருத்துவ சம்பந்தமானதுதான் இது. அவளும் அவனும் ஒன்றாக வாழ்ந்து வந்தார்கள். இருவருக்கும் ஆறு குழந்தைகள். ஆனால் இருவரும் திருமணமே செய்து கொள்ளாமலிருந்தார்கள். இதைப்பற்றி ஒருவர் அவளிடம், "இவ்வளவு காலம் சேர்ந்து வாழ்ந்திருக்கிறீர்கள். ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை?" என்று கேட்டார்.

அவள் சொன்னாள்: "15 வருடங்களுக்கு முன்பு இதயக் கோளாறுக்காக என்னைப் பரிசோதித்த டாக்டர் நான் திருமணமே செய்துகொள்ளக் கூடாது என்று கண்டிப்பாகக் கூறி விட்டார்!"

**★ கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போனதுண்டா?**

ஆர்.வித்யா, ராகலை.

ஆமாம், மூக்கு!

**★ சிந்தியா, முட்டாள்தனம் நகைப்புக்குரியதா?**

எம்.நஸ்லியா, யடவத்த.

ஆம்! ஒருத்தனுக்குத் தன் மனைவி மேல் சந்தேகம் வந்து கண்காணித்ததில் அவளது நடத்தை சரியில்லாததை அறிந்து கொண்டான். ஒரு நாள் வேறொருவனுடன் தன் மனைவி தனியாக இருப்பதை நேரிடையாகக் கண்டுவிட்ட அவன் துப்பாக்கியை எடுத்து, தன் தலைக்குக் குறி வைத்துக் கொண்டான். இதைப் பார்த்த மனைவி சிரித்தாள்.

அவன் கோபம் தலைக்கேற கத்தினான்: "சிரிக்காதே அடுத்தது நீதான் என்றான்!"

**★ சிந்தியா! சமீபத்தில் படித்த புத்தகம்?**

எச்.எம். நிபாஜி, திருகோணமலை.

ஜோசப் ஹெல்லரின் 'கேட்ச்-22' என்ற அமெரிக்க நாவல். 1961ல் வெளிவந்தது.

விரும்பாத ஒரு போருக்குள் பலிக்கடாக்களாகத் தள்ளப்படும் சாதாரண மக்களின் அவலத்தை மனிதப்பற்றோடு, அதேசமயம் கிண்டலும் ஹாஸ்யமுமான நடையில் விவரிக்கிறது நாவல்.

போரின் கொடுமைகளை விவரிப்பதில் இரண்டு முறைகள் இருக்கின்றன. ஒன்று: அது விளைவிக்கும் பேரழிவு, மனிதக்கொலைகள், சுற்றுப்புற அழிவு, பொருளாதார சேத விபரீதம், அனாதைகளாய் விடப்பட்ட குழந்தைகள்..... என்று பட்டியல் நீள்கிறது. இன்னொன்று; தனிமனிதனின் ஆன்மாவை அது அழிக்கும் விதம். கொல்வது சரிதான் என்ற நினைப்பு நிரந்தரமாய் மனிதனுக்குள் இருக்க போர்கள் வழிசெய்து விட்டன. 'சரியான' காரணங்களால் கொல்லலாம் என்றால், போர்முனையில் மட்டுமல்ல வேறெங்கும்-தெருவில், சந்தையில்-, யாரையும்குழந்தைகளை, பெண்களை என்ன நடக்கிறது என்றே-தெரியாத அப்பாவிகளை கொல்வதிலும் தவறில்லை என்றாகிவிடுகிறது. 'சரியான' காரணங்களை மக்களுக்கு அளிப்பதில் மதவெறியும், மொழி வெறியும், நிறவெறியும், தேசப்பற்று வெறியும் ஒன்றுக்கொன்று போட்டியிடுகின்றன.

நல்ல யுத்தமோ, கெட்ட யுத்தமோ மனிதனைப் பலிக்கடாவாக்கிக் கொண்டு, வாழ்வையும் வளங்களையும் மென்று சப்பி, பெரும் இலட்சியப் பொய்மைகளைத் துப்புகிறது போர்.

இந்த நாவல் முழுவதுமே யோசாரியான் என்ற போர் வீரன், போர்முனைக்குத் தான் அனுப்பப்படாமல் தப்பிக்கச் செய்யும் முயற்சிகளும், அந்த முயற்சிகள் தோல்வியடைவதும் தான் கதை. வியட்நாம் போருக்கு அமெரிக்காவில் எழுந்த எதிர்ப்பிற்கு இருந்த பலகாரணிகளில் இந்த நாவலும் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது.

## ஸ்போர்ட்ஸ்

### வெங்சர்கருக்குக் கௌரவம்



கிரிக்கெட்டின் 'மக்கா' என்றழைக்கப்படும் இலண்டனில் உள்ள போர்ட்ஸ் மைதானத்தில் இந்திய முன்னாள் துடுப்பாட்ட வீரர் வெங்சர்கருக்குக் கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது.

ஜூன் 29ல் மேற்கிந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டி, இம் மைதானத்தில் நடந்த 100 வது டெஸ்ட் போட்டியாகும். போட்டி தொடங்குமுன் 10 வீரர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

அந்த 10 வீரர்களில் வெங்சர்கரும் ஒருவர். அதுமட்டுமன்றி ஆசியாவிலிருந்து கௌரவிக்கப்பட்ட ஒரே வீரராகவும் அவர் திகழ்கிறார். வெங்சர்கர் போர்ட்ஸ் மைதானத்தில் தொடர்ந்து 3 முறை சதமடித்துச் சாதனை புரிந்தமையே இந்தக் கௌரவிப்புக்குக் காரணம்.

1979ல் 103 ஓட்டங்களும், 1982ல் 157 ஓட்டங்களும், 1986ல் ஆட்டமிழக்காமல் 126 ஓட்டங்களும் தொடர்ச்சியாக போர்ட்ஸில் அடித்துள்ளார் வெங்சர்கர். இவருடன் கௌரவிக்கப்பட்ட ஏனைய வீரர்கள்:

டொன் பிரட்மன், பொப் மஸி, கிளென் மக்ராத் (அவுஸ்திரேலியா), கேரி கோபர்ஸ், கோர்டன் கிறீனிட்ஜ் (மேற்கிந்தியத்தீவுகள்), கிரஹாம் கூச், இயன் பொத்தம், அலன் லாம்ப், டெரிக் அண்டர்வூட் (இங்கிலாந்து).

### சஹாரா கோப்பை போட்டிகள்

இந்திய-பாகிஸ்தான் கலந்து கொண்டு விளையாடும் சஹாரா கோப்பை போட்டிகள் வருகின்ற செப்டெம்பர் 9ம் திகதி டொரண்டோவில் நடைபெறவுள்ளன.

5 போட்டிகள் கொண்ட இந்த ஒருநாள் போட்டிகள் 1996, 1997, 1998 ஆகிய வருடங்களில் நடைபெற்றன. கடந்த ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே ஏற்பட்ட கார்கில் யுத்தத்தால் போட்டிகள் நடைபெறவில்லை.

டொரண்டோ போட்டிகள் பற்றிய விவரங்கள் வருமாறு:

முதல் போட்டி-செப்டெம்பர் 09
2வது போட்டி-செப்டெம்பர் 10
3வது போட்டி-செப்டெம்பர் 13
4வது போட்டி-செப்டெம்பர் 16
5வது போட்டி-செப்டெம்பர் 17

### போட்டித் தொடர் விவரங்கள்

இலங்கை, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா ஆகிய 3 நாடுகள் பங்குபற்றும் முத்தரப்பு ஒரு நாள் போட்டித்தொடர் விவரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| இலங்கை | - பாகிஸ்தான் | - ஜூலை 05 காலி (பகல்) |
| இலங்கை | - தென்னாபிரிக்கா | - ஜூலை 06 காலி (பகல்) |
| பாகிஸ்தான் | - தென்னாபிரிக்கா | - ஜூலை 08 பிரேமதாஸ (பகலிரவு) |
| இலங்கை | - பாகிஸ்தான் | - ஜூலை 09 பிரேமதாஸ (பகலிரவு) |
| இலங்கை | - தென்னாபிரிக்கா | - ஜூலை 11 எஸ்.எஸ்.ஸி. (பகல்) |
| பாகிஸ்தான் | - தென்னாபிரிக்கா | - ஜூலை 12 எஸ்.எஸ்.ஸி.(பகல்) |
| இறுதிப்போட்டி | - ஜூலை 14 பிரேமதாஸ (பகலிரவு) | |
| மேலதிக நாள் | - ஜூலை 15 | |

இப்போட்டிகள் முடிவடைந்ததும் இலங்கை, தென்னாபிரிக்காவுடன் 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் ஜூலை 20 முதல் 24 வரையும், 2வது டெஸ்ட் ஜூலை 30 முதல் ஒகஸ்ட் 03 வரையும் 3வது டெஸ்ட் ஒகஸ்ட் 10 முதல் 14 வரையும் நடைபெறவுள்ளன.

**கா**ளிகாம்பாள் கோயிலில் தனது கணவனுடைய உடலில் தனது அண்ணனுடைய தலையைப் பொருத்தியவள் அண்ணனுடைய உடலில் தனது கணவனுடைய தலையைப் பொருத்தினாள்.

அம்பாள் கூறியபடி இருவரும் உயிர் பெற்றெழுந்தனர். அவர்கள் இருவரும் உயிர் பெற்றெழுந்தவுடன்தான் தான் செய்த தவறை அப்பெண் உணர்த்தாள். என்ன செய்வதென்று தெரியாமல் அழுதபடி நின்றாள்.

இந்தக் கதையைக் கூறிய வேதாளம் விக்கிரமாதித்தனிடம், "மன்னரே உயிர் பெற்றெழுந்த இருவருள் அந்தப் பெண் எவரை தன் கணவனாக ஏற்றுக் கொள்வாள்?" என்று கேட்டது.

விக்கிரமாதித்தன் உடனடியாக "அந்த இருவரில் எவர் அவள் அருகில் சென்று மனைவி என்று அழைக்கிறாரோ அவரேதான் அப் பெண்ணுடைய கணவன் ஆவான்!" என்று விடையளித்தான்.

இதைக் கேட்ட வேதாளம் விக்கிரமாதித்தனின் தோளைவிட்டு கீழே குதித்து ஓடிச் சென்று மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது. விக்கிரமாதித்தனும் வேதாளத்தின் பின்னால் ஓடிச் சென்று மரத்திலிருந்த வேதாளத்தைப் பிடித்து தோளில் சுமந்த வண்ணம் நடக்கலானார்.

# மன்னாதி மன்னன்

13

## ஆறாவது கதை

**பா**டலிபுரத்தைச் சேர்ந்த அரசன் விக்கிரமசிம்மன். அம் மன்னனுடைய மகன் இளவரசன் பராக்கிரமசிம்மன்.

பாராக்கிரமசிம்மன் ஓர் ஆண் பஞ்ச



வர்ணக் கிளியை வளர்த்து வந்தான். அந்தக் கிளி கடந்த காலம், நிகழ்காலம், மற்றும் எதிர்காலம் ஆகியவற்றில் நடைபெறப் போகும் நிகழ்ச்சி களை முன்னதாகவே கண்டறிந்து சொல்லக் கூடிய ஆற்றல் கொண்டது.

ஒருநாள் தன்னுடைய கிளியுடன் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்த பராக்கிரமசிம்மன், அக்கிளியிடம், "கிளியே? எனக்கு எப்போது திருமணம் நடைபெறப் போகின்றது; எனக்கு வாய்க்கப் போகும் மனைவியைப் பற்றி உன்னால் சொல்ல முடியுமா?" என்று கேட்டான். அந்தக் கிளியும் உரிய பதிலைச் சொல்லத் தொடங்கியது.

"இளவரசே. உமக்குரிய மணப் பெண் வேதபுரியில் வளர்கிறாள். அந்நாட்டு அரசன் மகாதரன் தனது மகள் இராக்கசியை தனியான ஒரு கன்னிமாடத்தில் வைத்து வளர்க்கின்றான். அவளிடம் என்னைப் போல் ஒரு பஞ்சவர்ணக் கிளி உள்ளது. அது ஒரு பெண்கிளி. என்னைப் போலவே மூன்று காலங்களையும் உணர்ந்து சொல்லக்கூடிய ஆற்றல் அக்கிளிக்கும் உண்டு.

இதேபோல் என்னிடம் கேட்டதுபோல் இளவரசி இராக்கசி தனக்கு வரப் போகும் கணவன் யார், எப்படிப்பட்டவன், எங்கிருந்து வரப்போகின்றார். என்றெல்லாம் கிளியிடம் கேட்டுக் கொண்டிருக்கிறாள்.

இளவரசே! இன்றே அப்பெண் உங்களைப் பற்றிய தகவல் எல்லாம் தன் தந்தையான மகாதரனிடம் எடுத்துக்கூறப் போகிறாள்.

தன் மகளிடம் இருக்கும் பஞ்சவர்ணக் கிளியானது முக்காலம் உணர்ந்து சொல்லக் கூடிய உண்மை தெரிந்தமையினால், அந்த மன்னன் திருமணத்துக்கான ஆயத்தங்களுடன் தன் மகளையும் கூட்டிக் கொண்டு இங்கு வரப் போகிறான்?" என்று இளவரசன் பராக்கிரமசிம்மனிடம் பஞ்சவர்ணக்கிளி கூறியது.

தான் வளர்க்கும் கிளி தனக்குரிய மணப் பெண் மற்றும் விபரங்களையெல்லாம் கூறி முடித்தமைக்காக அக்கிளியை அணைத்து முத்தமிட்டு வேண்டிய புதுப்பழங்களை எல்லாம் தேர்ந்து கொடுத்தான்.

கிளி கூறியதுபோல சில நாட்களில் வேதபுரியிலிருந்து மன்னன் மகாதரனும் மகள் இளவரசி இராக்கசியும் பரிவாரங்களுடன் பாடலிபுரத்தை வந்தடைந்தனர். தங்கள் வருகையை முன் கூட்டியே விக்கிரமசிம்ம மன்னனுக்கு தூதுவர்கள் மூலம் தெரிவித்திருந் தமையினால் பாடலிப்புரம் விழாக்கோலம் பூண்டு இருந்தது. வந்த விருந்தாளிகளுக்கு சிறப்பான வரவேற்புபசாரம் அளிக்கப்பட்டது.

நல்லநாள் பார்த்து இளவரசன் பராக்கிரமசிம்மனுக்கும் வேதபுரி இளவரசி இராக்க

## கிளிகளும் கதை கூறுகின்றன

சிக்கும் மிகச் சிறப்பாக திருமணம் நடந்தேறியது. அன்றைய தினமே பராக்கிரம சிம்மன் வளர்த்த ஆண் கிளியையும் இராக்கசி வளர்த்த பெண்கிளியையும் ஒரே கூட்டில் சேர்த்து வைத்தனர்.

ஆண் கிளி பெண்கிளியின் அருகே செல்லும் போதெல்லாம், பெண்கிளி ஒதுங்கிச் சென்று வேறொரு இடத்தில் இருந்தது. இது தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. ஒரு நாள் ஆண் கிளி பெண்கிளியைப் பார்த்து, "ஏன் என்னை உன்னருகில் வர அனுமதிக்கிறாயில்லையே?" என்று கேட்டது. இதற்கு பெண் கிளி "ஆண்களையே நம்பக்கூடாது!" என்று சொல்லி மீண்டும் ஒதுங்கிக் கொண்டது. இதைக் கேட்ட ஆண்கிளி "சே.. சே.. உன்னருகில் நான் வந்தேனே! பெண்களையே ஒரு துளியும் நம்பக்கூடாது!" என்று சொன்னது.

இவ்விருகிளிகளும் தகராறு செய்து கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த பராக்கிரமசிம்மன் பெண்கிளியிடம் "ஆண்களையே நம்பக்கூடாது என்று சொல்கிறாயே; அதற்கு என்ன காரணம்?" என்று கேட்டான்.

### பெண்கிளி சொன்ன கதை

ஆண்களை நம்பக் கூடாது என்பதற்கு ஆதாரமான கதையை பெண்கிளி இளவரசனான பராக்கிரமசிம்மனிடம் கூறத் தொடங்கியது.

அபயஸ்த என்ற நகரில் வால்மீகன் செட்டி என்ற பெயருடைய பெரும் தனவந்தனான ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுடைய மகன் தர்க்கேசரன் ஓர் ஊதாரி. தன் தந்தை சேர்த்து வைத்த பெரும் செல்வத்தைச் சீரழித்துவந்தான். எப்போதும் அவன் விலை மாதர் வீடுகளிலேயே காலம் கழிப்பான். அதனால் தந்தை சேர்த்து வைத்திருந்த செல்வம் வேகமாகக் கரைந்து கொண்டே போனது.

தன் மகனை எப்படியாவது சீர்திருத்தி வழிக்குக் கொண்டு வந்து விடலாம் என்று வால்மீகன் செட்டி பெரும்பாடுபட்டான். ஆனால் அவனுடைய நடத்தையில் எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை. ஆகவே தன் மகனை வீட்டை விட்டே துரத்தி விட்டான்.

தர்க்கேசரன் அழகாபுரி என்ற ஊருக்குச் சென்றான். தனது தந்தையைப் போல அங்கும் தனவந்தரான ஆடன் செட்டி என்பவர் இருப்பதாகக் கேள்வியுற்று அங்கு போய்ச் சேர்ந்தான். தன்னை நாடி வந்த இளைஞனும் ஒரு செட்டி மகன் என்பதை அறிந்த ஆடன் செட்டி அவனை வரவேற்று உபசரித்து தன் வீட்டிலேயே தங்கியிருக்குமாறு கேட்டுக் கொண்டான்.

ஆடன் செட்டியின் மகளான அலங்கார வல்லியை தர்க்கேசரனுக்கு மணமுடித்து வைத்து தன்னுடைய சொத்தில் பெரும்பகுதியை அவனுக்குச் சீதனமாகவும் கொடுத்து தனியானதொரு மாளிகையில் சிறப்புடன் வாழ வைத்தான்.

தர்க்கேசரன் தனது மனைவியுடன் சில காலம் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தான். சில மாதங்கள் சென்றபின் தன்னுடைய ஊருக்குப் போய் பெற்றாரைப் பார்த்துவர விரும்புவதாகவும் தனது மனைவியான அலங்காரவல்லியை அவர்களுக்கு அறிமுகப் படுத்த வேண்டும் என்றும் கூறிக்கொண்டு மனைவியையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

ஒரு கானகத்தின் ஊடாக இவர்கள் இருவரும் சென்று கொண்டிருந்தனர். அப்போதுதான் தர்க்கேசரனின் பழைய எண்ணங்கள் தலையெடுத்தன. தன்னுடன் ஏற்கனவே பழகிய விலைமாதர்களைப் பற்றி அவனுக்கு சபலம் தட்டியது.

அலங்காரவல்லியிடம் அவள் அணிந்திருந்த விலையுயர்ந்த நகைகளைக் கழற்றித் தரும்படி கேட்டான். வழியில் திருடர்கள் கண்ணில் பட்டால் நகைகளுக்காகவே அவர்கள் இருவரையும் கொன்று விடுவார்கள் என்பதனால்- ஊர் போய்ச் சேரும்வரை நகைகள் தன்னிடமே இருக்கட்டும் என்று கூறினான்.

அலங்காரவல்லி தன்னுடைய கணவன் பேச்சை உண்மையென்று நம்பி, தனது முழு நகைகளையும் கழற்றி ஒரு மூட்டையாகக் கட்டி அவனிடம் கொடுத்தாள்.

வழியில் ஒரு கிணற்றில் அலங்காரவல்லியை தர்க்கேசரன் தள்ளிவிட்டான். பின்னர் அங்கிருந்து அவன் தனியாகப் பிரிந்து சென்று விலைமாதர்களுடன் கூடிச் சல்லாபித்தான். இதனால் அவன் கைப்பொருள்யாவும் விரைவில் தீர்ந்து போய் விட்டன.

கிணற்றில் விழுந்த அலங்காரவல்லி நீரில் மூழ்கி இறக்கவில்லை. தத்தளித்த வண்ணம் அவள் கிணற்றிலிருந்து போட்ட கூச்சல் கேட்டு பலர் ஓடி வந்து அவளை வெளியே எடுத்துக் காப்பாற்றி விட்டனர்.

அலங்காரவல்லி தன் பெற்றோரிடம் போய்ச் சேர்ந்தாள். ஆனால் அவள் கணவன் அவளுக்குச் செய்த துரோகத்தை தன் பெற்றோரிடம் எதுவும் கூறவில்லை. திருடர்கள் வந்து தனது நகைகளையெல்லாம் பறித்துச் சென்றதாகவும் தனது கணவனை அவர்கள் அடித்து கட்டி இழுத்துச் சென்று விட்டதாகவும் பொய் சொன்னாள்.

இதற்கிடையில் கைப்பொருள் எல்லாம் தீர்ந்து விட்ட நிலையில் தர்க்கேசரன் மீண்டும் தன் மாம னாரிடம் போய்ச் சேரலாம் என்று அழகாபுரிக் குச் சென்றான்.

அழகாபுரியில் ஆடன் செட்டி வீட்டை அடைந்ததும் அவனுடைய மாமனார் அவனை வரவேற்று உபசரித்துக் கொண்டிருக்கையில் அலங்காரவல்லி மகிழ்ச்சியாக ஓடி வந்து அவனுடைய காலில் வீழ்ந்து அழுதாள்.

**இராஜகுமாரன்**

தர்க்கேசரன் துணுக்குற்றான். 'ஒழிந்து போகட்டும் என்று தன் கையால் கிணற்றுள் தள்ளப்பட்ட இப் பெண் இப்போது உயிருடன் வந்திருக்கிறாளே' என்று பேதலித்து நின்றான்.

வேறு எவருடைய காதுகளுக்கும் கேட்காமல் அலங்காரவல்லி, நகைகளைப் பற்றிய உண்மைச் செய்தி எவருக்கும் தெரியாது என்று அவனுக்கு இரகசியமாகக் கூறினாள்.

பழைய சம்பவங்களை மறந்து மகிழ்ச்சியாக வாழலாம் என்றும் அவனிடம் அவள் கூறினாள்.

அலங்காரவல்லியுடன் மேலும் சில நாட்கள் தர்க்கேசரன் சந்தோசமாக வாழ்ந்து வந்தான். ஆனால் விலை மாதர்களுடன் அவன் கொண்டிருந்த உறவு அவனுடைய உள்ளத்தில் மீண்டும் தலையெடுத்தது. ஆனால் அவர்களுக்குக் கொடுப்பதற்கு அவனிடம் பணமிருக்கவில்லை. ஆகவே தன் மனைவியைக் கொலை செய்து விட்டு யாருக்கும் தெரியாமல் இரவோடு இரவாக அவளுடைய நகைகளையும் சுருட்டிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினான்.

*(மன்னன் வருவான்..)*

## கத்தரித்த கடி ஜோக்ஸ்



பேரன் : தாத்தா இனிமே கம்பியூட்டர் படிச்சாத்தான் வேலை கிடைக்கும்.
தாத்தா:அப்ப நீ படிச்சா வேலை கிடைக்காதா?

பாபு : முட்டைக்கு நடுவில் என்ன இருக்கு?
கோபு : மஞ்சள் கரு
பாபு : இல்லை. 'ட்' இருக்கு.

விபத்தில் சிக்கி ஆஸ்பத்திரியில் இருக்கும் மகனைப் பார்க்க வந்த தகப்பன்,
" என் மகன் எப்ப கண்ணைத் திறந்து பேசுவான் டாக்டர்?"
"எல்லோரும் வாயைத் திறந்துதான் பேசுவாங்க. கண்ணைத் திறந்து பேச மாட்டாங்க."

பானு : ரைப்ரைட்டர் ஆணா? பெண்ணா?
சோனு : பெண்
பானு : எப்படி?
சோனு : அதுல ரிபன் இருக்கு

தினேஷ் : குளித்த பிறகு தலையைத் துவட்டுவது ஏன்?
நரேஷ் : தெரியலையே
தினேஷ் : குளித்துக் கொண்டிருக்கும்போது தலையைத் துவட்ட முடியாதே அதனால்தான்.



அருண் : எம்.ஜி.ஆர். சாகறத்துக்கு முன்னாடி எப்படி இருந்தார்?
வருண் : எப்படி இருந்தார்?
அருண் : உயிரோட இருந்தார்.

ஒருவர் : ஏன் அந்தப் பையன் தும்மிக் கொண்டே போகிறான்?
மற்றவர் : அவன் தான் 'பொடி'ப்பையனாச்சே.

மதன் : மணிரத்னத்தோட 'அலைபாயுதே' பாத்தியா?
சுதன் : இல்ல, நான் தனியாகத்தான் போய்ப் பார்த்தேன்.




"நுவரெலியாவுக்கு எல்லாப்பூச்சிகளும் சுற்றுலா மேற்கொண்டன. ஒரே ஒரு பூச்சியைத் தவிர. எல்லாப் பூச்சிகளும் குளிரில் நடுங்கின. நடுங்காத அந்தப் பூச்சி எந்தப் பூச்சி?"
'கம்பளி'ப் பூச்சி.'

பாலு: குதிரைக்கு ரக்ஸ் (TAX) கட்டினால் என்னவாகும்?
வேலு: தெரியலையே
பாலு: வரிக்குதிரையாகும்.

"மூன்று மாடிக் கட்டடத்தில் இருந்து ஒருவர் கீழே விழுந்தார். ஆனால் அவருக்கு ஒரு சின்னக் காயம் கூட ஏற்படவில்லைத் தெரியுமா?"
"அதெப்படி?"
"எல்லாமே பெரிய காயங்கள் தான்."



ராணி: கலர் ரீ.வி.க்கும் கறுப்பு, வெள்ளை ரீ.வி.க்கும் என்ன வித்தியாசம்?
வாணி: தெரியலையே?
ராணி: கலர் ரீவி.யில கறுப்பு, வெள்ளையில் பார்க்கமுடியும். கறுப்பு வெள்ளை ரீ.வி.யில் கலரைப் பார்க்க முடியாதே.



Regd. as a News Paper at the G.P.O.(QD/65/NEWS/2000)





➡ அம்மன் ஜுவல்லஸ் தினமுரசுடன் இணைந்து நடத்திய வைரமோதிரப் பரிசுப் போட்டியில் வெற்றி பெற்ற கொழும்பு, கொட்டாஞ்சேனை, மேஃபீல்ட் வீதி, 88ம் இலக்கத்தைச் சேர்ந்த செல்வி சிவாஜினி மகாலிங்கம், அம்மன் ஜுவல்லஸ் உரிமையாளர் எம்.கணேசன் அவர்களிடமிருந்து முதலாம் பரிசான வைர மோதிரத்தைப் பெற்றுக் கொண்டார். ◘

## வைரமோதிரம் பெறுகிறார்






⬇ அழகும் ஆபத்தானதாகலாம். படத்தில் காணப்படும் இவ்விரண்டு தேரைகளும் தகதகவென்று ஒளி உமிழும் தீ வர்ணத்தில் காட்சிதருகின்றன. அப்படியே பிடித்து முத்தமாரி பொழியலாம் போலிருக்கிறதல்லவா? ஆனால் இதனைத் தொட்டாலே தொலைந்தோம். இயற்கை இப்பிராணியின் அழகிய சருமத்தை கொடிய விஷத்தால் உருவாக்கித் தந்திருக்கிறது. இதன் வண்ணக் கவர்ச்சியால் கவரப்பட்டு இதனுடன் 'விளையாட' நினைத்து நெருங்கும் பிராணியின் பாடு அதோகதிதான். ○




⬅ ஒட்டகச் சிவிங்கியின் கழுத்து உண்மையில் மிக நீளமானதுதான். தாவர பட்சணியான இந்தப் பிராணி வனங்களில் அதி உயர்ந்த மரங்களின் உச்சாரக் கொப்பில் தளிர்விடும் இலைகளை கலபமாகக் கடித்து உண்பதற்கு அம்மிருகத்துக்கு இத்தனை நெடிய கழுத்தை இயற்கைத் தந்திருக்கிறது.

இப்படத்தில் பல ஒட்டகச் சிவிங்கிகளைப் பார்க்கிறீர்கள். இவற்றுள் மத்தியிலுள்ள ஒரு சிவிங்கியின் கழுத்து மட்டும் ஏனைய சிவிங்கிகளைவிட மிகமிக உயரமாகக் காணப்படுகிறது. ஆனால் இந்த அதிசய பிராணியை உயிருடன் எந்தக் காட்டிலும் தேடிக் கண்டு பிடிக்க முடியாது. நவீன யுகத்தில் சகலகலா வல்லமை பொருந்திய கணினிப் பொறியின் உதவியால் புகைப் படத்தில் இந்தச் சிவிங்கியின் கழுத்தை நீளமாக்கி இருக்கிறார்கள்.


ஒரு வர்த்தக வங்கியின் விளம்பரத்துக்காக வடிவமைக்கப்பட்டதுதான் இந்த நெட்டைக் கழுத்து ஒட்டகச் சிவிங்கி.




➡ அமெரிக்காவின் சூப்பர் மொடல் அழகி சின்டி கிராஃபோட் இன்று உலகிலேயே அதிக வருமானம் பெறும் மொடல் அழகி என்ற நிலையை எட்டிப் பிடித்துள்ளார். தனது 17வது வயதில் மொடலிங் துறையில் புகுந்த கிராஃபோட் வருடமொன்றுக்கு 12 மில்லியன் டொலர் வருமானம் பெறுகிறார். உலகில் வேறெந்த மொடலுக்கும் இவ்வளவு சம்பாத்தியம் கிடையாது.

கிராஃபோட், 1989ல் 'ரெவ்லோன்' நிறுவனத்தின் விளம்பரங்களுக்கு ஆக 20 நாட்கள் 'போஸ்' கொடுத்தார். இதற்காக இவருக்கு இந்த நிறுவனம் 600,000 டொலர் சம்பளமாகக் கொடுத்தது.

சின்டி, தன் தொழில் முறைகளைச் சற்று மாற்றி அமைத்தார். இதன்படி எம்.ரீ.வி. தொலைக் காட்சியில் 'ஹவுஸ் ஒப் ஸ்டைல்' என்ற நிகழ்ச்சியை அறிமுகம் செய்தார். உடலை எப்படி அம்சமாக வைத்திருப்பது என்பதற்கான முறைகளை விவரிக்கும் ஒளிப்பேழையைத் தயாரித்து சந்தையில் அறிமுகப் படுத்தியதும் ஒரே தடவையில் 20 இலட்சம் பிரதிகள் விற்பனையாகி விட்டனவாம்.




## 2வது பிறந்தநாள் வாழ்த்து

யாழ்/தாவடி-கொண்டாவிலைச் சேர்ந்த Germany Bad Vilbel இல் வதியும் சிவா-ரஜனி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கிஷான் தனது இரண்டாவது பிறந்த தினத்தினை 11.07.2000 அன்று தனது இல்லத்தில் கொண்டாடுகிறான். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்தி, மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார், தங்கை மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் யாவரும் இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.



செல்வன் சிவயோகநாதன் கிஷான்
11.07.2000